# விவேகவாணி




**விவேகானந்த கேந்திர மாத இதழ்**
**விவேகானந்தபுரம்,**
**கன்னியாகுமரி - 629 702**

## வணக்கம்! வாருங்கள்!!

**வெளியீட்டு அலுவலகம்**
**விவேகானந்த கேந்திரம், 5 - சிங்கராச்சாரி தெரு,**
**திருவல்லிக்கேணி, சென்னை - 600 005**

அன்புள்ள வாசக நேயர்களுக்கு, நமஸ்காரம்.

**விவேகவாணியின் நவம்பர் - 2011** இதழ் **விவேகானந்த கேந்திரத்தின்** நாடளாவிய நற்பணிகளைப் பற்றிய விரிவான அறிக்கையின் தமிழாக்கத்தைத் தாங்கி வருகின்றது.

**சுவாமி விவேகானந்தரின் 150-ம்** பிறந்த நாளைக் **கேந்திரம்** பெரிய அளவில் கொண்டாடுவதைக் குறிக்கும் வண்ணம் அவருடைய திருவுருவப்படம் அட்டையில் வெளியாகிறது.

தேசபக்தி, தெய்வ பக்தி, மனிதநேயம், புறச்சூழல் உணர்வு ஆகியவற்றின் மூலம் நாம் ஆற்றும் தொண்டே சுவாமி விவேகானந்தருக்கு நாம் செலுத்தும் மரியாதை ஆகும். இப்புனிதமான தருணத்தில் 1) இளைஞர் சக்தியைத் திரட்டி அதனைப் புனிதப்பணியில் ஈடுபடுத்துதல், 2) சமுதாயத்திலும் அறிவுத் துறையிலும் தலைவர்களிடையே விவேகானந்தரின் சிந்தனைகளைப் பரப்புதல், 3) கிராமப் பணிகளில் சிறப்பு கவனம், 4) மகளிர் பணிகளின் சிறப்பு கவனம், 5) ஜனஜாதிகளிடம் சிறப்பு கவனம் ஆகிய துறைகளில் கேந்திரம் ஆழமான பணி ஆற்ற உள்ளது. கேந்திரத்தின் சேவைக் கரங்களுக்கு வலுவூட்டி நாமும் உயர்வோமாக. அன்பர்கட்கு தீபாவளி வாழ்த்துக்கள்.

**இப்படிக்கு,**
**இறைவன் பணியில்,**
**விவேகவாணி**

**நவம்பர் - 2011**

**தொலைபேசி: (044) - 28440042/28442843**
**ஈமெயில்: vkpt@vkendra.org**

**தவம் 27** **நவம்பர் - 2011** **சேவை - 7**

**தனிப்பிரதி ரூ. 7/-, ஆண்டுச்சந்தா ரூ. 75/-, இரண்டாண்டுச் சந்தா ரூ. 140/-, மூன்றாண்டுச் சந்தா ரூ. 200/-, ஆயுட்சந்தா (10 ஆண்டுகள்) ரூ. 700/-, வெளிநாட்டு ஆண்டுச் சந்தா 20 டாலர்கள்.**

## வேதத்தின் உட்பொருள்
## பிரணவம் எனும் ஓம்காரம் [249]
# – பரா பரா –

லலிதா சஹஸ்ர நாமத்தின் 790–வது நாமமாக **பராபரா** என்பதற்கு புகழ்பெற்ற உரையாசிரியராகிய **பாஸ்கரராயர்** தரும் விளக்கமானது.

அவளே உயர்ந்தவள், அவளே உயர்ந்தவள் அல்லாதவள்.

அவளே முண்டக உபநிஷதம் கூறும் பரை, அபரை என்னும் இருவித ஆகாசம். இருவித ஞானம். லிங்கபுராணமும் கூறுகின்றது. **பரா, அபரா** என்ற இருவித ஞானமும் பெறப்பட வேண்டும். **அபரா** என்பது. ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வண வேதம். அது அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றி வைக்கின்றது. சிட்சை, கல்பம், இலக்கணம், நிருக்தம், சந்தஸ், ஜோதிஷம் அனைத்தும் அவளே.

**பரா** என்பது அழியாத ஒன்று; அக்ஷரமாகியது. கண்ணுக்கும் புலப்படாதது. மனத்துக்குப் பிடிபடாதது. குலம் அற்றது. ஜாதி அற்றது; மறைப்பு அற்றது. அதுவே ஆத்மா. அதுவே பரா ஞானம்; வேறு எதுவும் இல்லை.

ப்ரணவம் என்பது இருவிதமானது. **பராவும், அபராவும்.** சூதசம்ஹிதை கூறுகிறது. பிரணவம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு. **பரா**வாகவும், **அபரா**வாகவும் உள்ளது. பரா என்பது மிக உயர்ந்த பிரம்மன். பிரஜ்ஞை, ஆனந்தம் இவற்றால் குறிக்கப்படுவது. ஏனெனில் பரம பிரம்மன் இயல்பாகவே அதிகமாக (ப்ரா)த் துதிக்கப்படுவது (நவ). **அபர** ப்ரணவம் என்ற சொல் மிகத்தூய்மையானது. ஏனெனில் அதுவே பிரம்மனைத் துதிக்கக் காரணம் ஆவது. ஆகவே அது பிரணவம் எனப்படுகிறது. ஏனெனில் அதுவே (நாம்) பரப்பிரம்மத்தைப் பெற்று விடுவதற்குக் காரணமாகிறது.



# ஜாக்ரத (விழித்துக் கொள்க)

## இன்றைய காலத்தின் கட்டாயத் தேவை

சம்ஸ்கிருத இலக்கியத்தில் **ஜாக்ரத** என்பது மிகுந்த சக்தி வாய்ந்ததோர் சொல் ஆகும். விழிப்புணர்வு என்றும், எச்சரிக்கை உணர்வு என்றும் அதனை மொழி பெயர்க்கலாம். மிகப் பழங்கால ஆன்மீக நூல்களில் இச்சொல் வருவதை நாம் காணலாம். புகழ் வாய்ந்த கடோபநிஷதம் அறை கூவுகின்றது. உத்திஷ்டத ஜாக்ரத ப்ராப்ய வரான் நிபோதத! இதை சுவாமி விவேகானந்தர் ‘‘எழுமின்! விழிமின்!! குறிசாரும் வரை நில்லாது உழைமின்’’ என்று மொழி பெயர்த்தார். மூலத்திலும் சரி, மொழி பெயர்ப்பிலும் சரி இந்தச் சொற்களின் சேர்க்கை சற்று வினோதமாக இருக்கிறது. முதலில் **எழு** என்ற சொல் வருகிறது. பிறகே **விழி** என்ற சொல் வருகிறது. சாதாரணமாக **விழி** என்பது முதலிலும் **எழு** என்பது பிறகுமே வரவேண்டும். முதலில் விழித்துக் கொண்டு பிறகு தான் வேலை செய்ய எழுந்திருக்கிறோம். ஆனால் ஆன்மீக வாழ்க்கையிலோ வேறுவிதமாக நடக்கிறது. ஒருவர் எழுந்த பிறகே அவர் சரியான திசையில் முன்னேறிச் செல்ல வேண்டும் என்ற கருத்து நம் முன் வருகிறது. எந்தத் திசையில் போகவேண்டும் என்பதைத் தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியம் ஆகும். எழுந்து கொண்ட பிறகு நீங்கள் தவறான திசையில் சென்றால் லட்சியமே தோற்றுப் போய் விடும். சரியான திசையில் செல்ல நமக்குள் விழிப்புணர்வு பெறுதல் ஒரு முன் தேவை ஆகும். இந்த விழிப்புணர்வு தேவை என்று உபநிஷதம் வற்புறுத்துகிறது. விழிப்புணர்வைப் பெற குருநாதரின் திருவடியில் உட்கார்ந்து அவருடைய சொற்களைக் கேட்க வேண்டும். பொருத்தமான குருவிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு சரியான திசையில் செல்பவர் லட்சியத்தை அடைவது நிச்சயம். ஆனால் அவர் நம்பிக்கை இழந்து விடக்கூடாது, சோம்பேறி ஆகிவிடக்கூடாது. சாதனையின் கடினமான பாதையில் அவர் செல்ல வேண்டும். இப்பாதையை கடோபநிஷதம் கத்திமுனை (க்ஷுரஸ்யதாரா) என்று வருணிக்கிறது. ஆகவே விழிப்புணர்வு மிகவும் முக்கியம். சம்ஸ்கிருதத்தில் புகழ்வாய்ந்த பாடல்களின் தொகுப்பு ஒன்று கடைசியில் ‘‘ஆகவே விழித்தெழுங்கள் விழித்தெழுங்கள்’’ என்கிறது. ஆகவே விழிப்புடன் இருங்கள். எச்சரிக்கையுடன் இருங்கள். முன்னேறிச் செல்ல விரும்புபவர்களுக்கு எல்லோருக்கும் இது ஒரு முக்கியத் தேவை ஆகும். விழிப்புணர்வுடனும், எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். உலகப் பணியில் ஆகட்டும், ஆன்மீகப் பணியில் ஆகட்டும், விழிப்புணர்வு என்பது எங்கும் தேவையே. ஒரு பலவீனமான கணத்திலோ விழிப்புணர்வு இல்லாத போதோ தவறாக ஒரு அடி எடுத்து வைத்தாலும் நீங்கள் கீழே விழுந்து

விடுவீர்கள். திரும்ப எழ முடியாது. ஆகவே மனப்பூர்வமான தேடல் கொண்டவருக்கு உலக வெற்றியும் ஆன்மீக வெற்றியும் வேண்டும் என்றால் ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு அடியும் அவர் விழிப்புணர்வுடன் முன்னேற வேண்டும். இது தனி மனிதர்களுக்கு எவ்வாறு பொருந்துமோ அதைப்போலவே தேசங்களுக்கும் பொருந்தும்.

நாம் வாழும் காலக்கட்டம் எப்படி இருக்கிறது தெரியுமா! விழிப்புணர்வு தான் முற்றிலும் முடிவைத் தீர்மானிக்கும். முன் எப்பொழுதும் காணப்படாத வேகத்தில் உலகம் ஓடிக் கொண்டிருக்கிறது. வரலாற்றில் முன் எப்போதும் காணப்படாத வேகத்தையும், மாற்றத்தின் அளவையும் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சாதாரண மனிதனுக்கோ தன் கண் முன்னால் உண்மையில் என்ன தான் நடக்கிறது என்று புரிந்துகொள்ளவே முடியவில்லை. யாருக்கும் எக்காலத்திலும் மாற்றங்கள் ஏற்படும் வேகத்துடன் இணைந்து நடப்பது பெரிய சவால் ஆகும். நின்ற இடத்திலேயே நிற்பதற்குக் கூட நீங்கள் வெகு வேகமாக ஓடி ஆக வேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்கள். இப்படி மாறி வரும் காலக்கட்டத்தில் அசையாமல் நின்று கொண்டிருப்பது சாவுக்கு நிச்சயமாக அழைப்பு விடுப்பதைப் போன்றது ஆகும். சாதகர் முன்னேறிச் செல்ல வேண்டும். வேகமாக மாறி வரும் நிலைமைக்கேற்ப தானும் சேர்ந்து நடக்க வேண்டும். இதைச் செய்து முடிக்க சாதகர் வெகு வேகமாக ஓட வேண்டும். அதேசமயம் அவர் தன் கால்களை பூமியில் உறுதியாக பதித்துக் கொள்ளவும் வேண்டும்.

சாதகர் தன் வேரில் இருந்து வெட்டப்பட்டு அன்னியமாகி விடக்கூடாது. ஏனென்றால் வேர் தான் பலம், அனைத்திற்கும் ஊட்டம், அனைத்திற்கும் தோற்றுவாய் ஆகும். பார்ப்பதற்கு முரண்படுவதுபோல தோன்றும் இவற்றைச் செய்து முடிப்பது எப்படி? இந்தச் சவாலைத் தான் இன்று தனி நபர்களும், தேசங்களும் எதிர்கொள்கின்றன. பாரதமோ மிகத்தொன்மையான தேசம். ஆழமான வேர் கொண்ட பண்பாட்டையும், நிரந்தரமான நற்குண மதிப்புக்களையும் உடையது. பாரத நாட்டுக்கு இந்தக் கேள்வி மிகவும் முக்கியமானது ஆகும். ஆனால் புதிதாய் பிறந்த பல தேசங்களிடம் இக்கேள்விக்குப் பதில் இல்லை. நம்மிடம் பதில் இருக்கிறது. சுவாமி ரங்கநாதானந்தர் கூறியுள்ளார். நாம் எதிர்கொள்ளும் ஒவ்வொரு நோயினுக்கும் நம்மிடம் மருந்து இருக்கிறது. ஆனால் சாதகர் விழிப்புணர்வுடன், எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் சரி செய்ய முடியாத தவறுகளை இழைத்து விடுவோம்.

## II

பாரத நாட்டில் எல்லா நோய்களுக்கும் மருந்து இருப்பது ஏதோ தற்செயலாக நடந்த சம்பவம் இல்லை. மிகப்பெரிய எதிர்ப்புக்களோடு தொடர்ந்து போராடி அரிதில் நாம் அடிப்படை பாரம்பரியத்தைப் பெற்றுள்ளோம். உலக நாகரீகங்களுள் உயிர்ப்பிழைத்து வாழும் மிகப் பழைய நாகரீகம் நம்முடையது

தான். வரலாறு கொண்டு வந்து நிறுத்திய ஒவ்வொரு நோயையும், தீமையையும் நாம் அனுபவித்து இருக்கிறோம். ஆனால் தன்னுடைய தனிச் சிறப்புள்ள, முதிர்ச்சியுடைய, ஞானத்தின் மூலம் பாரதம் பொருத்தமான தீர்வுகளைக் கண்டிருக்கிறது, பயன்படுத்தியும் இருக்கிறது. சீனநாடும் பாரதம் போலவே தொன்மையான நாகரீகம் உடையது தான். சீன நாட்டைப் போல் அன்றி பாரதம் தன் ஆத்மாவைக் காப்பாற்றி வைத்துக் கொண்டிருக்கிறது. காலத்தின் பேராபத்துக்களிலும் பாரதம் தன் நற்குண அடையாளத்தைப் பாதுகாத்து வைத்துக் கொண்டிருக்கிறது. இக்காரணத்தினால் தான் அமெரிக்க குடியரசுத் தலைவர் பாராக் ஓபாமா அண்மையில் பாரதம் வந்த போது நம் நாடாளுமன்றத்தில் பேசும் போது கூறினார். பாரதம் என்பது ஒரு நாடு மட்டுமல்ல. இது ஒரு நாகரீகமும் ஆகும். அவருடைய சொற்கள் குறிப்பிடத் தகுந்தவை. ***“நம் இரு நாடுகளிலும் எதிர்காலம் இணைந்திருக்கிறது என்பதை நான் நம்புகிறேன். இதற்கு ஆதாரம் பாரத நாட்டின் போற்றத்தகுந்த பழங்காலத்தை நான் மதிக்கிறேன். பாரத நாகரீகம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உலகத்தை உருவாக்கி வந்திருக்கிறது. பாரத மக்கள் மனித உடலின் நுணுக்கங்களைப் பற்றிய புதிர்களை அவிழ்த்தனர். நம் பிரபஞ்சத்தின் பேரளவு பற்றிய புதிர்களை அவிழ்த்தனர். பாரதம் நம் மனங்களை மட்டுமா திறந்தது? ஒழுக்க ரீதியான நம் கனவுகளையும் பாரதம் விரிவாக்கியது.”***

ஆகவே பாரதத்திடம் தன்னுடைய சொந்த நோய்களுக்கு மட்டும் தான் கைவசம் மருந்து இருக்கிறது என்பதல்ல. உலகத்தைத் துன்புறுத்தும் நோய்களுக்கும் பாரதத்திடம் மருந்து உண்டு. நம் அரசியல் தலைவர்களில் பலரும் நிர்வாகிகளில் பலரும், பாரதத்திடம் இருக்கும் நம் மகத்தான செல்வத்தைப் பற்றி முற்றிலும் அறியாதவர்களாக இருக்கிறார்கள். ஆயிரம் ஆண்டு அடிமைத்தனத்திற்கு பிறகும் பாரதத்திடம் இப்பொக்கிஷம் கைவசம் உள்ளது. இதை உணர்ந்து, புதுமைப்படுத்தி, மனப்பூர்வமாக நம் தேசீய வாழ்வில் அதைப் பயன்படுத்த வேண்டும். நோய்களைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். இதுதான் பாரதம் செய்ய வேண்டிய முதல் வேலை. எச்சரிக்கை உணர்வு, **ஜாக்ரத,** என்பது இப்பின்னணியில் பார்த்தால் மிகவும் பொருத்தமான ஒன்று ஆகும்.

பாரதம் என்பது ஒரு வெறும் தேசம் அல்ல, ஒரு நாகரீகம் என்கிறோம். ஒரு கேள்வி எழுகிறது. எது அந்த நாகரீகம்? சுவாமி விவேகானந்தர் திரும்பத்திரும்ப நமக்கு நினைவூட்டுகின்றார். ஆன்மீகம் என்ற மையக் கருத்தைச் சுற்றித் தான் பாரத நாகரீகமும், பண்பாடும் வளர்ந்துள்ளன. தன் தேசீய ஆத்மாவை, ஆன்மீகத்தை தன் வாழ்வின் மூலம் வெளிப்படுத்துவதே பாரதத்தின் லட்சியப் பணி. ஒவ்வொரு களத்திலும், துறையிலும் அதை வெளிப்படுத்துவதே பாரதத்தின் லட்சியப் பணி. ஸ்ரீ அரவிந்தர் கூறிய சொற்கள் புகழ் பெற்றவை. ***“திடப்பொருளானது ஆன்மாவை வெளிப்படுத்தும். அகத்தில் திகழும் ஆன்மீக***

***சத்தியத்தைப் பாரதத்தின் புறவாழ்க்கை உண்மையாக பிரதிபலிக்க வேண்டும். அனைத்தையும் உள்ளடக்கிய இந்த ஆன்மீகக் கருத்து பாரதத்தின் பொருளாதாரம், அரசியல், கலை, பண்பாடு ஆகிய எல்லாத் துறைகளையும், தெய்வீக உற்சாகமூட்டி உருவாக்க வேண்டும்.''***

நம் சுதந்திர இயக்கத்தின் தலைவர்கள் சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ அரவிந்தர் போன்ற ஆன்மீகப் பண்பாட்டு நட்சத்திரங்கள், திலகர், காந்தி போன்ற அரசியல் தலைவர்கள் திரும்பத்திரும்ப அதாவது பாரதத்தின் சுதந்திரம் என்பது அரசியலில் மக்கள் ஆட்சியை அமைப்பதோடு தீர்ந்து போகிற விஷயம் அல்ல. அரசியல் சமத்துவமும், சமூக நியாயம், அடிப்படைத் தத்துவமான மனிதன் என்பவன் தெய்வீகத்தின் சிறு பொறி; குடிமக்களிடையே உயர்வு, தாழ்வு கிடையாது என்பதன் அடிப்படையில் விளங்கவேண்டும். பாரத மக்களாட்சி மனிதனின் கண்ணியத்தை மட்டுமல்ல மனிதனின் விழிப்புணர்வையும், அடையாளம் காணவேண்டும். அதன் அடிப்படையில் அமைய வேண்டும். இந்த அடிப்படைத் தத்துவத்தை சுதந்திர பாரதம் தனக்கு முன்னால் வைத்திருக்க வேண்டும். சுதந்திரத்தை உண்மையாக்க பாரதம் எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் மனிதனின் தெய்வீகத் தன்மையே அடிப்படை அம்சமாக இருக்க வேண்டும். ஆனால் அந்தோ! அப்படி நடக்கவில்லை. இக்காரணத்தால் இனி நாம் காண்பதென்ன? நம் அரசியல் சட்டம் ஞானம் உடையது. விரிவானது. ஆனால் நம் தலைவர்களோ, ஊழல் பேர் வழிகள். நேர்மை அற்ற அரசியல்வாதிகள். சுயநல முதலாளிகள். நம் தகவல் ஊடகத்தினர் நேர்மை அற்றவர்கள். இதற்கு ஒரே தீர்வு நம் தேசத்தின் ஆன்மீகப் பிரஞ்ஜையை உறங்கிக் கிடப்பதை தட்டி எழுப்புவது தான். இக்காரணத்தால் **ஜாக்ரத** (விழித்துக் கொள்ளுங்கள்) என்ற அறைகூவல் பொருத்தமானது. முற்றிலும் தேவையானது. நம் தாய்நாடு ஆகிய பாரதம் தேவதாத்மா ஹிமாலயத்தில் இருந்து, தெய்வீக இமயமலையில் இருந்து, புனித கன்னியாகுமரி வரை நீண்டு கிடக்கிறது. இதை ஸ்ரீ அரவிந்தர் ஆதிசக்தியின் புனித உடல் என்று வருணித்தார். இதன் ஒவ்வொரு அங்குலம் மண்ணும், ஒவ்வொரு சொட்டு நீரும் புனிதமானது என்று நம் மூதாதையர்கள் கருதினார்கள். நாடு முழுவதும் புனிதத் திருத்தலங்கள் பரவிக் கிடக்கின்றன. நாட்டின் ஒரு மூலையில் இருந்து இன்னொரு மூலைக்கு புனித யாத்ரீகள் இடைவிடாமல் பயணம் செய்கின்றனர். இந்தப் பூமியின் நறுமணமே புனிதமானதாக கருதப்பட்டது. (புண்ணிய கந்தம்) இதன் புனித நதிகளில் ஒரேயொரு முழுக்குப் போட்டாலும் பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டுவிடும் என்று நாம் நம்புகிறோம். நம் அன்னையாக இயற்கை முழுவதையும் நாம் வழிபடுகிறோம். அண்மைக்காலத்தில் கவனக்குறைவுள்ள தொழில் நுணுக்க தொழில் ஆக்கிரமிப்பு மேற்கு நாடுகளில் இருந்து வந்து நம்மைப் பிடிக்கும் வரை நாம் இயற்கையை மாசுபடுத்தவே இல்லை. அழிக்கவே இல்லை. மேற்கு நாட்டினர் மிகப்பெரிய பிரச்சினைகளை தட்ப வெப்ப நிலைக்கும் புறச்சூழலுக்கும் உண்டாக்கி விட்டனர். அப்பிரச்சினைகளைத் தீர்க்க அவர்களாலேயே முடியவில்லை. அவர்கள் பிழைத்து வாழவே வழி தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இது பரிதாபகரமாக இருக்கிறது. அவர்கள் பூமிதினம் என்று ஒரு நாளை கொண்டாடச் சொல்கிறார்கள். ஆபத்துக்குள்ளான நம் கிரகத்தை அந்த நாளில் நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டுமாம். நம் நாட்டில் ஒவ்வொரு நாளும் **பூமிதினம்** தான் என்று அறிவிக்கும் ஞானம் நம் தலைவர்களுக்கே இல்லாமல் போனது நம் துரதிருஷ்டம் தான். சோகம் தான்.

பூமி தான் நம் அன்புத் தாய். யுகங்களுக்கு முந்தியே வேதங்கள் அறைகூவின. **மாதா பூமி புத்ரோSஹம் ப்ருதிவ்யா:** பூமியே எங்கள் அன்னை. நாம் அவளுடைய குழந்தைகள். இந்த அன்புப் பிடிப்பு தான், பற்றுதான் நம் பூமியைக் காப்பாற்ற, ரட்சிக்கத் தேவையான மனநிலையை உண்டாக்கித் தரும். மேலும் மேலும் நுணுக்கமான தொழில் அறிவோ மேலும் மேலும் நெருக்கடிகளையும், ஆபத்துக்களையும் தான் கொண்டு வரும். இந்த நெருக்கடியான நிலையில் பாரதம் முன் வரவேண்டும். தன்னுடைய பழமையான, என்றும் புதிய சனாதன ஞானத்தை முன் வைத்து உலகத்தை சரியான திசையில் அழைத்துச் செல்ல வேண்டும். இதைச் செய்து முடிக்க வேண்டுமானால் நாம் விழிப்புணர்வுடன், எச்சரிக்கையுடன் இருந்தால் தான் நடக்கும். நம் உயிரைக் காக்கும் மந்திரம் **விழித்திரு** என்ற அழைப்பு தான்.

## III

மிகக் கவனமும், நேர்மையும் கொண்டு நாம் அணுக வேண்டிய இன்னொரு முக்கியமான துறையும் உள்ளது. அதுதான் தொழில் நுணுக்கம். தொழில் நுணுக்கம் வேகமாக முன்னேறுகிறது. அது மனிதனின் சாமர்த்தியத்திற்கு ஒரு பாராட்டு ஆகும். ஆனால் தொழில் நுணுக்கத்திற்கோ நல்லது, கெட்டது தெரியாது. தொழில் நுணுக்கத்தைக் கையாளும் மனிதர்களுக்கோ நல்லது, கெட்டது தெரியும். ஆகவே வளர்ந்து வரும் நுணுக்கமான தொழில் அறிவு மனிதனின் நன்மைக்கு மட்டுமே பயன்படவேண்டும். இது முக்கியம் ஆகும். பண்பாட்டையும், தொழில் நுணுக்கத்தையும் ஒருபோதும் பிரித்துப் பார்க்க முடியாது. பாரத நாட்டு புதிய தொழில் நுணுக்கத்தைக் கண்டுபிடிக்கும் போதும், இரவல் வாங்கி பயன்படுத்தும் போதும் ஒரு விஷயத்தை நாம் மனத்தில் நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். அது நம்முடைய புறச்சூழலுக்கும், இயற்கை வளத்துக்கும், மனித வளத்துக்கும் பொருத்தமானதாக இருக்க வேண்டும். நம் பண்பாட்டுப் பாரம்பரியத்திற்கும் நல்லது, கெட்டது என்ற மதிப்பீட்டுக்கும் இசைந்து வரவேண்டும். நவீன நாகரீகம் என்ற பைத்தியம் பிடித்து நாம் குருட்டுத்தனமாக மேற்கத்தைய முன்மாதிரிகளைப் பின்பற்றினால் விளைவுகள் எதிர்மறையாக இருக்கும். பேராபத்தில் போய் முடியும். மக்களின் மீது எந்தத் தொழில் நுணுக்கத்தைச் சுமத்துவது என்ற பொறுப்பை விஞ்ஞானிகளும், அரசியல்வாதிகளும் கைப்பற்றிக் கொள்ளக் கூடாது. தொழில் நுணுக்கத்தையும் கவனித்து எச்சரிக்கை செய்பவர் வேண்டும் என்ற தேவை எழுந்துள்ளது. அவர்கள் ஞானமும், தூரதிருஷ்டமும் தேசத்தின்

நீண்டகால நன்மையும் கருதுபவர்களாக இருக்க வேண்டும். பாரதத்திற்கு எந்தத் தொழில் நுணுக்கம் பொருத்தமானது என்பதை அவர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். அண்மையில் ஜப்பான் நாட்டில் ஒரு விபத்து நடந்தது. அதனால் நாம் எச்சரிக்கையுடன் இருப்பது மிக முக்கியம் ஆகும். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு தகவல் நினைவில்கொள்ளத் தக்கது. முன்னேறிய நாடுகளாகிய ஜெர்மனி போன்றவை தங்கள் அணு உலைகளை மூடி விடுவதென்று திட்டவட்டமான முடிவெடுத்துள்ளனர். புதியவற்றை அவர்கள் திறக்கப் போவதும் இல்லை. தங்களுடைய எரிசக்தித் தேவைகளைக் குறைத்துக் கொள்ள அவர்கள் முடிவு எடுத்துள்ளனர். புதுப்பிக்கக்கூடிய மாற்று எரிசக்திகளை அவர்கள் தேடுகிறார்கள். நாம் பெரிய அளவில் அணுசக்தியை உற்பத்தி செய்ய வேண்டுமா, நமக்குக் கிடைக்கும் தீங்கற்ற பிற வளங்களைப் பயன்படுத்த வேண்டுமா? தொன்மைக்காலத்தில் இருந்தே பாரதப் பண்பாட்டில் ஒரு கருத்து இருந்து வந்திருக்கிறது. சூரியன் தான் உடல்சக்தி, அறிவுச் சக்தி, ஆன்மீகச் சக்தி அனைத்து சக்திகளுக்கும் ஊற்றுக்கண்ணாக இருக்கிறார். சூரிய சக்தி அள்ள அள்ளக் குறையாதது. எல்லாக் காலங்களிலும் கிடைப்பது. சூரிய சக்தியைப் பயன்படுத்துவது என்ற சரியான கொள்கை முடிவை நாம் எடுக்க வேண்டும். பிற இயற்கை வளங்களான காற்றுச் சக்தியையும் பயன்படுத்தலாம். வியாபார ரீதியில் இவற்றைப் பயன்படுத்தினால் பெருமளவுக்கு நம் எரிசக்தி பிரச்சினையை குறைக்க முடியும். அதுபோல நதிகளை ஒன்றிணைக்கும் பிரச்சினையும் எழுகிறது. இதை நாம் படைப்புத் திறனுடனும், உறுதியுடனும் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும். அதன்மூலம் தண்ணீர்ப் பஞ்சம், வெள்ளத்தால் ஏற்படும் அழிவு முதலிய பிரச்சினைகளை நாம் தீர்க்க முடியும். பெரும்பாலும் விவசாய மக்களைக் கொண்ட நம் நாட்டில் சூரிய சக்தியும் நதிகளின் இணைப்பும் மிகுந்த நன்மையைத் தரும். இதுவரை இவ்விரு அம்சங்களை நாம் புறக்கணித்தோம். நமக்குத் தேவை கற்பனை வளம் மிகுந்த தலைமை. செயல் ஊக்கம், செயல் வீரம். மேலும் இத்தகைய கொள்கைகள் நம் தேசத்திற்கு புத்துணர்வூட்டி ஒளி மிகுந்த எதிர்காலத்திற்கு என உழைக்க நம்மைத் தூண்டும்.

இன்னொரு பெரிய துறையும் நம் கவனத்திற்குரியது. பாரதம் மட்டுமின்றி உலகம் முழுவதுமே தேச ஒற்றுமைக்கும், பிரிவினைச் சக்திகளுக்கும் இடையில் ஏற்படும் மோதல்களைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டும். சிறுபான்மையினர் தங்கள் உரிமைகளுக்காக உரத்தகுரலில் போராடுகின்றனர். இது தேச ஒற்றுமைக்கும், பண்பாட்டு அடையாளத்திற்கும் ஆபத்தை உண்டாக்குகிறது. இக்கேள்வி உலகம் முழுவதும் சூடாக விவாதிக்கப்படுகிறது. ஏனென்றால் இதனால் பெரும்பான்மையினருக்கும், சிறுபான்மையினருக்கும் இடையில் வன்முறை போராட்டங்கள் வெடித்து எழுகின்றன. வெவ்வேறு சாதிகளுக்கு இடையிலும், சமுதாயங்களுக்கு இடையிலும், இனங்களுக்கு இடையிலும், மோதல்கள் ஏற்படுகின்றன. மேற்கு நாடுகளின் செக்குலரிஸம் என்னும் மதச்சார்பின்மை இந்த எரிச்சலூட்டும் பிரச்சினைக்குத் தீர்வைத் தர

முடியவில்லை. இதனால் உலக அமைதிக்கே பெரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. 'மல்ட்டி கல்ச்சரலிசம்' என்னும் பல பண்பாட்டுத் தன்மை இப்பிரச்சினைக்கு வழங்கப்படும் தீர்வுகளில் ஒன்று ஆகும். அதாவது பல்வேறு பண்பாட்டு அடையாளங்களை உடைய மக்கள் அமைதியுடனும், இசைவுடனும் இருந்து வாழ வேண்டும். ஆனால் மிகப்பெரும் எண்ணிக்கையில் வெளிநாட்டவர் நம் நாட்டிற்குள் புகும்போதும், உள்ளூர் மக்கள் தொகை எண்ணிக்கையில் சுருங்கும் போதும் மதச்சார்பின்மை என்பது உள்ளூரில் தேசீய மக்கள்தொகை புறந்தள்ளப்படுவதில் போய் முடியும். வெளியில் இருந்து வந்தவர்கள் கை ஓங்கி போய்விடும். பாரதம் மேலும் மேலும் தொடர்ந்து அதிக அளவில் இப்பிரச்சினையை சந்தித்து வருகிறது. வேகமாக வளரும் சிறுபான்மைச் சமுதாயங்கள் மேலும் மேலும் உரிமைகள் வேண்டும் என்ற அவர்களுடைய கூக்குரல்கள் பெரும்பான்மையான அரசியல் கட்சிகள் நடத்தும் **வாக்கு வங்கி அரசியல்** இவையெல்லாம் சேர்ந்து பெரும்பான்மைச் சமுதாயத்தின் மனத்தை தீவிரமாகக் கலவரப்படுத்துகின்றன. 1947-ல் நடந்த பாரத தேசப்பிரிவினையின் துக்க நினைவு இன்னும் அவர்களைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது. பாரதத்தின் பல பகுதிகளில் பெரும்பான்மைச் சமுதாயம் எண்ணிக்கையில் பெருமளவில் குறைந்து போய் அவர்களுடைய நிலத்தை வெளிநாட்டு நில, பண ஆக்கிரமிப்புக் கும்பல் பறித்து வருகிறது. நம் நாட்டில் இருக்கும் அவர்களுடைய தரகர்களும் இதற்குத் துணை போகிறார்கள். மதச் சார்பின்மை, பல்பண்பாட்டுத் தத்துவம், நவீனத்துவம் போன்ற கோஷங்கள் பெரும்பான்மை மக்களை ஏமாற்றுவதற்காகப் போடப்படும் கண்ணிப் பொறிகளே. சிறுபான்மை சமுதாயங்கள் என்றழைக்கப்படுபவர்களின் அரசியல், பொருளாதார, பலம் வளர்ந்து வருகிறது. ஹிந்து சமுதாயம் முழுவதும் விழித்தெழுந்து, வளரும் இந்த ஆபத்தை எதிர்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் எதிர்காலம் அவர்களுக்கு மிகுந்த நஷ்டத்தை உண்டாக்கும். புகழ்பெற்ற பழமொழியில் வருவது போல் என்றும் விழித்து இருப்பதே சுதந்திரத்திற்கு நாம் கொடுக்க வேண்டிய விலை ஆகும். ஆகவே விழித்திருந்து எச்சரிக்கையுடன் இருப்பது இக்கால கட்டத்திற்கு மிகவும் பொருத்தமானது ஆகும். பாரதத்தின் தேசீயவாதிகளுக்கு ஏற்கெனவே சற்று காலம் கடந்து தான் போய் விட்டது.

## IV

பாரதம் நவீனத்துவத்தின் ஆக்கிரமிப்பைச் சமாளிக்க தனிச்சிறப்புள்ள வழி ஒன்றை கைக்கொள்கிறது. பாரதம் நவீனத்துவத்தையோ, நவீனமயமாவதையோ மறுத்து ஒதுக்குவது இல்லை. அதே சமயம் பாரதம் அதைக் கண்டு திகைத்து அடங்கி விடுவதும் இல்லை. பாரதத்திற்கே உரிய முறையில் நவீனத்துவத்தையும், மரபு பாரம்பரியத்தையும் ஒன்றிணைக்க நாம் கற்று இருக்கிறோம். மரபில் சாஸ்வதமாக உள்ளது எது? மாற்ற முடியாதது எது? நவீனத்துவத்தில் பொருத்தமானது எது என்று கண்டு உறிஞ்சிக் கொண்டு ஒன்றிணைத்துக் கொள்ளும் போக்கை பாரதம் மிகப்பழங்காலத்தில் இருந்து

பின்பற்றி வந்திருக்கிறது. இதைச் செய்து முடிக்க பாரதம் மூலாதாரமான நற்குணங்களை மாறி வரும் சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப விளக்கம் அளித்து வருகிறது. சமுதாயம் மாறிக் கொண்டே இருக்கிறது. வளர்ந்து கொண்டே இருக்கிறது. முன்னேறிக் கொண்டே இருக்கிறது. அதற்குச் சில சமாளிப்புக்கள், சரிக்கட்டுதல்கள் தேவை. ஒழுக்கம் நீதிநெறி ஆகிய குணங்களை மறு பரிசீலனை செய்ய வேண்டும். ஆனால் ஆன்மீகக் குண மதிப்பீடுகளோ நிரந்தரமானவை, சனாதனமானவை. காலங்கள் மாறும்போது சனாதன தருமத்தை யுகதருமத்தின் அடிப்படையில் விளக்கி புரிந்து கொள்ள வேண்டும். நம் நாட்டில் மட்டும் தான், நம் பண்பாட்டில் மட்டும் தான் இத்தகைய விளக்கங்கள் அனுமதிக்கப்படுகின்றன. சுவாமி ரங்கநாதானந்தர் கூறியுள்ளார். நிரந்தர குணமதிப்பீடுகள் மாறிவரும் சமுதாயத் தேவைகளுக்கேற்ப ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று அவர் அழகுறக் கூறியுள்ளார். பாரதத்தின் பண்பாடு உயிர்ச்சக்தி உடையது. அறுபடாமல் தொடர்ந்து வருவது. இதற்குக் காரணம் சனாதன தருமமும், யுகதருமமும் ஒற்றுமையுடன் இணைந்து வேலை செய்வது தான். நிலைமையின் தேவைக்கேற்ப திரும்பத்திரும்ப தைரியமாக உயிர்த்துடிப்புள்ள முறையில் இவற்றுக்கு விளக்கம் தரும் மகான்கள் தோன்றியுள்ளார்கள். இத்தகைய தூரதிருஷ்டியுள்ள, சுயநலமற்ற, ஆன்மீகத்தில் முதிர்ந்த, மனிதர்களுக்கு ரிஷிகள் என்று பெயர். நெருக்கடி நேரங்களில் அவதாரங்களும் வந்து அதிரடி மாற்றங்களை சமுதாயத்தில் ஏற்படுத்தி உள்ளன. சனாதன தருமத்திற்குப் புத்துயிர் தந்துள்ளன. அம்மனிதர்களுள் சமுதாயத்திற்குச் சட்டம் போடுபவர்கள், யுகபுருஷர்கள் இருந்து இருக்கிறார்கள். நம்முடைய தேசீய வாழ்வில் ஆன்மீகம் இணைந்துள்ள தனிச்சிறப்பே இதுதான். இத்தகைய ரிஷிகள் வந்து யுகதருமம் என்ற கொள்கையின் அடிப்படையில் நவீன காலத்திற்கு வேண்டிய மாற்றங்களை சட்டங்களாக இயற்றுவார்கள். தற்போதைய தலைமுறையில் அவர்கள் வரவேண்டும் என்று சுவாமி விவேகானந்தர் நமக்கு நினைவூட்டி உள்ளார்.

பாரதம் என்பது ஒரு சிறிய உலகமே ஆகும். உலகத்தில் இன்று புரட்சிகரமான மாற்றங்கள் வந்து கொண்டிருக்கின்றன. துரதிருஷ்டவசமாக அதிகாரத்தில் இருப்பவர்கள் ஆரோக்கியமான தேவையான மாற்றங்களைக் கொண்டு வர முடிந்தவர்களிடம் தீர்க்க தரிசனம் இல்லை. ஞானம் இல்லை. வெவ்வேறு சக்திகள் கொண்டு வரும் மாற்றங்களின் நன்மை தீமைகளை எடைபோட அவர்களால் முடியவில்லை. பொருளாதார வளர்ச்சி முன்னேற்றம் வேண்டும் என்று எல்லோரும் தான் சொல்லுகிறார்கள். ஆனால் தற்போதைய வளர்ச்சித் திட்டங்கள் பொருளாதாரத்துடன் நின்று விடுகின்றன. உலகாயத அளவுகோல்களுடன் இந்த வளர்ச்சித் திட்டங்கள் நின்று விடுகின்றன. இத்தலைவர்களின் பார்வையில் வளர்ச்சி என்பதற்கு நல்லொழுக்கம், ஆன்மீகம் இவற்றிலும் வளர்ச்சி வேண்டவே வேண்டாம். இன்று நாம் காணும் வளர்ச்சி ஒருதலைப்பட்சமானது. சமச்சீர் அற்றது. இதனால் உலகத்தின் மக்கள்தொகையில் பெரும்பான்மையினர் வறுமையிலும், துன்பத்திலும்

வாழ்கின்றனர். மிகச் சிறு எண்ணிக்கையில் ஆன மக்கள் மிகப்பெரிய செல்வந்தர்கள் ஆகிவிடுகின்னர். அவர்கள் யாருக்கும் பதில் சொல்ல வேண்டாம். இப்போக்கில், இதனால் பெருமளவில் சமுதாயக் கொந்தளிப்பு ஏற்படும். உரிய நேரத்தில் இதைச் சரிசெய்ய வேண்டும். பாரதத்திலும் இப்பிரச்சினை உண்டு. இந்த சமச்சீரற்ற வளர்ச்சி நம் கண்ணுக்கு எங்கும் தெரிகிறது. பெருமளவில் நகர்ப்புறமயமாதலால் கிராமத்தில் வளர்ச்சி குன்றிவிட்டது. பணக்கார நாடுகள் இன்னும் செல்வந்தர்கள் ஆகி அவர்களைப் பார்த்து பிறர் பொறாமைப்படுகின்றனர். ஏழைகளோ துன்புற்று இன்னும் ஏழைகள் ஆகின்றனர். பாரதத்தில் எப்போதும் வளர்ச்சி என்பதை சமச்சீருடன் நாம் நோக்கி வந்தோம். வனவாசிகள், கிராம மக்கள், சிறு நகரவாசிகள், பெரு நகரவாசிகள் ஆகியோரின் நலன்கள் ஒத்திசைவுடன் சரிக்கட்டப்பட்டன. எல்லோருடைய நன்மையும் கருத்தில் கொள்ளப்பட்டது. தேசம் செல்வச் செழிப்புற்றது. சமாளிக்க முடியாத கொந்தளிப்புக்கள் இங்கே இருந்தது இல்லை. பிரிட்டீஷ் அரசு அதிகாரம் இந்தச் சமச்சீரைக் கெடுத்தது. துரதிருஷ்டவசமாக சுதந்திர பாரதத்தின் தலைவர்கள் காலனி ஆதிக்கக் கொள்கைகளை அதிகம் மாற்றவில்லை. அதன் சமுதாயம், பொருளாதார, அரசியல், அணுகுமுறைகளை மாற்றவில்லை. இதன் விளைவாக மாவோயிஸ்டுகள், நக்ஸலைட்கள் போன்ற பயங்கரவாத அமைப்புக்கள் நம் தேச ஒற்றுமையின் கட்டமைப்பையே உடைத்துப் போடுவதாக பயமுறுத்துகின்றன. நகர்ப்புற மக்கள் எண்ணுவது போல் மலைவாசிகளும்,வனவாசிகளும் பண்பாடு அற்றவர்களோ, உற்பத்தித் திறன் அற்றவர்களோ அல்ல. இதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அம்மக்களின் அடையாளத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களுடைய வளர்ச்சியை உறுதிசெய்ய வேண்டும். அதேசமயம் அவர்களுடைய பண்பாட்டைச் சிதைக்கக் கூடாது. நவீன வசதிகள் அவர்களுக்கும் கிடைக்க உதவிசெய்ய வேண்டும்.

புனித மந்திரமான காயத்ரீ மந்திரத்தை வேத ரிஷி விசுவாமித்திரர் தந்துள்ளார். அம்மந்திரத்தை கண்ணை மூடிக் கொண்டு ஒப்பிக்கக் கூடாது. அதைப்புரிந்து கொண்டு அதன் எல்லாப் பக்கங்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அது தரும் சக்தியையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அடர்ந்த காடுகளில் வாழ்ந்த புகழ்பெற்ற ரிஷிகளின் ஆசிரமங்களில் நம்முடைய மகத்தான பண்பாடு தோன்றியது என்பதை மறந்து விடக்கூடாது. சாந்தியும், அமைதியும் கொண்ட வனநிழலில் அழகிய சூழலில் நம் உபநிஷதங்கள் பிறந்தன. அச்சூழலை நாம் தேச விரோத வன்முறைச் சக்திகளின் இருப்பிடமாகிவிட அனுமதிக்கக் கூடாது.

நம்முடைய தேசம் பலமானதாக, ஆரோக்கியமானதாக, பொருட்செல்வத்திலும், அருட்செல்வத்திலும் முன்னேறுவதாக இருக்க வேண்டும். அதற்கு வேறுபாடுகளை நாம் மதிக்க வேண்டும், ஊக்குவிக்க வேண்டும். நம் தேசீய மக்களின் பல்வேறு பிரிவுகளிடையே காணப்படும் நாசூக்கான சமச்சீரை

காப்பாற்றி வைக்க வேண்டும். இதற்கு நாம் நம் மரபு சார்ந்த அணுகுமுறையை நல்லமுறையில் ஆழ்ந்து புரிந்து கொள்ள வேண்டும். அன்புடன் புரிந்து கொள்ள வேண்டும். நம் மரபு அனைத்தையும் உள்ளடக்குவது ஒன்றுக்கொன்று மரியாதை செய்வது. நவீன மேற்கத்தைய நாகரீகம் என்ற பெயரில் உலவுகின்ற போக்கால் ஒருங்கிணைந்த ஒத்துழைப்பைச் சேர்ந்த அணுகுமுறையைப் புரிந்து கொள்ளவே முடியாது.

மகத்தான பிரச்சினைகளில் நாம் அமிழ்ந்து போய் சில கேள்விகளைக் கேட்கலாம். இவற்றில் என் பங்கு என்ன? இப்பிரச்சினைகள் மிகப் பெரியவை. உலகளாவியவை. நானோ சின்னஞ்சிறிய தனி நபர். நான் என்ன செய்ய முடியும்? இந்தக் கேள்வி இயற்கையானது தான். ***ஆனால் நம் பெரிய மாற்றங்கள் கூட தனிநபரிடம் இருந்தே துவங்குகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். எளிய முதல் அடியை எடுத்து வைத்தால் மற்ற அடிகள் தொடரும். ஒரு விளக்கு பிற விளக்குகளை ஏற்றும்; தீபவரிசையை உண்டாக்கும். மாற்றம் என்பது தன்னம்பிக்கை உள்ள சமூகப் பொறுப்புள்ள தேசத்தைப் பற்றிய பெருமித உணர்வு கொண்ட தனிநபரிடம் இருந்து தொடங்கும். இன்றைய உலகத்தில் மிகவும் தேவைப்படும் மாற்றத்தைப் பாரதம் துவக்கி வைக்க வேண்டுமானால் தேச பக்தி உள்ள ஒவ்வொருவருக்கும் பாரதத்தின் பண்பாட்டு நற்குணங்களை தனக்குள் நிறைத்துக் கொண்டு பொறுப்பேற்று கொள்ள வேண்டும்.*** சுவாமி விவேகானந்தர் சொன்னபடி லட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும் இத்திசையில் முன் வருவார்கள். அப்போது நடக்க முடியாத காரியமும் நிச்சயம் நடந்தேறும். **''எழுமின் விழிமின் குறிசாரும் வரை நில்லாது உழைமின்''** என்ற அழைப்பை நாம் ஒவ்வொருவரும் கேட்போம். விழிப்புணர்வு நம் மந்திரச் சொல் ஆகட்டும். மனித பரிணாமத்தின் இந்த நெருக்கடியான கட்டத்தில் அம்மந்திரத்தைக் கேட்போம்.

கட்டுரையை நிறைவு செய்யும் முன் நாம் ஒவ்வொருவரிடமும் சுவாமி விவேகானந்தர் கேட்கும் புனிதக் கேள்வியை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். உலகம் துன்பத் தீயில் பற்றி எரிகிறது. உனக்கு உறக்கமா பிடிக்கும்? இக்கேள்விக்கு விடையாக விவேகானந்த கேந்திரத்தை சேர்ந்த ஒவ்வொருவரும் தங்கள் வாழ்கையை, புனித வேள்வியாக அர்ப்பணம் செய்ய வேண்டும். விவேகானந்த கேந்திரமும், விவேகானந்த இண்டர்நேஷனலும் பொறுப்புடைய அமைப்புக்கள். அவை நம் தேசத்திற்கும், பன்னாட்டு சமுதாயத்திற்கும் கடமையாற்ற வேண்டும். இக்காலக் கட்டத்தில் விழித்தெழுந்து சவால்களை எதிர்கொள்ள வேண்டும். நம்மிடம் திறமை இருக்கிறது. நாம் மட்டும் ஆகவே ''விழித்தெழு விழித்தெழு! ஜாக்ரத ஜாக்ரத'' என்ற தீர்மானத்தை செய்து கொள்ள வேண்டும்.

**-- பி. பரமேஸ்வரன், தலைவர்**

---

# 2010–2011–ல் நடந்த முக்கியமான தொண்டு நடவடிக்கைகள்

## கேந்திரப் பயிற்சி முகாம் துவக்கம்

முப்பத்தி ஆறாவது கேந்திர ஆயுட்காலத் தொண்டர் பயிற்சி 19.03.2011 அன்று துவங்கிற்று. இதில் 21 சிக்ஷார்த்திகள் பயிற்சியாளர்கள் இருந்தனர். அருணாச்சல் பிரதேஷ், அஸ்ஸாம், குஜராத், மத்திய பிரதேஷ், மஹாராஷ்டிரா, இராஜஸ்தான், உத்திரப் பிரதேஷ் ஆகிய மாநிலங்களில் இருந்து அவர்கள் வந்திருந்தார்கள். இரண்டு வருட துவக்கப் பயிற்சியை மூத்த தொண்டர்களுடன் பெற்றுவிட்டு அவர்கள் இப்பயிற்சிக்கு வந்தார்கள். ஹோலி பூர்ணிமா புனித நாளில் பயிற்சி துவங்கியது. அகில பாரத துணைத் தலைவர் ஸ்ரீ ஏ. பாலகிருஷ்ணன்ஜி, கன்னியாகுமரி, விவேகானந்தப் பாறை நினைவாலயத்தின் விவேகானந்த மண்டபத்தில் பயிற்சியாளர்களிடையே உரையாற்றினார்.



**விவேகானந்த கேந்திரத்திற்கு 2010–11–ம் ஆண்டுக்கான பாவுராவ் தேவ்ரஸ் ஸேவை விருது :** 05.03.2011 அன்று டெல்லியில் இருந்து 57 கி.மீ தொலைவில் உத்திரப் பிரதேசத்தில் இருக்கிற ஹாப்புட் என்ற ஊரில் ஒரு விழா நடந்தது. கேந்திரத்தின் இணைப் பொதுச் செயலாளர் குமாரி. ரேகா தவே கேந்திரத்தின் சார்பில் இந்த விருதைப் பெற்றுக் கொண்டார். இந்தப் பரிசில் 51 ஆயிரம் ரூபாய் பணமும், விருதுப் பத்திரமும் அடங்கும். விருதுப் பத்திரம் விழாவில் வாசித்து அளிக்கப்பட்டது. சரஸ்வதி தேவியின் வெண்கலச் சிலையும் பாவுராவ் தேவரஸ் ஸேவை அறக்கட்டளையின் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டன. வசதி அற்றோருக்கு கல்வி, உடல்நலம் ஆகிய துறைகளில் ஓய்வு ஒழிவின்றி தலைசிறந்த முறையில் பணிபுரிந்ததற்காக இப்பரிசு வழங்கப்பட்டது. ஸ்ரீமதி பிரம்ம தேவி சரஸ்வதி மகளிர் பள்ளியில் விழா நடைபெற்றது. பரம பூஜ்ய விஜய் கௌஷாஜி எனற தவமுனிவர் தலைமை விருந்தினராக வந்து கலந்து கொண்டார். ஏற்பாடும், மக்கள் கூட்டமும் நன்றாக இருந்தன.



## கன்னியாகுமரியில் அன்னபூஜை

04.07.2011 அன்று கன்னியாகுமரியில் 700 பேர் அன்னபூஜையில் பங்கேற்றனர். காஞ்சி மடத்தின் ஜகத்குரு ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் வருகைபுரிந்தார். அன்னபூர்ணா துதியும், கீதையின் விஸ்வரூப தரிசனமும் அன்று ஓதப்பட்டன. டாக்டர் கோதண்ட ராமராவ் அரிசியை ஸ்ரீ டி. பானுதாஸ்ஜியிடம் எடுத்து வழங்கினார். திருநெல்வேலி, இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஏழைக் குழந்தைகளுக்கு 15,500/- ரூபாய் மதிப்பில் கல்வி உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. புட்டபர்த்தியைச் சேர்ந்த ஸ்ரீ கணேஷ் நந்தகோபால் உதவித் தொகையை வழங்கினார். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. மாலையில் தொண்டர்கள் கலைநிகழ்ச்சிகளைச் செய்து காட்டினார்.



## சுவாமி பாபா ராம்தேவ் விவேகானந்தப் பாறை நினைவுச் சின்னத்திற்கு வருகை

28.03.2011 அன்று யோகா ஸ்ரீ பாபா ராம்தேவ் பாறை நினைவுச் சின்னத்திற்கும், விவேகானந்தபுரத்திற்கும் வருகை புரிந்தார். விவேகானந்தர் பாறையில் தியான மண்டபத்தில் சிறிது அமர்ந்தார். பெரும் மகிழ்ச்சியுற்றதாகக் கூறினார். விவேகானந்தபுரத்திற்கு வந்து கேந்திரத் தொண்டர்களுடன் 45 நிமிடங்கள் உரையாடினார். சுவாமி விவேகானந்தரின் உபதேசங்களை மக்களிடையே பரப்பவும், தேசீயப் பணியில் விவேகானந்த கேந்திரத்தோடு பெரும் தொண்டு ஆற்றவும் அவர் சபதம் எடுத்துக் கொண்டார்.



## அருணாச்சலப் பிரதேசம் ஆசிரியர் பயிற்சி (ஜூலை 2010)

நிர்ஜுலி விவேக விஹார் இட்டாநகர் விவேகானந்த கேந்திர வித்யாலங்களில் தொடக்க வகுப்புக்களில் பணியாற்றும் 31 ஆசிரியர்களுக்கு ஒரு பகல்நேரப் பயிற்சி முகாம் நடந்தது. இட்டாநகர் விவேகவிஹாரில் இப்பயிற்சி நடந்தது. விவேக விஹார் முதல்வர் குமாரி ப்ரதோதிபட்டாச்சார்யாஜி இட்டாநகர் ஆசிரியர் ஸ்ரீ சியாம் நாராயண் சிங் யாதவ் செயல்முறை வகுப்புக்களை நடத்திக் காட்டினார்கள். ஸ்ரீ விஷ்வாஸ்ஜியும் கல்வி அதிகாரிகளும் வகுப்புக்களை நடத்தினர். நிறைவு விழாவில் அருணாச்சல் பிரதேஷ் மேல் கல்வியின் துணை இயக்குனர் டாக்டர் தேஜும்பாது முக்கிய விருந்தினராகக் கலந்து கொண்டார்.

**அருணாச்சல் பிரதேசத்தில் மூன்று விவேகானந்த கேந்திர வித்யாலயாக்கள் புதிதாகத் துவங்கின:** 2010-11-ம் ஆண்டில் கேந்திரம் மூன்று விவேகானந்த கேந்திர வித்யாலயாக்களை துவங்கியுள்ளது. ஜூலை 2010-ல் யிங்கியோங்கிலும், அக்டோபர் 2010-ல் சாங்க்லாங்கில், பிப்ரவரி 2011-ல் தேஜுவிலும் இப்புதிய பள்ளிகள் துவக்கப்பட்டன.

**மூன்று நாள் நிர்வாகப் பணிமனை :** ஸ்ரீ சிரீஷ் ஜோஷி நிர்வாகஇயல் ஆலோசகர் பூனாவில் இருந்து வந்து இம்மூன்று நாள் பணிமனையை நடத்தினார். துணைத்தலைவர் திரு. ஏ. பாலகிருஷ்ணன்ஜி, குமாரி நிவேதிதா பிடே, பொதுச் செயலாளர் ஸ்ரீ பானுதாஸ்ஜி, இணைப் பொதுச் செயலாளர் குமாரி ரேகா தவே அருணாச்சல் பிரதேஷ் வி.கே.வி அறக்கட்டளையினர் அனைவரும் பள்ளி தொகுப்புத் தலைவர்களும் 01.11.2010 முதல் 03.11.2010 வரை இப்பணிமனையில் கலந்து கொண்டனர். விவேகானந்த கேந்திர கல்வி பரப்புத் துறை அஸ்ஸாம் மாநில அமைப்பாளர் ஆகியோர் 3-ம் நாள் நிகழ்ச்சியில் சேர்ந்து கொண்டனர்.

## அஸ்ஸாம் சிவசாகரில் வி.கே.வி

03.05.2010 அன்று அஸ்ஸாமில் 18-வது கேந்திரப் பள்ளியாக சிவசாகர் வி.கே.வி துவக்கி வைக்கப்பட்டது. வகுப்புக்கள் துவங்கின. 14.03.2011 அன்று பூமி பூஜை செய்யப்பட்டது. இதற்காக பத்து பீகா நிலத்தை காலஞ்சென்ற ஸ்ரீ அமூல்யகுமார் பரூவாவின் மனைவி ஸ்ரீமதி பூர்ணிமா பரூவா அன்பளிப்பாக கொடுத்துள்ளார்.

## ஆன்லைனில் வகுப்பு புணேயில் இருந்து தீன்சுக்கியா-க்கு

திரு. சதீஷ் நவாலே வி.கே.வி தீன்சுக்கியாவில் ஆசிரியராக புதிதாகச் சேர்ந்திருக்கிறார். 08.02.11 சரஸ்வதி பூஜையில் அவர் 11-ம் வகுப்பு மாணவர்களுக்காக ஒரு ஆன்லைன் வகுப்புக்கு ஏற்பாடு செய்தார். அவர் கண் பார்வை இழந்தவர் என்றாலும் தம் பணியில் ஆர்வம் குன்றாதவர்.

## குமாரி அநின்கியு மெரியம் வி.கே.ஐ.சி. விருது

விவேகானந்த கேந்திர பண்பாட்டுக் கழகத்தின் 2011-ம் ஆண்டுக்கான விருது குமாரி அநின்கியு மெரியமுக்கு வழங்கப்பட்டது. அவர் நாகாலாந்தில் இருக்கும் நாகா சமுதாயமாகிய ஜீலியாங்ரோஸ் மிபுயி அமைப்பின் துணைத்தலைவர் ஆவார். இவ்விருது இக்கழகத்தின் நிறுவன தினம் ஆகிய ஜனவரி 31 அன்று குவாஹாட்டியில் வழங்கப்பட்டது. வடகிழக்கு மாநிலங்களின்



பாரம்பரியா பண்பாட்டைச் சேமித்து வைத்து பாதுகாத்து வளர்க்கும் துறையில் சமுதாயப் பணியாற்றிய முக்கிய நபருக்கு ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இப்பெண்மணி தன்னைச் சமர்ப்பித்துக் கொண்டு ஜீலியாங்ரோஸ் சமுதாயத்தில் சமுதாயப் பண்பாட்டு புனர் வாழ்வைக் கொண்டு வர உழைத்தார். உள்ளூர் சமய நம்பிக்கைகளையும், பண்பாட்டையும் பாதுகாத்து வளர்த்தார்.

## போடோ கருத்தரங்கத்திற்கு ஆதாரப்பணி

போடோக்களின் மரபு சார்ந்த கட்டமைப்புக்களில் மாற்றமும், தொடர்ச்சியும் என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கத்திற்கு அடிப்படை வேலையாக ஒரு கூட்டம் நடந்தது. அது ஒரு தயாரிப்புக் கூட்டம் ஆகும். துணைத் தலைவர் ஸ்ரீ ஏ. பாலகிருஷ்ணன்ஜி கலந்து கொண்டார். கேந்திரப் பண்பாட்டுக் கழகம் நடத்திய இதில் போடோ அறிவு ஜீவிகள், போடோ செயல்வீரர்கள் ஆகியோருடன் சந்திப்பு நிகழ்ந்தது. 06.05.2010 அன்று போடோ இலக்கிய சபைக் கட்டிடத்தில் இக்கூட்டம் நடந்தது.

## பரிசுகளும் பாராட்டுக்களும்--விவேகானந்த கேந்திர கல்வி பரப்புத் துறை – அஸ்ஸாம் & நாகாலாந்து

ஸ்ரீ கௌஷிக் பரூவா ஒரு குழந்தை விஞ்ஞானி ஆவார். அவர் கோலாகாட் வி.கே.வி–யின் மாணவர் ஆவார். குவாஹாட்டியில் நடந்த 2010–ம் ஆண்டுக்கான சி.பி.எஸ்.ஈ–யின் விஞ்ஞானக் கண்காட்சியில் பிராந்திய மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய தலைப்பு:– வெட்டி துளைக்கப்பட்ட பட்டுப்பூச்சிக் கூட்டில் இருந்து நூல் எடுத்து தொடர்ந்து சுற்றுவது எப்படி? இதற்காக அவருக்கு மத்திய கல்வி அமைச்சர் ஸ்ரீ கபில்சிப்பல்–டம் இருந்து சான்றிதழும், மூவாயிரம் ரூபாய் ரொக்கப்பரிசும் கிடைத்தன. இதே பணித் திட்டத்திற்காக அவருக்கு முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாமிடம் இருந்து அகமதாபாத் நிர்வாகக் கழகத்தில் இருந்து பரிசும் கிடைத்து இருக்கிறது. 62–வது குடியரசு தின விழாவில் கோலாகாட் மாவட்ட நிர்வாகம் கௌசிக் பரூவாவைப் பாராட்டித குழந்தை விஞ்ஞானி என்று புகழ்ந்தது.

குமாரி அஹீமேகா வி.கே.வி ரோயிங்கின் ஆறாம் வகுப்பு மாணவி ஆவார். அவர் அகில பாரத அளவில் திறமை தேடும் தேர்வில் வெற்றி பெற்றார். இதனை பங்களூரில் உள்ள தேசீய ஆசிரியர்கள் கழகம் நடத்திற்று.

அஸ்ஸாம் சில்ச்சரில் ராம்நகர் வி.கே.வி ஆசிரியை ஸ்ரீமதி லிபிகாராய் பாரதீய தலித் இலக்கிய அகாடமியால் தேசீய உறுப்பினர் விருதை டாக்டர் அம்பேட்கர் நினைவில் பெற்றார். அவர் அஸ்ஸாமில் உள்ள பராக் பள்ளத்தாக்குப் பகுதியில் ஸ்ரீமந்த சங்கர தேவரின் கொள்கைகளை பரப்பியதற்காக இப்பதவி அவருக்கு கிட்டியது.

## கல்கத்தா கிளை

### சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி

15.01.2011 அன்று பாய்ஸ் ஓன் மண்டப நூலகத்தில் சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. 100 பேர் வந்திருந்தனர். கேந்திரத் துணைத் தலைவி குமாரி நிவேதிதா தீதி தலைமைப் பேச்சாளராக வந்திருந்தார்.

**புவனேஸ்வர் கிளையின் பிராந்திய யோகப் பண்பாட்டுக் கழக மையத்தின் பூமி பூஜை :** புவனேஸ்வரில் பிராந்திய மையமும், பண்பாட்டு யோகக் கழகமும் அமைய இருக்கும் கட்டிடத்தின் அடிக்கல் நாட்டும் விழா 21.02.11 அன்று நடந்தது. ராஜ்ய சபா உறுப்பினர் திரு. பியாரி மோகன மொகாபாத்ரா தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். அடிக்கல்லைத் திறந்து வைத்தார். கன்னியாகுமரி கேந்திர துணைத் தலைவர் ஏ. பாலகிருஷ்ணன்ஜி வருகை புரிந்தார். பிரம்மபுர கேந்திர கிளை மைய வளர்ச்சி உடனுறை முகாமை ஏழு நாட்களுக்கு நடத்திற்று. ஆளுமை வளர்ச்சி, பாரதப் பண்பாடு, பாரத சக்தி, பண்பாடு வகுப்பின் தேவை, நடைமுறை தேச பக்தி இவற்றைப் பற்றிய கலந்துரையாடல்கள் நடைபெற்றன. மாபெரும் தேச பக்தர்களான சுவாமி விவேகானந்தர், உத்கல் மணி மதுசூதனதாஸ், உத்கல் கௌரவ கோப பந்து தாஸ், மஹாராஜ் காரவேலர், திரு. ஏக்நாத் ரானடே ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகள் முகாமினருக்கு எடுத்துக் கூறப்பட்டன. முகாம் பேச்சாளராக பேராசிரியர் கிஷோர் சங்கர ராவுத், பேராசிரியர் வாசு தேவ ஜட்டோய், பேராசிரியர் பிருந்தாவன் மிஸ்ரா, பேராசிரியர் கோபால் குமார் பாணிக்ராஹி, திரு. ப்ரமோத் பண்டா, திருமதி. மினாத்தி மொகா பாத்ரா ஆகியோர் வந்திருந்தனர். சூரிய நமஸ்கார வேள்வியிலும் மாணவர்கள் பங்கேற்றனர்.



### வி.கே.வி போர்ட்பிளேயர், அண்டமான்

இப்பள்ளி மாணவி குமாரி நித்யா நாயர் இத்தீவுகளில் 12-ம் வகுப்பில் முதலிடம் பெற்றார். குமாரி ரோகிணி நாயர் 8-ம் இடம் பெற்றார்.

இப்பள்ளி மாணவர்களாகிய அத்வைத ரமேஷ் பிள்ளை, டி. நீரஜ் விக்னேஷ் வினோத், மொகமது ஃபைஜ் ஆகியோர் ஒரு விஞ்ஞானக் கருவியைத் தயாரித்து இருந்தனர். அந்த மாதிரி அண்டமான் நிக்கோபார் தீவுகளின் கல்வி இயக்குனரால் தேர்ந்தெடுக்கப்பட்டது. ராஜஸ்தான் ஜெய்ப்பூரில் தேசீயக் கல்வி ஆராய்ச்சி பயிற்சிக் கழகம் நடத்திய ஜவாஹர்லால் நேரு தேசீய விஞ்ஞான கண்காட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

பாட்னா விவேகானந்த கேந்திரம் கிளை **பாரதமே விழித்தெழு, உலகை விழிக்கச் செய்** என்றொரு பொது நிகழ்ச்சியை 02.11.10 அன்று நடத்திற்று. கேந்திர துணைத் தலைவி குமாரி நிவேதிதா தீதி சிறப்புப் பேச்சாளராக வந்திருந்தார். முக்கிய விருந்தினர் திரு. ரவி நந்தன் சஹாய் ஆவார். நிவேதிதா தீதி தன் உரையில் சுவாமி விவேகானந்தரின் 150-வது பிறந்தநாள் ஆண்டுவிழா ஆகிய 2013-ஐ விவேகானந்த கேந்திரம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சிதறிக் கிடக்கும் ஆன்மீகச் சக்திகளையும், நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து சுவாமிஜியின் பிறந்த நாளைக் கொண்டாட வேண்டும், என்றார்.

## நாஷிக்கில் சமர்த்த பாரதக் கொண்டாட்டம்

இங்கு சமர்த்த பாரதப் பருவத்தின் நிறைவு விழாவில் சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள் இன்றைய தேவை என்ற தலைப்பில் புகழ்பெற்ற சிந்தனையாளரும், பேச்சாளரும் ஆகிய டாக்டர் அசோக்ஜி மோடக் சிறப்புரை ஆற்றினார். விழாவுக்கு 300 பேர் வந்திருந்தனர்.

சுவாமிஜியின் 150-ம் பிறந்தநாளை ஒட்டி விவேக சிந்தனையின் இலக்கிய சேவைப் பிரிவின் கீழ் மூன்று மராட்டி புத்தகங்கள் வெளியிடப்பட்டன. **1) அமெரிக்காவில் சுவாமிஜி 2) சுவாமிஜியை மறக்க முடியாது 3) நிறுவன அமைப்பும் தொண்டரும்.**

## புணே – சகோதரி நிவேதிதை நூற்றாண்டு

சகோதரி நிவேதிதை நினைவு நூற்றாண்டு நிகழ்ச்சியாக எட்டு அமைப்புக்களை ஒருங்கிணைத்து ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு சகோதரியின் நினைவில் பல நிகழ்ச்சிகளை நடத்த உள்ளது. 09.10.10 அன்று முதல் நிகழ்ச்சி நடந்தது. குமாரி நிவேதிதா தீதியும், குமாரி ஸ்வர்ணலதா பிஷிகரும் விழாவில் பேசினர். சகோதரி நிவேதிதையின் வாழ்வு, தொண்டு, செய்தி பற்றி அவர்கள் உரையாற்றினர். மாலேகாம் கேந்திரத் தொண்டர் டாக்டர் சுரேஷ் சாஸ்திரி எழுதிய **கருமயோகி நிவேதிதா** என்ற நூல் இவ்விழாவில் வெளியிடப்பட்டது. விழாவுக்கு 200 பேர் வந்திருந்தனர்.

## நாக்பூரில் உலக சகோதரத்துவ தின விழா

12.09.10 அன்று உலக சகோதரத்துவ தின விழா கொண்டாடப்பட்டது. மஹாராஷ்டிர கேந்திர மாநிலத் தலைவரான ஸ்ரீ ஜி.ஜி. ஜோஷி விழாவுக்குத் தலைமை தாங்கினார். அவர் எழுதிய '**தாசர் கூறியது**' என்ற மராட்டி புத்தகம் வெளியிடப்பட்டது. நாஷிக்கைச் சேர்ந்த மத்திய ஹிந்து இராணுவக் கல்விச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஸ்ரீ பிரகாஷ்ஜி பாட்டக் சிறப்புரை ஆற்றினார்.

இவ்வூரில் 17.01.11 அன்று விவேகானந்தர் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. கேந்திரத்தின் நகரத் தலைவர் ஆனந்த பஹாதியா தலைமை தாங்கினார். விவேகானந்த இண்டர்நேஷனல் பவுண்டேசனின் செயலாளர் திரு. முக்குல் கானிட்கர் '**நானே பாரதம்**' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். உலகத்திற்கு வழிகாட்ட நம் தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று ஸ்ரீ முக்குல் வற்புறுத்தினார். இல்லாவிட்டால் நாம் ஒரு வல்லரசு ஆகியும் பயன் இல்லை என்று பேசினார்.

## மத்திய மாநிலம்

ஜபல்பூரிலும், இந்தோரிலும், குவாலியரிலும் '**விமர்ச**' என்ற பெயரில் அறிவு ஜீவிகளுக்கான தொடர் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன. இதன் துவக்க உரையை கேந்திர துணைத் தலைவி குமாரி நிவேதிதா பிடே குவாலியரில் ஆற்றினார். தலைப்பு சுவாமி விவேகானந்தரின் பார்வையில் ஹிந்து தத்துவம் அதைத் தொடர்ந்து புகழ் பெற்ற பேச்சாளர்களாகிய டாக்டர் திவாகர் வித்யாலயங்கார், டாக்டர் சுப்பிரமணிய சுவாமி, ஸ்ரீ முக்குல் கானிட்கர், மேஜர் ஜெனரல் ஜி.டி. பக்ஷி, டாக்டர் சந்திர காந்த் மோகே, திருமதி சரோஜ் அகர்வால், முன்னாள் காவல் தலைமை இயக்குனர் (உ.பி) ஸ்ரீ ப்ரகாஷ்சிங் ஆகியோரின் உரைகள் வெவ்வேறு இடங்களில் ஆற்றப்பட்டன.



### பணிமனை

விவேகானந்த கேந்திரமும், மத்திய பிரதேசக் கல்வித்துறையும் ஆசிரியர்களுக்கு 69 **சமர்த்த** பணிமனைகளை நடத்த ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன. அவற்றுள் 12 நடத்தப்பட்டன. ரேவாவில் மூன்றும், ஜபல்பூரில் எட்டும், ஹர்தாவில் ஒன்றும், 490 ஆசிரியர்களுக்கு பயிற்சி தந்தன.

### சமர்த்த பாரதப் பருவம்

இப்பிராந்தியத்தில் விவேகானந்தர் பிறந்த நாள் 96 கல்லூரிகளில் நடத்தப்பட்டது. பொது இடங்களிலும் நடத்தப்பட்டது. 14,200 பேர் பங்கேற்றனர். குவாலியரில் சமர்த்த பாரதப் பருவம் பற்றிய சிறப்புரை ஆற்றப்பட்டது. நகரின் அறிவு ஜீவிகளும் இளைஞர்களுமாக 120 பேர் பங்கேற்றனர். ஸ்ரீ பீயூஷ் தாம்பே சிறப்புரை ஆற்றினார். வனவாசி கல்யாண ஆசிரமத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஜிதேந்திராஜி விழாவுக்குத் தலைமை தாங்கினார். சமர்த்த பாரதப் பருவம் பற்றிய ஒலி, ஒளி, வினாடிவினா நடத்தப்பட்டது.

## புதுடில்லி விவேகானந்த இண்டர்நேஷனல் பவுண்டேஷனில் மாதாந்திர சிறப்புரைகள் – விமர்சம்

காணாமல் போன **சரஸ்வதி நதி** என்ற தலைப்பில் சிறப்புரையும், படப்பட்டி காட்சியும் ஸ்ரீ மிஷேல் டேனினோவால் நடத்தப்பட்டன. அவர் புகழ்பெற்ற நூல் ஆகிய **காணாமல் போன நதி** ஆகிய சரஸ்வதியைத் தேடி என்ற ஆங்கில நூலை எழுதியுள்ளார். பாரத நாகரீகத்தின் உயிரோட்டமாகிய சரஸ்வதி நதி ஒருகாலத்தில் பெரும் நதியாக விளங்கிற்று. அதைப்பற்றிய தொல்லியல் சான்றுகளையும், புவியியல் சான்றுகளையும் அவர் வழங்கினார். அவர் உரை மனத்தைக் கவருவதாக அமைந்திருந்தது. பாரதத்தின் தனிச் சிறப்புள்ள நாகரீகத்தின் ஏற்ற, இறக்கங்களின் ஊடே தொடர்பைத் தரும் சங்கிலியாக சரஸ்வதி நதி விளங்குகிறது. விவேகானந்த இன்டர்நேஷனல் பவுண்டேசனின் அடிப்படை ஆராய்ச்சி விஷயமாகிய நாகரீக வரலாற்று ஆராய்ச்சி என்பதன் ஒரு பகுதியாக இச்சிறப்புரை அமைந்தது. இப்பேச்சு கேட்போரை பரவசப்படுத்திற்று.

**ஜெய்ப்பூர் கேந்திர கட்டிடம் மக்களுக்கு சமர்ப்பணம்:** 24.11.10 அன்று கேந்திரத்திற்காக இருபது லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டிடம் கன்னியாகுமரி கேந்திரத்தின் ஜெய்ப்பூர் கிளைப் பணிகளுக்காக வழங்கப்பட்டது. ஜெய்ப்பூர் கேந்திர அன்பரான திருமதி மோஹினி ஓட்ரானி, ஸ்ரீ லேக்ராஜ் ஓட்ரானியின் மனைவி இதை கேந்திரத்திற்கு வழங்கினார்.

**விவேக் விசார்:** ஒரு புதிய பணித்தொடர் ஆகிய விவேக் விசார் என்ற கலந்துரையாடல் ராஜஸ்தானத்தில் துவக்கப்பட்டுள்ளது. அதன் முதல் நிகழ்ச்சி உதய்பூரில் தேசீய பாதுகாப்புக்கு சவால்கள் என்ற பெயரில் நடந்தது. மேஜர் ஜெனரல் ஜி.டி. பக்ஷி (ஓய்வு) சிறப்புரை ஆற்றினார். உலகளாவிய பயங்கரவாதம் மனித உரிமைகளை நசுக்குவதைப் பற்றிய தன் கவலைகளை அவர் எடுத்துரைத்தார்.

## விவேகானந்த கேந்திர வித்யாலயா – கள்ளுபாலு – பங்களூரு

12.01.11 அன்று இப்பள்ளியின் ஆண்டு விழாவும், 25-ம் ஆண்டு விழாவும் சமர்த்த பாரதப் பருவத்தின் நிறைவு விழாவும் விவேகானந்தர் பிறந்த நாள் விழாவும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன. பாரத அரசு செயலர் ஸ்ரீ வி.வி. பட்டும், டாக்டர் கிருஷ்ண ரெட்டியும், ஸ்ரீ டி.ஜி.கே. மூர்த்தியும் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர். குத்துவிளக்கு ஏற்றி இரண்டு புதிய வகுப்பறைகளைத் துவக்கி வைத்தனர். இந்த நாளின் முக்கியத்துவம் பற்றிச் சிறப்புரை ஆற்றினர்.



**கேரளம் :** தனிச்சிறப்புடைய மக்கள் தொடர்பு நிகழ்ச்சி ஒன்று கொடுங்கல்லூர் விவேகானந்த கேந்திர வேத தரிசன மையத்தால் நடத்தப்பட்டது. மக்களுக்கு ராமாயணப் பாராயணத்தில் ஆடி மாதத்தில் அதிக உற்சாகம் இருக்கும். அது ராமாயண மாதம் என்று அழைக்கப்படும். ராமாயணப் பாராயணத்தை பரப்பவும் அதை பொருள் பொதிந்ததாக ஆக்கவும் கேந்திரத் தொண்டர்கள் நான்கு பண்பாட்டு வகுப்பு மாணவர்களுடன் 31 வீடுகளுக்குச் சென்றார்கள். ராமாயணம் ஓதினார்கள். எளிய பூஜையும் செய்தார்கள். அந்தந்த வீட்டினருக்கு ராமாயணப் புத்தகமும், படமும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இங்குள்ள ஆனந்த தாமில் ஒரு புதிய விருந்தினர் இல்லம் ஆகிய ஸ்ரீ சாரதா மாத்ரு மந்திர் 16.12.10 அன்று துவக்கி வைக்கப்பட்டது. அறிவை ஆராதிக்கும் அன்பர்களின் மாநாட்டுக் கூட்டம் நடைமுறைப் பயிற்சி இவற்றுக்கு ஆனந்த தாம் சிறப்பான இடம் ஆகும். அன்றைக்கு சூரியா காலடி அவர்கள் கணபதி ஹோமம் செய்து வைத்தார்கள்.

## சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் இருந்து வெற்றிகரமாக தாயகம் திரும்பிய நாள்

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் இருந்து பரமக்குடிக்கு வந்த நாளின் 115-வது ஆண்டு விழா 30.01.11 அன்று கொண்டாடப்பட்டது. கேந்திரத்தின் தூத்துக்குடி, பரமக்குடி கிளைகள் இதைக் கொண்டாடினர். சுவாமிஜியின் திருவுருவப்படத்துடன் பெரிய ஊர்வலம் ஒன்றும் நகர்வலம் வந்தது. பரமக்குடியில் சுவாமி விவேகானந்தர் சிறப்புரை ஆற்றிய குமரன் படித்துறையில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

## மதுரையில் கல்லூரி மாணவர்களுக்கான வெல்க வெல்வே முகாம்

**வெல்க வெல்கவே** முகாமினை 22.01.11 அன்று மதுரை ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி கமலாத்மானந்தாஜி துவக்கி வைத்தார். குமாரி நிவேதிதா பிடே கேந்திர துணைத்தலைவர், மாநில அமைப்புக் குழுவின் தலைவர் டாக்டர் ஆர். தினகரன், கேந்திர அன்பர் ஸ்ரீ ஆனந்த அமிர்தம் துவக்க விழாவில் சிறப்புரை ஆற்றினர். 92 கல்லூரிகளில் இருந்து 1013 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். இவர்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, விருதுநகர், ராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள்.

25.01.11 அன்று 1013 பேரும், 108 சூரிய நமஸ்காரங்கள் போட்டனர். ஒரு திருவிளக்குப் பூஜையும் அன்று நடத்தப்பட்டது. ஒரு நடன நிகழ்ச்சியும் நடந்தது.

26.01.11 அன்று தேசப் பணி சபதம் எடுத்துக் கொண்ட பிறகு நிறைவு விழா நடைபெற்றது. பாரத அரசின் தலைமை விஞ்ஞான ஆலோசகர் டாக்டர் ஆர். சிதம்பரம் தலைமை விருந்தினராக உரையாற்றினார்

## விவேகானந்த கேந்திரம் கன்னியாகுமரி

கன்னியாகுமரி தலைமையகம் ஆண்டு முழுவதும் பல பணிகளுடன் சுறுசுறுப்பாக இயங்கி வந்தது. யாத்ரீகளுக்கு விவேகானந்தப் பாறை நினைவுச் சின்னம் பார்ப்பது மிகப்பெரியதொரு கவர்ச்சி ஆகும். கீழ்வரும் அட்டவணை வருகை தந்தோரின் பட்டியலைக் காட்டுகிறது.

**விவேகானந்தப் பாறை நினைவுச் சின்னத்தைப் பார்வையிட்ட யாத்ரீகளின் குறிப்புக்கள்**

| வ.எண் | இடங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | விவேகானந்தப் பாறை நினைவுச் சின்னம் | 18,86,520 |
| 2) | எழுமின்! விழிமின்! கண்காட்சி | 22,490 |
| 3) | அலையும் துறவி கண்காட்சி | 307 |
| 4) | கிராமோதய தர்ஷன் பூங்கா | 1,240 |
| 5) | விவேகானந்தபுரத்தின் தங்கும் வசதியைப் பயன் படுத்திக் கொண்டவர்கள் | 2,26,019 |
| 6) | மருந்தகத்தில் சிகிச்சை பெற்றவர்கள் | 11,761 |
| 7) | கங்கோத்ரி படக்கண்காட்சி | 8,111 |

**குறிப்பு:** அலையும் துறவி கண்காட்சி புதுப்பிக்கப்படுகிறது. பார்வையாளர்களுக்கு அனுமதி இல்லை.

**விவேகானந்தப் பாறை நினைவுச் சின்னத்தை இவ்வாண்டு தரிசித்த பிரமுகர்கள் கூறியவை :**

1) ஸ்ரீ சுதர்சன்ஜி, முன்னாள் ஆர்.எஸ்.எஸ் தலைவர் (20.05.10) :- நம் தேசீய வாழ்வில் இந்த நினைவுச் சின்னம் மிக உயர்ந்த அந்தஸ்து பெற்றது ஆகும். ஒவ்வொரு நாளும் சராசரியாக ஏழாயிரம் பேர் இதைக் கண்டு புத்துணர்ச்சி பெறுகின்றனர். தேசம் விழித்து எழுவதை என் கண்ணில் பார்க்கிறேன். அன்பும், சாந்தியும் கொண்டு உலகத்தை அதை தலைமையேற்று நடத்திச் செல்லும் என்று சுவாமிஜி கூறியுள்ளார்.

2) கேரள ஆளுனர் மேதகு ஆர்.எஸ். கவாய் (27.05.10 ) :- நம் தேசத்தின் முடிவற்ற சமய வரலாற்றை இப்பாறை குறிப்பிடுகிறது. மகத்தான முனிவர் ஸ்ரீ சுவாமி விவேகானந்தருக்கு அற்புதமானதோர் கலைப் படைப்பு.

3) தினமலரைச் சேர்ந்த டாக்டர் ஆர். லக்ஷ்மிபதி (25.0.10) :- பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மறுபடியும் வருவதில் பெருமிதம் கொள்கிறேன். நான் நாகர்கோவிலில் பிறந்தவன். என் நினைவுகள் பல ஆண்டுகள் பின்னோக்கிச்

செல்கின்றன. பாறை நினைவுச் சின்னத்திற்கு அடிக்கல் நாட்டிய நாளில் இருந்து இன்று வரை சரியான திசையில் இந்த ஸ்தாபனம் சென்று கொண்டிருக்கிறது. திருவள்ளுவர் சிலையும் விவேகானந்தர் பாறையும் ஒன்றோடொன்று இணைந்திருக்க வேண்டியது பெரும் விருப்பம் ஆகும்.

4) பாராளுமன்ற உறுப்பினர் திரு. ராஜேந்திர அகர்வால் (27.06.10) :- நினைவுச் சின்னம் மிகுந்த எழுச்சியூட்டுகிறது

5) லெப்டினன்ட் ஜெனரல் வி.கே. ஆலுவாலியா மத்திய கமாண்ட் (16.09.10) :- நாற்பத்தி ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு கன்னியாகுமரி கோவிலுக்கும், விவேகானந்தப் பாறை நினைவுச் சின்னத்திற்கும் வருவது பெரும் மரியாதையும், ஆசியும் ஆகும். இந்த நினைவுச் சின்னம் முழுவதும் நல்லமுறையில் சிந்திக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு, கட்டப்பட்டு, நிர்வாகம் செய்யப்படுகிறது.

6) யோகி சுவாமி ராம்தேவ் பாபா, பதஞ்சலி யோக பீடம் (28.03.11) :- என் இதயமும், மனமும், ஆத்மாவும், உடம்பும், கன்னியாகுமரியாம் புனித பூமிக்கு வந்து பெரும் மகிழ்ச்சியும், சக்தியும் நிறைந்து காணப்படுகின்றன. இங்கு தான் சுவாமி விவேகானந்தர் இறையருள் பெற்று தன் வாழ்வின் லட்சியப் பணியைக் கண்டு கொண்டார். சுவாமி விவேகானந்தர் கண்ட கனவை நிறைவேற்ற என் வாழ்க்கையை அர்ப்பணிப்பேன்.

**சில ஸ்தாபனங்கள் தங்களுடைய கருத்தரங்குகளையும், பணிமனைகளையும் நடத்த விவேகானந்தபுரத்தில் உள்ள வசதிகளைப் பயன்படுத்திக் கொண்டன :-**

| 1) வ.எண் | ஸ்தாபனத்தின் பெயர் | பங்கேற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | சின்மயா மிஷன், திருவனந்தபுரம் | 150 |
| 2) | வர்ம முகாம் – இயற்கைவள அபிவிருத்தித் திட்டம் | 200 |
| 3) | சாரணர்கள் இயக்கம், நாகர்கோவில் கல்வி மாவட்டம் | 225 |
| 4) | ஐயப்ப சேவா சங்கம், நாகர்கோவில் | 200 |
| 5) | பிரார்த்தனை பரிவாரம், அகமதாபாத் | 400 |
| 6) | ஆர்.எம்.கே.வி நிறுவனம், திருநெல்வேலி | 330 |
| 7) | ஜெயின் கோவில் விழா நிகழ்ச்சி, நாகர்கோவில் | 200 |
| 8) | மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி | 200 |
| 9) | யூனிட் டிரஸ்ட் மியூச்சுவல் பெனிபிட் பண்ட், திருநெல்வேலி | 300 |
| 10) | இஸ்கான் நிகழ்ச்சி, மும்பை | 4500 |
| 11) | அகில பாரத வனவாசி கல்யாண் ஆசிரமம், கோயம்புத்தூர் | 400 |
| 12) | தோட்டப்பயிர் துறை, பேச்சிப்பாறை | 250 |

**விவேகானந்தபுரம் கன்னியாகுமரி பயிற்சி மையத்தில் நடைபெற்ற அகில பாரத அளவிலான முகாம்கள்**

| வ.எ | முகாம் பெயர் | முதல் | வரை | எத்தனை பேர் |
|---|---|---|---|---|
| 1) | ஆசிரியர் பயிற்சி முகாம் | 01.04.10 | 25.04.10 | 92 |
| 2) | யோகப் பயிற்சி முகாம் | 05.05.10 | 19.05.10 | 52 |
| 3) | பண்பாட்டு வகுப்பு பயிற்சி முகாம் | 23.05.10 | 29.05.10 | 340 |
| 4) | தொண்டர் பயிற்சி முகாம் | 04.06.10 | 18.06.10 | 41 |
| 5) | சிறப்பு யோக பிரதிமான் முகாம் | 09.06.10 | 18.06.10 | 61 |
| 6) | சக யோக முகாம் (தம்பதியினருக்கு) | 15.06.10 | 17.06.10 | 70 |
| 7) | ஆன்மீகப் பயிற்சி முகாம் | 08.08.10 | 14.08.10 | 121 |
| 8) | யோகப் பயிற்சி முகாம் | 01.12.10 | 15.12.10 | 90 |
| 9) | ஆன்மீகப் பயிற்சி முகாம் | 08.02.11 | 14.02.10 | 101 |
| 10) | முதிர்நிலை தொண்டர் முகாம் | 05.02.10 | 14.02.10 | 30 |

**குறிப்பு:** சமர்த்த பாரதப் பருவம், குரு பூர்ணிமை, கீதை தினம், உலக சகோதரத்துவ தினம், சாதனை நாள் ஆகியவை விவேகானந்தபுரத்திலும், விவேகானந்த கேந்திர கிளைகளிலும் கொண்டாடப்பட்டன.

**மாநிலவாரியாக பணி விபரங்கள்**

கேந்திர கிளைகள், பள்ளிக்கூடங்கள், நன்னூல் ஓதும் வகுப்புக்கள், யோக வகுப்புக்கள், பண்பாட்டு வகுப்புக்கள், யோக முகாம்கள்

| வ.எ. மாநிலம் | வி.கே. பள்ளிகள் | கேந்திரப் பள்ளிகளும், பணித் திட்டங்களும் | எத்தனை நன்னூல் வகுப்புக்கள், எத்தனை பேர் | யோக வகுப்புகள் எத்தனைபேர் | ஆனந்தாலயங்கள் எத்தனை பேர் |
|---|---|---|---|---|---|
| 1) அண்டமான் | 9 | | | | |
| 2) அருணாச்சல் பிரதேசம் | 33 | -/18 | 2/24 | 2/23 | 15/598 |
| 3) ஆந்திரா | | 1 | | 12/240 | |
| 4) அஸ்ஸாம் | 17 | 18 | 2/62 | 6/182 | 52/2500 |
| 5) பீஹார் | | 4 | 8/130 | 8/290 | |
| 6) டெல்லி | | 6 | | | |
| 7) கோவா | | 1 | | | |
| 8) குஜராத் | | 10 | 2/18 | 3/27 | |
| 9) ஹிமாச்சல் | | 2 | | | |
| 10) ஜம்மு & காஷ்மீர் | | 2 | | | |
| 11) கர்நாடகம் | 1 | 5/1 | 1/20 | 3/100 | 2/78 |
| 12) கேரளம் | | 1/1 | | | |
| 13) மத்தியப் பிரதேசம் | | 17 | 21/352 | 7/80 | |
| 14) மஹாராஷ்டிரா | | 22/2 | 25/318 | 13/144 | |
| 15) நாகாலாந்து | 1 | 1 | | | |
| 16) ஒடிஷா | | 6/1 | 17/250 | 16/158 | 33/970 |
| 17) இராஜஸ்தான் | | 11 | 12/134 | 6/178 | |
| 18) தமிழ்நாடு | 3 | 6 | 2/55 | 3/69 | |
| 19) மேற்கு வங்காளம் | | 2 | | | |
| மொத்தம் | 64 | 138 | 92/1363 | 80/1487 | 102/1487 |

| வ.எ. மாநிலம் | மருத்துவ முகாம்கள் எத்தனை பேர் | இளைஞர்முகாம்கள், ஆளுமை வளர்ச்சி முகாம்கள் எத்தனை பேர் | பண்பாட்டு வகுப்புக்கள் எத்தனைபேர் | யோக முகாம்கள் எத்தனை பேர் |
|---|---|---|---|---|
| 1) அண்டமான் | | | | |
| 2) அருணாச்சல் பிரதேசம் | 78/254 | 6/309 | 14/356 | 1/10 |
| 3) ஆந்திரா | 12/2552 | 9/205 | 12/452 | 12/417 |
| 4) அஸ்ஸாம் | | 6/1144 | 70/2986 | 2/72 |
| 5) பீஹார் | | | 12/330 | 3/68 |
| 6) குஜராத் | | 2/103 | 8/130 | 5/61 |
| 7) கர்நாடகம் | 12/780 | | 4/100 | 14/168 |
| 8) மத்தியப் பிரதேசம் | | 68/9055 | 78/1263 | |
| 9) மஹாராஷ்டிரா | | 28/1596 | 41/902 | 42/1184 |
| 10) ஒடிஷா | 2/24 சமர்த்த | 20/543 | 20/467 | 10/626 ப்ரதிமான் |
| 11) இராஜஸ்தான் | 1 | 5/221 | 15/310 | 15/558 |
| 12) தமிழ்நாடு | 3 | 1/51 | 222/7006 | 4/272 |
| 13) மேற்கு வங்காளம் | | 13237 | | |
| மொத்தம் | 106/6704 | 145/1319 | 496/14289 | 108/2978 |

**குறிப்பு:** 1) அருணாச்சலில் 111 பாலர்பள்ளிகளில் 6880 குழந்தைகள், 2) ஹைதராபாத்தில் அம்ருத சுரபியில் 12/920 பேர் வருகை, 3) அஸ்ஸாமில் மூன்று தீபபூஜைகளில் 855 பேர் வருகை, 4) கொடுங்கல்லூர் சூரிய நமஸ்காரம் 11 பள்ளிகள், 730 குழந்தைகள், 5) மத்திய பிராந்தியம் – 63 முகாம்கள், 8772 முகாமினர், 6) மஹாராஷ்டிரா உள்ளூர் தொண்டர்கள், 7 முகாம்கள் – 165 பேர் 7) ஒடிஷா நன்னூல் ஓதும் போட்டிகள் முப்பத்து மூன்றில் 1050 பேர் 8) தமிழ்நாட்டில் கிராம முன்னேற்றத் திட்டத்தில் 75 குழந்தைகள் காப்பகங்கள்.

**தூத்துக்குடி கிராம முன்னேற்றத் திட்டம் 124 ஒன்றிய அளவிலான போட்டிகள்**

22,793 மாணவர்கள் 1355 ஆசிரியர்கள், 635 பெற்றோர்கள் பங்கேற்றனர். மாவட்ட அளவிலான போட்டிகளில் 502 பள்ளிகள் 2262 மாணவர்கள், 355 ஆசிரியர்கள், 413 பெற்றோர்கள் பங்கேற்றனர். 166 பள்ளிகளில் இருந்து 6861 மாணவர்கள், 110 கல்லூரிகளில் இருந்து 16913 மாணவர்கள் பண்பாட்டுத் தேர்வு எழுதினர்.

## விவேகானந்த கேந்திர கிழக்கு பிராந்தியம்

**கிளை மையங்கள்:** 1) கோல்கத்தா, 2) பாட்டாநகர், 3) சூரி, 4) தாராபீட், 5) பிராம்மண்வாடா, 6) பாட்னா, 7) நாளந்தா, 8) பாகல்பூர்.

பூர்வ பிராந்தியத்தில் ஏழு தொடர்பு நகரங்களும், ஆறு பணி நகரங்களும், ஒரு பணி மையமும், 21 காரிய விஸ்தாரங்களும், 27 மக்கள் தொடர்பு விஸ்தாரங்களும் உள்ளன. இந்த விபாகத்தை ஒரு ஆயுட்காலத் தொண்டரும், உள்ளூர் தொண்டர்களும் நிர்வாகம் செய்கின்றனர்.

### கோல்கத்தா கிளை

விவேகானந்த கேந்திர அலுவலகத்திலும், மணீசிகாவிலும், ஹௌராவிலும், மைக்கேல் நகரிலும் 25.07.10 அன்று குருபூர்ணிமை கொண்டாடப்பட்டது. மணீசிகாவில் டாக்டர் லெக்ஷ்மி நிவாஸ் ஓஜா குரு பரம்பரை பற்றி சிறப்புரை ஆற்றினார்.

12.09.10 ஞாயிறு அன்று உலக சகோதரத்துவ தினம் கொண்டாடப்பட்டது. டாக்டர் அருண் உபாத்யாயா **ஊருக்குழைத்திடல் யோகம்** நூல் பற்றி ஆராய்ச்சி செய்தார். மா. பானுதாஸ்ஜி, மானனீய ஏக்நாத்ஜியின் வாழ்நெறியை உதாரணமாகக் காட்டினார். அதுவே ஒரு சாதனை என்று கூறினார். கீதை நாள் 17.12.10 அன்று கொண்டாடப்பட்டது. சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் ஆண்டு விழாவும், சமர்த்த பாரதப் பருவமும் கொண்டாடப்பட்டன. துணைத் தலைவி குமாரி நிவேதிதா தீதி சிறப்புச் சொற்பொழிவாளராக வந்திருந்தார். பாய்ஸ் ஓண் ஹால் மண்டப நூலகத்தில் 15.01.11 அன்று இவ்விழா நடந்தது. நூறு பேர் வந்திருந்தனர். ஆலம்பஜார் மடத்தின் ராமகிருஷ்ண சத்யானந்தம் ஆசிரம செயலாளர் சுவாமி சாரதாத்மானந்தா முக்கிய விருந்தினர் ஆவார். நேதாஜி உள் அரங்கத்தில்நடந்த புத்தகக் கண்காட்சிக்கு நல்ல வரவேற்பு இருந்தது.

### விவேகானந்த கேந்திரம் பாட்னா

**கிளைகள்:** 1) பாகல்பூர், 2) கயா, 3) முங்கேர், 4) பாட்னா

**வெல்க வெல்கவே** இயக்கத்தின் கீழ் ஒரு போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. பாட்னா கிளை விவேக செய்தி என்ற தலைப்பில் தினக்கர் கோலாம்பரில் ஒரு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தது. பாகல்பூர் கேந்திரம் உலக சகோதரத்துவ தினம், கீதை தினம், சுவாமிஜி பிறந்த நாள், சமர்த்த பாரதப் பருவம் இவற்றைக் கொண்டாடிற்று.

## அஸ்ஸாம் பிராந்தியம்

**கிளை மையங்களாவன:** 1) போர்டோலோனி, 2) போகாக்காட், 3) சாபுவா, 4) தேமாஜி, 5) திப்ரூகட், 6) கோலாகாட், 7) குவாஹாட்டி, 8) வி.கே.ஐ.ஸி.

குவாஹாட்டி, 9) ஜோர்ஹாட், 10) காமர்காம், 11) கட்கட்டி, 12) லக்கிம்பூர், 13) லும்டிங், 14) மங்கள்தோய், 15) வி.கே.என்.ஆர்.எல் மருத்துவமனை, 16) சிவசாகர், 17) தேஜ்பூர், 18) வி.கே.எஸ்.பி.வி

அஸ்ஸாம் பிராந்தியத்தில் 18 விஸ்தாரங்களும், 44 மக்கள் தொடர்பு விஸ்தாரங்களும் 297 பொறுப்புள்ள தொண்டர்களும் பணி புரிகின்றனர். 49 அமர்வுகளுக்கு, கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. 1777 பேர் வந்திருந்தனர். சாதனை தினம், கீதை தினம், சமர்த்த பாரதப் பருவம், உலக சகோதரத்துவ தினம், குருபூர்ணிமா ஆகியவற்றில் நிறையப் பேர் வந்திருந்தனர். இவ்வாண்டில் 46 புரவலர்களும், 82 சந்தாதாரர்களும் சேர்க்கப்பட்டனர். நன்னூல் ஓதும் வகுப்புக்களில் 58 பள்ளிகளில் 48 முகாம்களும் இணைந்தன. 2028 மாணவர்கள் பங்கேற்றனர். யோகத் தொடர் பயிற்சிகளில் 72 மாணவர்கள் பயின்றனர்.

முதிர்நிலை தொண்டர் பயிற்சி முகாமுக்கு இரண்டு பேர் அனுப்பப்பட்டனர்.

## ஒடிஷா பிராந்தியம்

**இதன் கிளை மையங்களாவன:** 1) பாலேஷ்வர், 2) பாரிபாதா, 3) பிரம்மபூர், 4) புவனேஷ்வர், 5) குஸ்ப்பூர், 6) உத்கல் சேவைத் திட்டம், 7) கேண்டுஜார்

விவேகானந்த கேந்திர ஒடிஷா பணிகள் 34 சேவை மையங்கள் மூன்று மாவட்டங்களில் இயங்குகின்றன. ஏழு நகரங்களில் மாவட்ட மையங்களில் மக்கள் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஏழு புதிய நகரங்களில் மக்கள் தொடர்பு மையங்கள் நன்னூல் ஓதும் வகுப்பு மூலம் நடைபெறுகின்றன. கிளை மையங்கள் பணிகள் ஆறு நகர மையங்கள் மூலம் நடக்கின்றன. மொத்தம் 13 மாவட்டங்கள் கேந்திர பணிகளுள் வருகின்றன. 2009-10-ல் பொறுப்புள்ள தொண்டர்கள் 181 பேர் இருந்தனர். இவ்வாண்டு 2242 உயர்ந்துள்ளது. பணித்திட்டங்கள், நகர மையங்கள் இவற்றில் அடங்கும்.

### கொண்டாட்டங்கள்

மற்ற உற்சவங்களோடு கூட விவேகானந்தர் பிறந்த நாளைக் கொண்டாட இவ்வாண்டு சிறப்பு முக்கியத்துவம் தரப்பட்டது. பல்வேறு ஹிந்து அமைப்புக்களும் இணைந்துள்ளன. சமர்த்த பாரதப் பருவமும், விவேகானந்தர் பிறந்த நாளும், 92 இடங்களில் கொண்டாடப்பட்டன. 8367 பேர் கலந்து கொண்டனர்.

சாதனை தினம், கீதை தினம், குரு பூர்ணிமா 29 இடங்களில் கொண்டாடப்பட்டன. 2000 பேர் வருகை புரிந்தனர்.

பிரம்மபுரம் கிளை கேந்திரம் ஏழு நாள் உடனுறை ஆளுமை பயிற்சி முகாமை நடத்திற்று. ஒருநாள் முகாம்களையும் நடத்திற்று. 27.05.10 அன்று பிரம்மபூர் கேந்திர அலுவலகத்தில் பண்பாட்டு வகுப்பு பயிற்சி கொடுக்கப்பட்டது. நன்னூல் ஓதும் தேர்வு எழுமின்! விழிமின்!! என்ற பெயரில் இளைஞர் போட்டிகள் 13 மாவட்டத்தில் நடத்தப்பட்டன. 543 பேர் பங்கேற்றனர். யோக ப்ரதிமான், சிரித்துக் கொண்டே பரீட்சை எழுதுங்கள், ஆகியவற்றில் பத்து இடங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. 626 பேர் பங்கேற்றனர்.

இவ்வாண்டு யோக ப்ரதிமான் நிகழ்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. எண்ணிக்கை அதிகரித்தது. உள்ளூர் தொண்டர்கள் பயிற்சி முகாம் ஐந்து இடங்களில் நடந்தது. 53 பேர் பயின்றனர். குறுகிய காலத் தொண்டர்களாக நான்கு பேர் சேர்ந்து கேந்திரப் பணிகளில் ஈடுபட்டனர்.

**நன்னூல் விற்பனை:** இவ்வாண்டு 51,717/- ரூபாய்க்கு கேந்திரப் புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டன. (போன ஆண்டு ரூ. 42,895/-) பிறரது வெளியீடுகள் ரூ. 31,710/-க்கு விற்பனை செய்யப்பட்டது. (போன ஆண்டு ரூ. 28,081/-)

## மஹாராஷ்டிரம் பிராந்தியம்

இம்மாநிலத்தில் நான்கு விபாக்குகள் (பிரிவுகள்) உள்ளன. 22 கேந்திரங்கள் உள்ளன. 11 நகரங்களும், 12 பணிமையங்களும், 37 பணி விஸ்தாரங்களும் தொண்டு புரிகின்றன. 132 மக்கள் தொடர்பு விஸ்தாரங்கள் பணியாற்றுகின்றன. பொறுப்பேற்ற தொண்டர்கள் 357 பேர்.

222 அமர்வுகள், கூட்டங்கள் நடத்தப்பட்டன. 2315 பேர் கலந்து கொண்டனர்.

**உற்சவங்கள்:** சாதனை தினம், கீதை தினம், குருபூர்ணிமை, சமர்த்த பாரதப் பருவம், விவேகானந்தர் பிறந்த நாள், உலக சகோதரத்துவ தினம் ஆகியவற்றில் 15,000 பேர் பங்கேற்றனர்.

144 புரவலர்கள், 994 சந்தாதாரர்கள், 105 அருணாச்சல் பந்து பரிவார் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர். கேந்திர வெளியீடுகள், பரிசுப் பொருள்கள், எட்டு லட்சம் ரூபாய்க்கு விற்கப்பட்டன. நன்னூல் ஓதும் போட்டிகள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பட்டமேற்படிப்பு கல்லூரிகளிலும் நடத்தப்பட்டன. 14 முகாம்களும் நடந்தன. 1000 மாணவர்கள் கலந்து கொண்டனர். இளைஞர் எழுச்சி முகாம்கள், யோக முகாம்கள், ஆன்மீகப் பயிற்சி யோகத் தொடர் வகுப்பு ஆகியவற்றில் 2400 பேர் பங்கேற்றனர். பண்பாட்டு வகுப்புக்கள், உள்ளூர்த் தொண்டர் பயிற்சி ஆகியவை நன்கு நடத்தப்பட்டன. ஆறுபேர் குறுகிய கால முழுநேரத் தொண்டர்களாக சேர்ந்தார்கள்.

நாஷிக் விபாக்

இந்த விபாக்கில் 1) அவுரங்கபாத், 2) தூலே, 3) ஜலகாம், 4) ஜால்னா, 5) மாலேகாம், 6) நாஷிக், 7) பர்பணி ஆகிய கிளைகள் உள்ளன.

விவேகானந்த கேந்திர பயிற்சி சேவைப்பணி பிம்ப்லாதில் நடைபெறுகிறது. எங்கள் பாரதம் அமர பாரதம் என்ற நூலை அடிப்படையாக வைத்து பேராசிரியர்களுக்கு ஒரு கருத்தரங்கம் நடத்தப்பட்டது. சிங்க நாதம் என்ற சொற்பொழிவுத் தொடர் ஆரம்பிக்கப்பட்டது. 20 பேராசிரியர்கள் வந்திருந்தனர். 19 நிகழ்ச்சிகளில் 2800 பேர் பங்கேற்னர்.

புணே விபாக்

1) சிஞ்ச்வாட், கர்மலா, புணே, சாங்க்ளி, ஸத்தாரா, மராட்டி ப்ரகாசன் (ஸோலாப்பூர்) & வாயி

ஆளுமை வளர்ச்சி முகாமில் 21 மாணவர்களும், 26 மாணவிகளும் பங்கேற்றனர்.

விவேகானந்த சிந்தனை கட்டுரைப் போட்டி, பெண் சக்தி மேற்கத்தைய, கிழக்கத்தைய பண்பாடுகள், சமர்த்த பாரதம் ஆகியவற்றில் மஹாராஷ்டிரம் முழுவதில் இருந்து 240 கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

**1) தாசர் கூறினார். 2) ஷிடோரி** என்ற இரு மராட்டி நூல்கள், சுனில் சிஞ்சோல்கரால் வெளியிடப்பட்டன.

சமர்த்த பாரதப் பருவம், விவேகானந்தர் பிறந்த நாள் படக்கண்காட்சியில் புத்தக விற்பனையும் எட்டு இடங்களில் நடைபெற்றது. 1800 பேர் வந்து கண்காட்சியைப் பார்த்துப் புத்தகங்கள் வாங்கினர். பேச்சுத் திறமையை வளர்க்க, சுவாமி விவேகானந்தர் கண்ட வீர இளைஞர்களை அடையாளம் காண, சிங்கநாதம் என்ற திட்டம் துவக்கி உள்ளது. 29 பேர் பங்கேற்றுத் தம் திறமையைக் காட்டினர். பூனா நகரத்தில் பெரும் தொகை நன்கொடையாக கிடைக்கிறது. இவ்வாண்டு கிடைத்த நன்கொடை

1) நிர்ஜூலி பள்ளிக் கட்டிடம் – ரூ. 37.4 லட்சம்

2) விவேகானந்த கேந்திர சேவை பயிற்சி பிம்ப்லாத் – 6.5 லட்சம்

3) சுவாமிஜி 150-ம் பிறந்த நாள் – 2.5 லட்சம்

4) அருணாச்சல் பந்து பரிவார் – 2.6 லட்சம்

5) புரவலர் – 1.5 லட்சம்

6) பொது நன்கொடை – 1.7 லட்சம்

## விதர்ப விபாக்

**கிளை மையங்கள்:** 1) சந்த்ரபூர், 2) நாக்பூர் 3) நாந்தேட்

1) விவேகானந்த கேந்திரம் பத்து முதல் 16 வயது வரை மாணவர்களுக்கு நடத்தி ஆளுமை வளர்ச்சி முகாமில் 76 குழந்தைகள் பங்கேற்றனர். அகில பாரத ராஷ்டிர சேவா சமிதி செயலாளர் ஸ்ரீமதி சாந்தாக்கா முக்கிய விருந்தினர் ஆவார். அவர் பெற்றோர்களுக்கு உரையாற்றினார்.

2) திருவிளக்குப் பூஜை, உலக சகோதரத்துவ தினம், கீதை தினம் இவற்றை நாக்பூர் கேந்திரம் நடத்திற்று.

3) நாக்பூரை அடுத்த காப்ரி என்ற ஊரில் உள்ளூர்த் தொண்டர் பயிற்சி நடைபெற்றது. ஸ்ரீ கிஷோர்ஜி, ஸ்ரீ விஸ்வாஸ்ஜி, ஸ்ரீ தனஞ்சை தொண்டர்களை வழிநடத்தினார்.

4) நான் விவேகானந்தன் பேசுகிறேன் என்ற ஒப்பித்தல் போட்டி நான்கு விஸ்தாரங்களில் நடைபெற்றது. ஒருநாள் முகாம்கள் இரண்டு இடங்களில் நடத்தப்பட்டன.

## மும்பாய் விபாக்

**கிளை மையங்கள்:** 1) அம்பர்நாத், 2) டோம்பிவ்லி, 3) வாஷி, 4) தானே

1) அமெரிக்காவில் சுவாமிஜி, 2) சுவாமிஜியை மறக்க முடியுமா? 3) நிறுவனங்களும், தொண்டர்களும் ஆகிய புத்தகங்கள் வெளியீட்டு விழா இரண்டு இடங்களில் நடைபெற்றது. தாதரில் 100 பேரும், தாணேயில் 150 பேரும் வந்திருந்தனர். ஸ்ரீ பிரகாஷ்பாட்டக்கும், பேராசிரியர் பிரவீண் தவானேயும் சிறப்புப் பேச்சாளர்களாக பொது நிகழ்ச்சியில் உரையாற்றினர்.

2) அம்பர்நாத் கிளை 500 மாணவர்களை பத்து பள்ளியில் இருந்து அழைத்து வந்து காலை ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்தது. கேந்திர வாஷி கிளை ஒருமாத பண்பாட்டுப் பயிற்சி முகாமுக்கு ஏற்பாடு செய்தது.

3) 19.04.10 முதல் 20.05.10 வரை வாஷியில் நடந்த இம்முகாமில் 40 பேர் பயின்றனர்.

4) ஐ.சி.எல் பள்ளியில் பண்பாட்டு வகுப்பு திசை காட்டும் நிகழ்ச்சி நடைபெற்றது. 240 பேர் பங்கேற்றனர். தானே கல்லூரி வாசகர் வட்ட மாணவர்களும், வாஷி கிளையினரும் இந்நிகழ்ச்சியை நடத்தினர்.

5) தாதர் கிளை நடத்திய பகல்நேர பண்பாட்டு வகுப்பு முகாமில் 30 பேர் பயிற்சி பெற்றனர்.

## குஜராத் பிராந்தியம்

### அகமதாபாத் விபாக்

**கிளைகள்:** அகமதாபாத், பாவ்நகர், மோர்வி, பாலித்தானா, போர்பந்தர், ராஜ்கோட், சூரத், வடோதரா, வேராவல், கேந்திர குஜராத் பத்திரிக்கை வெளியீடு (ராஜ்கோட் – விவேகசுதா)

17.12.10 அன்று கீதை தினம் கொண்டாடப்பட்டது. சமர்த்த பாரதப் பருவத்தில் அகமதாபாத் நகரில் 8 கல்லூரிகளில் இருந்து 650 மாணவர்கள் பங்கு பெற்றனர்.

### வடோதரா விபாக்

வடோதரா கேந்திரத்தில் பொறுப்பேற்ற தொண்டர்கள் 35 பேர் உள்ளனர். 9 பணி விஸ்தாரங்களும், 5 மக்கள் தொடர்பு விஸ்தாரங்களும் இங்கு உள்ளன. 35 அமர்வுகள், கூட்டங்கள் நடத்தப்பட்டன. 18 பேர் புரவலர்களாகவும், 182 பேர் சந்தாதாரர்களாகவும், 20 பேர் அருணாச்சல் பந்து பரிவார் உறுப்பினர்களாகவும் சேர்ந்து கொண்டனர். சாதனை தினம், கீதை தினம், சமர்த்த பாரதப் பருவம், விவேகானந்தர் பிறந்த நாள், குருபூர்ணிமை ஆகிய தினங்கள் கொண்டாடப்பட்டன. கேந்திர வெளியீடுகள் 22,316/– ரூபாய்க்கும், பிற புத்தகங்கள் 18,409/– ரூபாய்க்கும், பரிசுப் பொருள்கள் 24,507/– ரூபாய்க்கும் விற்கப்பட்டன.

நன்னூல் ஓதும் போட்டியில் 1050 பள்ளி மாணவ, மாணவியரும், 100 கல்லூரி மாணவர்களும் பங்கேற்றனர்.

இரண்டு தொடர் யோக வகுப்புக்களிலும், ஐந்து பண்பாட்டு வகுப்புக்களிலும் 100 பேர் வருகை தந்தனர்.

முதிர்நிலை தொண்டர் பயிற்சிக்கு ஏழு பேர் கன்னியாகுமரி சென்று வந்தனர்.

### ராஜ்கோட் விபாக்

வழக்கமான நடவடிக்கைகளோடு பல்வேறு நிகழ்ச்சிகளும் இந்த விபாக்கில் நடத்தப்பட்டன. சாதனை தினம், கீதை தினம், சமர்த்த பாரதப் பருவம், விவேகானந்தர் பிறந்த நாள் ஆகியவற்றில் 1422 பேர் பங்கேற்றனர். தொண்டர் பயிற்சி முகாமுக்கு கன்னியாகுமரிக்கு 9 பேர் அனுப்பப்பட்டனர்.

ஒப்பித்தல் போட்டி, பேச்சுப் போட்டி இவற்றில் 1085 பேர் பங்கேற்றனர். ஏழு முகாம்களில் 630 பேர் பயின்றனர். யோக வகுப்பு, பண்பாட்டு வகுப்பு, நன்னூல் ஓதும் வகுப்பு ஆகியவை நடத்தப்பட்டன.

## மத்திய பிராந்தியம்

இதன் கிளைகள் படுவா, பீண்ட், போபால், தார், குவாலியர், குணா, ஹர்தா, இந்தோர், ஜபல்பூர், ஜாண்சி, கண்ட்வா, மந்தசோர், ராகவ்கடு, ரீவா, சாகர், உஜ்ஜயினி, விதிஷா.

பகுதிநேர ஆளுமை வளர்ச்சி முகாம்கள் 63 நடத்தப்பட்டன. 8782 பேர் பங்கேற்றனர். உடனுறை ஆளுமை வளர்ச்சி முகாம்களில் 273 பேர் பயின்றனர். இவை குவாலியரிலும், ஜான்சியிலும், போபாலிலும் நடந்தன. உள்ளூர் தொண்டர் பயிற்சி முகாம்கள் ஏழு நாட்களுக்கு நடத்தப்பட்டன. நான்கு முகாம்களில் 123 தொண்டர்கள் பயிற்சி பெற்றனர்.

### விவேக சந்தேசம் (விவேக செய்தி)

விவேகானந்தர் பிறந்த நாள் அன்று **விவேக செய்தி** நிகழ்ச்சி இந்தோர், குவாலியர், போபால் விபாகங்களில் நடத்தப்பட்டன. விவேகானந்தரின் படக்கண்காட்சி, புத்தக விற்பனை ஆகியவை நடந்தன. 10,000 பேருக்கு மேல் பயனடைந்தனர். அவர்கள் 5,000 அஞ்சல் அட்டைகளை எழுதினர்.

சமர்த்த பாரதப் பருவம், விவேகானந்தர் பிறந்த நாள் ஆகியவற்றை இந்தப் பிராந்தியம் 96 கல்லூரிகளிலும், பொது இடங்களிலும் நடத்திற்று. மொத்தம் 14,200 பேர் பங்கேற்றனர்.

இந்தோர் விபாகத்தில் கண்ட்டுவாவில் புத்தகக் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. ரூ. 2500-க்கு புத்தகங்கள் விற்றன. இந்தோர், குவாலியர், போபால் விபாகங்களில் புத்தக விற்பனையில் 10,000/- ரூபாய் வந்தது. கேந்திர மையங்களில் மாலை பஜனை, ஒழுங்காக நடந்தது.

விவேக சிந்தனையின் கலந்துரையாடல் ஒவ்வொரு மாதமும், போபாலில் நடந்தது. பிரமுகர்களாக டாக்டர் பி.எல். சதுர்வேதி, ஸ்ரீ திரேந்திரா, டாக்டர் தெய்வநேந்திர தீபக், ஸ்ரீ முக்குல் கானிட்கர், டாக்டர் ஜிதேந்திர பஜாஜ், டாக்டர் சுப்பிரமணிய சுவாமி, ஸ்ரீ கிஷோர் டோகேகர், நீதி அரசர் என்.கே. ஜெயின் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினர். சில தலைப்புக்களைப் பற்றிப் பொதுக் கருத்தை உருவாக்குவதும் தொண்டர்களை இணைப்பதும் இப்பணியின் நோக்கம் ஆகும்.

### செயல் திட்டம்

78 பண்பாட்டு வகுப்புக்களில் 1263 பேர் பங்கேற்றனர். 21 நன்னூல் ஓதும் வகுப்புக்களில் 352 பேர் கலந்துரையாடினர். 7 யோக வகுப்புக்களில் 80 பேர் பயிற்சி பெற்றனர்.

## உத்தர் பிராந்தியம்

### டெல்லி விபாக்

**கிளை மையங்கள்:** 1) துவாரகா, 2) தெற்கு டெல்லி, 3) மேற்கு டெல்லி, 4) கிழக்கு டெல்லி, 5) வடக்கு டெல்லி, 6) விவேகானந்தா இண்டர்நேஷனல் பவுண்டேசன்,

பணி மையங்கள் நான்கும், நகர் மையங்கள் இரண்டும், மக்கள் தொடர்பு மையங்கள் 50-ம் இங்கு இயங்குகின்றன.

சாதனை நாள், கீதை தினம், சமர்த்த பாரதப் பருவம், குருபூர்ணிமை, உலக சகோதரத்துவ தினம், விவேகானந்தர் பிறந்த நாள் ஆகிய நன்னாட்கள் கொண்டாடப்பட்டன.

31.12.10 அன்று கீதை தினம் கொண்டாடப்பட்டது. பச்சிம் விஹாரில் உள்ள ஆரிய சமாஜ கோவிலில் இவ்விழா கொண்டாடப்பட்டது. சுவாமி யசதரானந்தா சரஸ்வதி தலைமை விருந்தினராக உரையாற்றினார்.

விவேகானந்தர் பிறந்த நாள் விழா: ஹரிநகரில் 5 நாள் நடந்த வெல்க வெல்கவே இளைஞர் முகாமின் கடைசி நாளில் 105 முகாம் உறுப்பினர்கள் சாணக்யபுரி விவேகானந்த இண்டர்நேஷனல் பவுண்டேசனில் வந்து குழுமினர். விவேகானந்தர் பிறந்த நாளைக் கொண்டாடினர். இதில்ஸ்ரீ அஜித் தோவால்ஜி, பயங்கரவாத எதிர்ப்பு முன்னணியின் தலைவர் ஸ்ரீ எம்.எஸ். பிட்டா, இணை பிராந்திய தலைவர் ஸ்ரீ மகாஜன்ஜி, புகழ்பெற்ற எழுத்தாளர் ஸ்ரீ நரேந்திர ஹோக்லி ஆகியோர் தலைமை வகித்தும் சிறப்புரை ஆற்றியும் சுவாமிஜியின் வாழ்க்கையின்அற்புதமான சம்பவங்களை எடுத்துரைத்தனர். மாணவர்கள் முகாம் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

உலக சகோதரத்துவ தினத்தை டெல்லி கேந்திரம் காவேரி மாணவர் விடுதியில் ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழக வளாகத்தில் கொண்டாடிற்று. சுவாமி விவேகானந்தர் தலைமைப் பண்பின் திறவுகோல் என்ற தலைப்பில் ஸ்ரீ முக்குல் கானிட்கர் சிறப்புரை ஆற்றினார். 70 மாணவர்கள் பங்கேற்றனர். 16.09.10 அன்று பாரதி வித்யா பீட நிர்வாக ஆராய்ச்சிக் கழகத்தில் உலக சகோதரத்துவ தினம் கொண்டாடப்பட்டது. மாணவர்களும், துறை தலைவர்களுமாக 200 பேர் பங்கேற்றனர்.

விவேகானந்த கேந்திரமும் டெல்லி பல்கலைக்கழக ஹன்ஸ்ராஜ் கல்லூரி தேசீய சேவை திட்டத்தினரும் இணைந்து உலக சகோதரத்துவ தினத்தை கல்லூரி அவைக்கூடத்தில் கொண்டாடினர். டெல்லி நிர்வாக இயல் கழகம் உலக சகோதரத்துவ தினம், குருபூர்ணிமை இவற்றைக் கொண்டாடிற்று. 200 பேர் வந்திருந்தனர்.

**விமர்ச** என்ற நிகழ்ச்சியில் 52 பேர் பங்கேற்றனர். அரசியலில் தருமம், ஏன் தேவை என்ற தலைப்பில் பஞ்சாப் உயர்நீதிமன்ற முன்னாள் நீதி அரசர் ஸ்ரீ எம்.ஜே. வாரியா சிறப்புரை ஆற்றினார்.

டெல்லி மகாநகரத்தில் இரண்டு நாள் பகுதிநேர ப்ரதிமான் சகயோக் (தம்பதியர் முகாம்) நடத்தப்பட்டது. ஒற்றுமையை உணர்தல், பெற்றோரின் அன்புப்

பணி, லட்சியக் குடும்பம், செயலில் உறுதி ஆகிய தலைப்புக்களில் அமர்வுகள் நடந்தன.

## இராஜஸ்தான் பிராந்தியம்

**கிளைகள்:** 1) அகுனாச்சா, 2) அஜ்மீர், 3) பியாவார், 4) பீல்வாடா, 5) டீட்வானா, 6) ஜெய்ப்பூர், 7) விவேகானந்த கேந்திர ஹிந்திப் பிரகாசன் ஜோத்பூர், 8) கிசன்கடு, 9) கோட்டா, 10) ராஜசமந்த், 11) உதய்பூர்

இந்தப் பிராந்தியத்தில் 20 பணி விஸ்தாரங்களும், 23 மக்கள் தொடர்பு விஸ்தாரங்களும், 182 பொறுப்பேற்கும் தொண்டர்களும் பணிபுரிகின்றனர். இவ்வாண்டில் 69 அமர்வுகள், கூட்டங்கள் நடத்தப்பட்டன. இப்பிராந்தியத்தில் 132 புரவலர்களும், 397 சந்தாதாரர்களும், 29 அருணாச்சல் பந்து பரிவார் உறுப்பினர்களும் உள்ளனர்.

சாதனை நாள், கீதை தினம், சமர்த்த பாரதப் பருவம் இரண்டு இடங்களில் குருபூர்ணிமை, 7 இடங்களில் உலக சகோதரத்துவ தினம், விவேகானந்தர் பிறந்த நாள் ஆகியவை கோலாகலமாக எல்லாக் கிளை மையங்களிலும் கொண்டாடப்பட்டன.

இராஜஸ்தான் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் ஸ்ரீ பி.எல். சர்மா தலைமையில் ஜெய்ப்பூரில் விவேகானந்தர் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது. பீல்வாடாவில் முன்னாள் ஆர்கனைசர் பத்திரிக்கை ஆசிரியர் சேஷாத்ரி சாரி சிறப்புரை ஆற்றினார். இக்கூட்டத்தில் அகில பாரத விவஸ்தா பிரமுக் குமாரி அபர்ணாஜி தாய்நாட்டுக்கு தொடர்ந்து உழைக்கும்படி தொண்டர்களை அறைகூவி அழைத்தார்.

இராஜஸ்தானத்தில் 7 இடங்களில் உலக சகோதரத்துவ தினம் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் 1613 பேர் பங்கெடுத்துக் கொண்டனர். அஜ்மீர் அரசு பொறியியல் கல்லூரியில் உலக சகோதரத்துவ தின நிகழ்ச்சியில் குமாரி நிவேதிதா தீதியின் சொற்பொழிவைக் கேட்டு பல மாணவர்கள் உற்சாகம் பெற்றனர்.

**எழு விழி முகாம் :** அஜ்மீரில் இளைஞர்களுக்கு இம்முகாம் நடத்தப்பட்டது. பல இடங்களில் இருந்து 154 இளைஞர்கள் வந்து கலந்து கொண்டனர்.

**விவேகானந்தா வாசகர் வட்டம்:** கல்லூரிகளில் நடக்கும் இளைஞர்கள் கூட்டத்தில் நன்னூல்கள் ஓதி விவாதிக்கப்படும். அஜ்மீரில் இரண்டு பொறியியல் கல்லூரிகளில் இரண்டு வாசகர் வட்டங்கள் இயங்குகின்றன. சுவாமிஜியின் 150-வது பிறந்த நாள் விழாவுக்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. 13.02.11 அன்று ஜெய்ப்பூர் மையத்தில் நடந்த முக்கிய கூட்டத்தில் கேந்திரத்தின் இணைப் பொதுச் செயலாளர்கள் ஸ்ரீ கிஷோர் டோகேகரும், குமாரி ரேகா தவேயும்

கூட்டத்தை நடத்தினர். இராஜஸ்தானத்தில் 150-வது பிறந்த நாள் விழாவை எப்படி நடத்துவது என்று விவாதித்தனர். இராஜஸ்தானத்தில் பிராந்திய அதிகாரிகளும், விபாக் அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## தெற்கு பிராந்தியம்

### ஆந்திரப் பிரதேசம் - ஹைதராபாத்

ஹைதராபாத்தில் கேந்திரத்திற்கு நான்கு கிளைகள் உள்ளன. 1) அமீர்பேட்டை, 2) தில்சுகநகர், 3) பாக்லிங்கம் பள்ளி, 4) கச்சிகூடா

இது கேந்திரத்தின் மிகப்பழமையான மையங்களில் ஒன்று ஆகும். 200 நிகழ்ச்சிகளில் 15,000 பேர் பங்கேற்றனர். தேசீய இளைஞர் தினம், உலக சகோதரத்துவ தினம், சாதனை தினம், கீதை தினம், சங்கரர் பிறந்த நாள் ஆகியவை மகிழச்சியுடனும், கண்ணியத்துடனும் கொண்டாடப்பட்டன. தியான வகுப்பு, யோக வகுப்பு, ஆங்கிலம் பேசும் பயிற்சி, ஆளுமை வளர்ச்சி ஆகிய வகுப்புக்கள் ஒழுங்காக நடந்தன.

தீப பூஜையும், அமுதசுரபியும் 1100 பேர் பங்கேற்புடன் இயங்குகின்றன. இலவச மருத்துவ முகாம், கண் முகாம் இவையும் நடந்தன. 2100 பேர் பயனடைந்தனர். கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

### கர்நாடகம், பங்களூரு

**கிளை மையங்கள்:** 1) பங்களூரு, 2) வி.கே.வி. கள்ளபாலு, 3) தார்வாடு, 4) மங்களூரு, 5) மைசூர்

மூன்று யோக வகுப்புக்களும், ஒரு நன்னூல் ஓதும் வகுப்பும், நான்கு பண்பாட்டு வகுப்புக்களும், 14 தொடர் யோகப் பயிற்சிகளும், 10 நாள் தியான வகுப்பும் நன்கு நடந்தன. 450 குழந்தைகள் பங்கேற்றனர்.

ஆனந்தாலயம் என்ற பெயரில் நற்குணக்கல்வி ஏழை மாணவர்களுக்கு நடத்தப்படுகிறது. இரண்டு இடங்களில் 10-ம் வகுப்பு வரை படிக்கும் 78 மாணவர்கள் பயன் அடைகிறார்கள். இலவச மருத்துவ சேவை, இலவச கம்பியூட்டர் வகுப்பு, இலவச பரதநாட்டிய வகுப்பு (12 பேர்) நடத்தப்பட்டன.

அன்னதான நிகழ்ச்சிகளில் 960 பேர் பங்கேற்றனர். கேந்திரத்திலும், அருகில் உள்ள இரண்டு கோவில்களிலும், புறநகர்களிலும் திருவிளக்குப் பூஜை நடத்தப்பட்டது. சிவராத்ரி அன்று நடந்த சிவபூஜையில் 180 பேர் கலந்து கொண்டனர். 400 மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கப்பட்டது. ஏழைகளுக்கு 7 சைக்கிள்களும் வழங்கப்பட்டன.

மூன்று இடங்களில் குரு பூர்ணிமையும், உலக சகோதரத்துவ தினமும் கொண்டாடப்பட்டன. 700 பேர் வருகை புரிந்தனர். சாதனை தினத்தில் 70

தொண்டர்கள் பயிற்சி பெற்றனர். கீதை தினம் மூன்று இடங்களில் கொண்டாடப்பட்டது.

சமர்த்த பாரதப் பருவம், விவேகானந்தர் பிறந்த நாள் ஆகியவற்றின் போது 8 இடங்களல் விவேகானந்தர் படக்கண்காட்சி அமைக்கப்பட்டது. 8000 பேர் அதைக் கண்டனர். பண்பாட்டுப் போட்டி, விளையாட்டுப் போட்டி 9 பள்ளிகளில் இருந்து 98 மாணவர்கள் பங்கேற்றனர். ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி, ரத சப்தமி ஆகியவையும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டன. 128 யோக முகாமினர் சமூக சூரிய நமஸ்காரத்தை 101 தடவை போட்டனர்.

## தமிழ்நாடு

**கிளைகள்:** 1) சென்னை, 2) கேந்திரப் பிரகாசன் அறக்கட்டளை (சென்னை), 3) கோயம்புத்தூர், 4) நார்டெப் (கல்லுவிளை), 5) வி.கே.வி. கன்னியாகுமரி, 6) மதுரை, 7) தூத்துக்குடி, 8) வி.கே.வி. வள்ளியூர்

### மதுரை கிளை

இங்கு நடந்த குடும்ப சம்மேளனத்தில் கேந்திர துணைத்தலைவி குமாரி நிவேதிதா தீதி முக்கிய உரையாற்றினார். 100 குடும்பங்கள் பங்கேற்றன. யோகத் தொடர் வகுப்புக்களில் 75 குழந்தைகளும், 21 முதியவர்களும் பயின்றனர். ஒரு ஆளுமை பயிற்சி முகாமில் 51 குழந்தைகள் பயனடைந்தனர். குருபூர்ணிமாவில் திரு. ந. கிருஷ்ணமூர்த்தி முக்கிய பேச்சாளர் ஆவார். 150 பேர் பங்கேற்றனர்.

உலக சகோதரத்துவ தினத்தில் 5 கல்லூரிகளில் 842 மாணவர்கள் கலந்து கொண்டார்கள். சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள் விழாவில் 700 பேர் பங்கேற்றனர். ஸ்ரீராமகிருஷ்ணர் பிறந்த நாள் விழாவில் 200 பேர் கலந்து கொண்ட திருவிளக்குப் பூஜை நடத்தப்பட்டது.

கோயம்புத்தூரில் இரண்டு பொறுப்பேற்ற தொண்டர்களும், ஒரு பணிவிஸ்தாரமும், ஒரு மக்கள் தொடர்பு விஸ்தாரமும் இயங்குகின்றன. 20 அமர்வுகளில் 250 பேர் வருகை தந்தனர். சாதனை தினம், கீதை தினம், சமர்த்த பாரதப் பருவம் ஆகியவை கொண்டாடப்பட்டன. சமர்த்த பாரதப் பருவத்தில் மூன்று இடங்களில் 1900 பேர் பங்கேற்றனர். குருபூர்ணிமா, உலக சகோதரத்துவ தினம், சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள் ஆகியவை கொண்டாடப்பட்டன. பின்வரும் முகாம்கள் அமைக்கப்பட்டன. 1) ஆளுமை வளர்ச்சி முகாம் – பள்ளி மாணவர்கள் 200 பேர், 2) இளைஞர் எழுச்சி முகாம்கள் நான்கு, 650 பேர் பங்கேற்றனர். 3) வெல்க வெல்கவே ஒருநாள் முகாம்கள் பத்து – 1500 பேர் பங்கேற்பு, 4) யோக பிரதிமான் சமர்த்த மூன்று முகாம்கள் – 1150 பங்கேற்பு, 5) சிரித்துக் கொண்டே பரீட்சை எழுதுங்கள் மூன்று முகாம்கள் – 450 பேர், 6) சிறப்பு விருந்தினர் சொற்பொழிவுகள் ஐந்து – 4000 பேர் வருகை, 7) இரண்டு நாள் பண்பாட்டு வகுப்பு முகாம் – 35 பேர் பங்கேற்பு, 8) விவேகானந்தர் பிறந்த நாளில் இரண்டு போட்டிகள் – 800 குழந்தைகள் பங்கேற்பு.

1) பிரியம் கோஸ்வாமி பண்பாட்டு ஆய்வுச் சொற்பொழிவு – விவேகானந்த கேந்திர பண்பாட்டுக் கழகம்
2) பண்பாட்டு கழகச் சொற்பொழிவு ஸ்ரீ ஆர். ஹண்டிக்
3) மோனாபா கருத்தரங்கம் தவாங் அருணாச்சல்
4) பண்பாட்டுக் கழகம், ஸ்ரீ ம்ருணாள் மிரி ஏழாவது ராதாநாத் ஃபூக்கன் சொற்பொழிவு
5) மோன்பா கருத்தரங்கில் முதலமைச்சர் டோர்ஜி காண்டு சொற்பொழிவு ஆற்றுகிறார்
6) ஷிம்லாவில் புத்தக விற்பனை
7) பாட்னாவில் வெல்க வெல்கவே முகாமை துவக்கி வைக்கும் ஜெனரல் பக்ஷி
8) கல்கத்தாவில் கீதை தினக் கொண்டாட்டம்

1 & 2) நுமாலிகடு நடமாடும் மருத்துவ முகாம்

3) குஸ்ப்பூர் விவேகானந்தர் பிறந்த நாள் விழாவில் நிவேதிதா தீதி உரை நிகழ்த்துகிறார்

4) புவனேஸ்வர் பண்பாட்டு வகுப்பில் சுவாமிஜி பிறந்த நாள்

5) தேசீய இளைஞர் தின பேரணி – வடக்கு ஒடிஷா பல்கலைக்கழகம்

6) பீஹார் சமர்த்த பாரதப் பருவம் – பாகல்பூர்

7) பாட்னாவில் உலக சகோதரத்துவ தின விழா துவக்கம்

8) பாகல்பூரில் சமர்த்த பாரதப் பருவ நிறைவு விழா

1) மும்பை புத்தக வெளியீட்டு விழா
2) நாக்பூர் புத்தக விற்பனை
3) புணே புத்தக வெளியீட்டு விழா
4) புணே ஆளுமை வளர்ச்சி முகாம்
5) குஜராத் ஆளுமை வளர்ச்சி முகாம்
6) குஜராத் மணிநகரில் சிங்கநாத நிகழ்ச்சி
7) குஜராத் ராஜ்கோட்டில் தேசீய இளைஞர் தினம்
8) விவேகானந்த கேந்திரப் பண்பாட்டுக் கழகத்தின் டெல்லி நிகழ்ச்சி

1) டெல்லி நிகழ்ச்சியில் ஸ்ரீ கிஷோர்ஜி உரையாற்றுகிறார்
2) டெல்லியில் கீதை தினக் கொண்டாட்டம்
3) உலக சகோதரத்துவ தின விழா டெல்லி கேந்திரம்
4) இராஜஸ்தான் விவேகானந்தர் பிறந்த நாள் விழா
5) இராஜஸ்தான் சமர்த்த பாரதப் பருவம்
6) மத்திய பிராந்தியம் புத்தக விற்பனை
7) மத்திய பிராந்தியம் விமர்ஷ் சொற்பொழிவு
8) பங்களூரு உலக சகோதரத்துவ தினம்

# வி.கே.வி அறிக்கை

**நோக்கம் :** மனிதனை உருவாக்கி தேசத்தை நிர்மாணிக்கும் கல்வி கற்பித்தல்.

**நடவடிக்கைகள்:** உடனுறை பள்ளிகளும், பகல்நேரப் பள்ளிகளும் நடத்துதல், பள்ளிகள் இருக்கும் இடம், அருணாச்சல்பிரதேசம் – 33, அஸ்ஸாம் – 17, நாகாலாந்து – 1, அண்டமான் – 9, கர்நாடகம் – 1, தமிழ்நாடு – 3

கன்னியாகுமரி

இங்குள்ள மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியின் மாணவர்கள் எண்ணிக்கை 1146 ஆகும். இதன் பால்வாடியில் 182 குழந்தைளகள் பயிலுகிறார்கள். 53 ஆசிரியர்களும், 11 கல்விசார் பணியாளர்களும் தொண்டு புரிகின்றனர். 24.05.10 முதல் 26.05.10 வரை ஆசிரியர்களுக்கு திசை காட்டும் முகாம் கேந்திர துணைத் தலைவி குமாரி நிவேதிதா தீதியால் துவங்கி வைக்கப்பட்டது.

தேர்வு எழுதிய 61 மாணவர்களில் 58 பேர் 12-ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றனர். தேர்வு மார்ச் 2010-ல் நடந்தது. அதிக மதிப்பெண் 1154 / 2000

மார்ச் 2010-ல் நடந்த மெட்ரிக்குலேஷன் தேர்வில் அமர்ந்த நம் பள்ளி மாணவர்கள் 75 பேரும் வெற்றி பெற்றனர். நூற்றுக்கு நூறு சதம். முதல் மதிப்பெண் 482 / 500

கல்வி ஆண்டின் போது பின்வரும் போட்டிகள் நடந்தன. 1) குப்பையில் இருந்து கலைப் பொருள்கள், 2) விஞ்ஞான வினாடி வினா, 3) விஞ்ஞான கருவிகள் மாதிரிகள் தயாரித்தல், 4) மனக்கணக்கு, 5) வாய்ப்பாடு ஒப்பித்தல், 6) கவிதை எழுதுதல், 7) படத்துக்கு விளக்கம் அளித்தல் 8) உடனடி சொற்பொழிவு 8) சொல்வன்மை 9) கட்டுரை எழுதுதல், 10) ஆங்கில வினாடிவினா.

900 மாணவர்கள் - மாணவர் மன்றத் தேர்வு, ஹிந்தி பிரச்சார சபா, சம்ஸ்கிருதம், நற்குண நாயகர் விவேகானந்தர் ஆகிய தேர்வுகள் எழுதினர்.

**கொண்டாட்டங்கள் :** 1) குருபூர்ணிமை, 2) சுதந்திர தினம், 3) கோகுலாஷ்டமியும், ரக்ஷாபந்தனும், 4) வினாயகர் சதுர்த்தி, 5) ஆசிரியர் தினம், 6) உலக சகோதரத்துவ தினம், 7) குழந்தைகள் தினம், 8) சாதனை தினம், 9) கீதை தினம், 10) சமர்த்த பாரதப் பருவம், 11) சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள், 12) தேசீய இளைஞர் தினம், 13) வித்யாலய ஆண்டு விழா, 14) 2-வது குடியரசு தினவிழா.

பதினோராம் வகுப்பு மாணவர்களுக்கு 7 நாள் உடனுறை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது.

## வள்ளியூர்

இப்பள்ளி 1988-ம் ஆண்டு துவக்கப்பட்டது. மேல்நிலைப் பள்ளியாக உயர்ந்துள்ளது. 732 மாணவர்களும், 35 ஆசிரியர்களும், 8 கல்விசார் பணியாளர்களும் இப்பள்ளியில் உள்ளனர்.

பத்தாம் வகுப்பு தேர்வில் 85%-மும், பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் 84% -மும் மாணவர்கள வெற்றி பெற்றனர்.

12-ம் வகுப்பு முதல் மாணவன் ஆர். ராகேஷுக்கு வள்ளியூர் ஈஸ்வரி நர்சிங் ஹோமிங் டாக்டர் முத்து கிருஷ்ணன் 10,000/- ரூபாய் பரிசு அளித்தார். 10-ம் வகுப்பு முதல் மாணவி சி. முத்து லெக்ஷ்மிக்கு டாக்டர் லெக்ஷ்மணன் நினைவுப் பரிசாக ரூபாய் 5,000/- வழங்கப்பட்டது.

**சிறப்பு நிகழ்ச்சிகள்:** மாணவர் எண்ணிக்கை 732 ஆக உயர்ந்தது. எல்லா மாணவர்களுக்கும் பகவத்கீதையும், விஷ்ணு சஹஸ்ர நாமமும் கற்பிக்கப்படுகின்றன. எல்.கே.ஜி மாணவர் ஒருவர் கீதை ஓதும் போட்டியில் முதல் பரிசு பெற்றார். இன்னொரு மாணவர் மாநில அளவிலான கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்றார். அதிக விஞ்ஞானக் கருவிகளுடன் சோதனைச் சாலை வசதிகள் மேம்பட்டன. மாணவர்கள், பணித்திட்டங்களை மேற்கொள்ள உதவும் வண்ணம் நூலகத்திற்கு புதிய புத்தகங்கள் சேர்ந்தன. அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடம் துவக்கி வைக்கப்பட்டது. இதில் பத்து வகுப்பறைகள் உள்ளன. மாணவர்களின் விளையாட்டுத் திறமைகளை அதிகரிப்பதற்கு விளையாட்டுத்திடல் புதுப்பிக்கப்பட்டது. தாளாளர் எஸ்.கே. சுப்பிரமணியன் முயற்சியினால் மாணவர்களுக்கு பேருந்து வசதி கிடைத்திருக்கிறது.

கன்னியாகுமரி விவேகானந்த கேந்திரத்தில் இப்பள்ளி ஆசிரியர்களுக்கான திசைகாட்டும் முகாம் பள்ளி ஆண்டின் ஆரம்பத்தில் நடந்தது. பள்ளிகளுக்கு இடையிலான விளையாட்டுச் சங்கத்தில் மாவட்ட அளவில் நம் பள்ளியும் இடம் பெற்றுள்ளது. வாரத்துக்கு இரண்டு தடவை யோக வகுப்புக்களும், கராத்தே வகுப்புக்களும் நடக்கின்றன. ஓவியப் போட்டி, வினாடிவினா போட்டி இவற்றிலும் இப்பள்ளி மாணவர்கள் மூன்று பேர் பரிசு வென்றார்கள்.

## கொண்டாட்டங்கள்

ஜுன் இரண்டாம் தேதி ஆண்டு துவக்க விழா விவேகானந்தப் பாறை நினைவுச் சின்ன விழா கொண்டாடப்பட்டன. அன்னபூஜைக்கு மாணவர்கள் 300 கிலோ அரிசி கொடுத்தார்கள். 24.07.10 அன்று குருபூர்ணிமாவும், 15.07.10 அன்று காமராஜர் பிறந்தநாளும், சுதந்திர தினமும், கிருஷ்ண ஜெயந்தியும், ரக்ஷாபந்தனும், ஆசிரியர்கள் தினமும், உலக சகோதரத்துவ தினமும் செப்டம்பரில் கொண்டாடப்பட்டன.

மொத்தம் 33 பள்ளிகள் நடக்கின்றன. 1) அம்லியாங், 2) பாலிஜான், 3) பந்தர்தேவா, 4) பஸார், 5) பனாகர், 6) சாங்க்ளாங், 7) டாடோ, 8) ஜய்ராம்பூர், 9) ஜிர்டின், 10) ஜோராம், 11) கர்ஸாங், 12) கோலோரியாங், 13) குப்பாரிஜோ, 14) லிரோமோபா, 15) நியாஸா, 16) நிர்ஜுலி, 17) நிவேதிதா விஹார், 18) ஓயான், 19) ராகா, 20) ரோயிங், 21) செய்ஜோஸா, 22) ஷேர், 23) ஷேர்கான், 24) சூன்புரா, 25) தப்ரகாம், 26) ஓல்ட் ஜீரா, 32) ஜீரா, 33) இட்டாநகர்.

**விவேகானந்த கேந்திர வித்யாலயாக்கள்:** மேலும் மேலும் வளர்ந்து வருகின்றன. சென்ற ஆண்டு 29 பள்ளிகள் இருந்தன. இவ்வாண்டு 33 ஆகிவிட்டன. 11065 மாணவர்களும், 440 ஆசிரியர்களும், கல்விசார் பணியாளர்கள் 203 பேரும் இவற்றில் உள்ளனர். மார்ச் 2010-ல் நடந்த 12-ம் வகுப்பில் 78 சதவிகிதத்தினர் வெற்றி பெற்றனர். தேர்வுக்கு அமர்ந்த 172 பேரில் 148 பேர் தேர்ச்சி பெற்றனர். 10-ம் வகுப்புத் தேர்வில் 98.9 சதவிகிதம் வெற்றி கிடைத்தது. 726 பேர் தேர்வு எழுதினர். 718 பேர் தேர்ச்சி அடைந்தனர். ஐந்து மாணவர்கள் ஏ-1 கிரேடு பெற்றனர்.

அகில பாரத சீனியர் செகண்டரி தேர்வு முடிவுகள் (2010) மொத்தம் 232 மாணவர்கள் 80 சதவிகிதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்றனர். 13 பள்ளிகள் நூற்றுக்கு நூறு தேர்ச்சி பெற்றனர். 32 சதவிகித மாணவர்கள் 80-க்கு மேல் மதிப்பெண் பெற்றனர்.

**மாணவர்கள் முகாம் :** மாணவர்களுக்கு 13 முகாம்கள் வெவ்வேறு இடங்களில் நடத்தப்பட்டன. 1300 பேர் பயன் அடைந்தனர். அந்த முகாம்களுக்கு சர்கம், உத்சர்க், ப்ரதீயா என்று பெயர்.

உத்சர்க் நிகழ்ச்சியில் 10, 12-ம் வகுப்பு மாணவர்கள் ஜனவரி 2011-ல் கலந்து கொண்டனர். 18 வி.கே.வி-க்கள், மூன்று மேல்நிலைப் பள்ளிகள் இவற்றில் இருந்து 745 மாணவர்கள் பங்கேற்றனர். உத்சர்க் நிகழ்ச்சியில் பாரத விஞ்ஞான மரபு கழக இயக்குனர் டாக்டர் என். கோபால கிருஷ்ணன் சிறப்புரை ஆற்றினார். சிந்தனையைத் தூண்டும் பேச்சும், கேள்வி பதிலும் மாணவர்களின் மனத்தைக் குவிய வைத்தன. மாணவர்கள் இவ்வகுப்பைப் பாராட்டினர்.

**ஆசிரியர் பயிற்சி முகாம்:** வெவ்வேறு பள்ளிகளில் வெவ்வேறு பாடங்களுக்காக ஏழு ஆசிரியர்கள் பயிற்சி முகாம்கள் நடைபெற்றன. 202 ஆசிரியர்கள் பயன் அடைந்தனர். வி.கே.வி நிர்ஜுலியில் 11.10.10 அன்று நடந்த உடனுறைமுகாமில் ஐந்து வி.கே.வி-க்களைச் சேர்ந்த மேல்நிலை வகுப்பு ஆசிரியர்கள் 18 பேர் பயிற்சி பெற்றனர்.

ஜுலை, ஆகஸ்ட் 2010-ல் கணித ஆசிரியர்களுக்கு துவக்கப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி தரத்தில் பயிற்சி வகுப்புக்கள் நடந்தன.

விவேகானந்த கேந்திர அருணாச்சல் அறக்கட்டளையின் ஆதாரக் குழுவுக்கு நிர்வாகஇயல் பணிமனை நவம்பர் 2010-ல் நடந்தது. இக்குழுவின் கூட்டம் பிப்ரவரியிலும், இதன் அறங்காவலர்களின் கூட்டம் ஆகஸ்ட்-லும் நடந்தன. செப்டம்பரில் மேல்நிலைப் பள்ளி முதல்வர்கள் பள்ளி குழுக்களின் பொறுப்பாளர்கள் கூட்டம் நடந்தது.

**வெவ்வேறு போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்பு :** தேசீய விஞ்ஞான தினம், மாநில அளவில் குழந்தைகள் விஞ்ஞானக் கருத்தரங்கு வி.கே.வி-க்களிடையே நல்லுணர்வு வளர்ச்சி, வினாடிவினா, விஞ்ஞானக் கண்காட்சி, தேசீய அளவிலான குழந்தைகள் விஞ்ஞான மாநாடு (2010) ஆளுனரின் வினாடிவினா (2010) கீதை தினம், குடும்ப மாநாடு ஆகியவை திப்ரூகடில் அருணாச்சல் கல்வி அறக்கட்டளைக்கு நடத்தப்பட்டது. 40 பிரமுகர்கள் கேந்திரப் பள்ளிகளை இவ்வாண்டில் வந்து பார்வையிட்டனர். டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் இட்டாநகர் வந்த போது வி.கே.வி-யின் இசை வாத்தியக் குழு வரவேற்பு அளித்தது. இங்குள்ள நடமாடும் விஞ்ஞான சோதனை சாலை நன்கு பணியாற்றியது. வி.கே.வி ஆசிரியர்கள் அருணாச்சலில் நடந்த வெல்க வெல்கவே பெரிய முகாமில் பங்கேற்றனர்.

## *அருணாச்சல் பிரதேசத்தில் உற்சாகமூட்டும் செய்தி*

வி.கே.வி பந்தர் தேவாவில் செப்டம்பர் 2010-ல் 10-ம் வகுப்பு மாணவர்களின் பெற்றோர் கூட்டம் நடந்தது. அப்போது நிகழ்ந்த ஒரு சம்பவம் வியக்கத்தக்கது ஆகும். கூட்டத்தின் போது பெற்றோர்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறார்களா என்று கேட்டார்கள். சில பெற்றோர்கள் பதில் சொன்னார்கள். ஒரு பெண்மணி எழுந்து நின்று கூறினார். அவருடைய வீட்டில் இருந்து பள்ளிக்கு வரும் வழியில் பல இடைஞ்சல்கள் இருந்தாலும் அவர் இக்கூட்டத்திற்கு வந்திருந்தார். ஒரு இடத்தில் சாலை அடைபட்டு போய் விட்டது. பெரு மழையால் மண் சரிவு ஏற்பட்டுப் போக்குவரத்து நின்று விட்டது. எல்லைப்புற சாலை நிர்வாகத்தினர் சாலை திறப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறி விட்டார்கள். ஆனால் இந்தப் பெண்மணியோ வீட்டுக்குத் திரும்பிப் போகாமல் தன் வண்டியை அங்கேயே விட்டு விட்டு மலைமேல் ஏறி மண்சரிவின் மறுபுறத்தில் இறங்கி பல கிலோ மீட்டர்கள் நடந்து இன்னொரு வண்டியைப் பிடித்து பள்ளிக்கூடத்திற்கு வந்தார். இந்தக் கூட்டம் மிக முக்கியமானது என்று அவர் நினைத்ததால் தான் இவ்வளவு சிரமத்தையும் பாராமல் அவர் இங்கு வந்தார். இந்தக் கூட்டத்தில் தன் குழந்தையை மட்டுமின்றி ஆசிரியர்களையும், கேந்திரத் தலைவர்களையும் அவர் சந்தித்ததில் மகிழ்ச்சி அடைந்தார்.

**சமர்த்த பாரதப் பருவம் :** ஜனவரி 2011-ல் விஞ்ஞான தொழில் ஆராய்ச்சிக் கழகத்தின் முதிர்நிலை விஞ்ஞானி டாக்டர் என். கோபால கிருஷ்ணனின் பொது நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பொது மக்களுக்கென நடந்த நிகழ்ச்சிகளில் பல்வேறு தலைப்புக்களில் அவர் உரையாற்றினார். வி.கே.வி பள்ளிகள் குடியரசு தினத்திலும், அருணாச்சல் மாநிலத் தரம் பெற்ற கொண்டாட்ட நாளிலும் பங்கேற்றன. வி.கே.வி-க்களில் அன்னையர் வழிபாடு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## அஸ்ஸாம், நாகாலாந்து கல்வி இலாகா

**வி.கே.வி :** 1) பாடர்பூர், 2) பர்கோலாய், 3) போகுலோனி, 4) தேமாஜி, 5) திப்ரூகட், 6) காஜல்காம், 7) மாஜுலி, 8) கோலாகாட், 9) நல்பாரி, 10) சில்ச்சர், 11) ஏ.யு.சி. சில்ச்சர், 12) சிவ்சாகர், 13) சுக்லாய், 14) தேஜ்பூர், 15) திங்ராய், 16) தீன்சுக்கியா, 17) உம்ராங்சோ, 18) டோயாங் (நாகாலாந்து)

1) பள்ளிகளின் எண்ணிக்கை 15-ல் இருந்து 18-ஆக உயர்ந்து விட்டது. தேர்வு முடிவுகள் சிறப்பாக அமைவது தொடர்ந்து நடக்கிறது. இப்பள்ளிகளில் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 7872 ஆகும். 342 ஆசிரியர்களும், 135 கல்விசார் பணியாளர்களும் தொண்டு புரிகின்றனர். 10-ம் வகுப்பிலும், 12-ம் வகுப்பிலும் நூற்றுக்கு நூறு வெற்றியும் சிறப்பான மதிப்பெண்ணும் பெற்று குறிப்பிடத்தக்க பணியை இப்பள்ளிகள் ஆற்றின.

**2) கொண்டாட்டங்கள் :** குரு பூர்ணிமா, உலக சகோதரத்துவ தினம், சாதனை தினம், கீதை நாள், சமர்த்த பாரதப் பருவம் ஆகியவை அனைத்துப் பள்ளிகளிலும் கோலாகலமாக கொண்டாடப்பட்டன. 8000 பேர் பார்வையாளர்களாக வந்திருந்தார்கள். யோக வகுப்புக்கள், யோகத் தொடர் வகுப்புக்கள், பண்பாட்டு வகுப்புக்கள் ஆகியவை ஒழுங்காக நடந்தன. மக்கள் மிக நல்ல ஆதரவு அளித்தனர். 16 முகாம்கள், 10 பயிற்சி நிகழ்ச்சிகள் இவற்றால் 1500 மாணவர்கள் பயன் அடைந்தார்கள்.

**3) ஆசிரியர் பயிற்சியில்** வி.கே.வி ஆசிரியர்களோடு வேறு பள்ளி ஆசிரியர்களும் அழைக்கப்பட்டனர். 200 பேர் பயிற்சி பெற்றனர். 11 வி.கே.வி-க்ளைச் சேர்ந்த 38 மாணவர்களும், 12 ஆசிரியர்களும் அகில பாரத மருத்துவக் கழகம் ஐ.ஐ.ற்றி தேசீய இயற்பியல் சோதனைச் சாலை ஆகியவற்றை டெல்லியில் பார்வையிட்டனர். ஹரத்வாரில் தேவ பண்பாட்டுப் பல்கலைக்கழகத்திற்கும் சென்று வந்தனர்.

**4) திறந்த வெளி வெப் தொழில் நுணுக்கம் :** மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் தொழில் நுணுக்க அறிவை மேம்படுத்த மூன்றாவது, நான்காவது பணிமனைகள் நடத்தப்பட்டன. மொத்தம் ஆறு வலைத்தளங்கள் துவங்கி உள்ளன.

இவ்வாண்டில் நான்கு வி.கே.வி-க்கள் தங்களுடைய பத்தாண்டு நிறைவைக் கொண்டாடின. பர்கோலாய், டோயாங், போகுலோனி, உம்ராங்சோ ஆகியவை.

ஆரிய பட்டர் விஞ்ஞான ஆராய்ச்சித் திட்டமும், விவேகானந்த விளையாட்டு பெரு விழாவும் நாகாலாந்தில் வி.கே.வி டோயாங்கில் நடத்தப்பட்டன. விளையாட்டுப் போட்டி வி.கே.வி பர்கோலாயில் நடத்தப்பட்டது. இதில் வி.கே.வி மாணவர்கள் பங்கேற்றனர். இவை இப்பள்ளிகளின் 10-ம் ஆண்டு விழாவைக் குறிக்கும்.

தீன்சுக்கியா பள்ளியின் 12-ம் வகுப்பு மாணவர் பிரகாஷ்சிங் கௌரவமிக்க ஆதித்ய பிர்லா கல்வி ஊக்கத் தொகையை வென்றார். அபிமன்யு தாசும், சுலப் அகர்வாலும் 2010-ம் ஆண்டு தேசீய மாணவர் விஞ்ஞான மாநாட்டில் மிகச்சிறப்பாகப் பணி செய்து பெயர் வாங்கினர்.

## அண்டமான்

இங்கு வி.கே.வி-க்கள் 1) வஸந்திப்பூர், 2) டிக்லிபூர், 3) ஹட்பே, 4) கதம்தலா, 5) பஹல்காம், 6) போர்ட்பிளேர், 7) போர்ட்மவுத், 8) ராஞ்சி, 9) டேக்ரி, 10) ரங்கத் ஆகிய ஊர்களில் அமைந்துள்ளன.

இப்பள்ளிகள் அண்டமானில் வெவ்வேறு தீவுகளில் மிகச்சிறப்பாக தொண்டு புரிந்து வருகின்றன. மொத்த மாணவர்கள் 3021 பேர், ஆசிரியர்கள் 138 பேர், கல்விசார் பணியாளர்கள் 40 பேர். 2009-10-ம் ஆண்டில் 10-ம் வகுப்பிலும், 12-ம் வகுப்பிலும் நூற்றுக்கு நூறு பேர் தேர்ச்சி அடைந்தனர்.

## மத்திய செகண்டரி கல்வி வாரியத்தின் தேர்வில் சிறப்பு அம்சங்கள்

போர்ட் பிளேர் வி.கே.வி மாணவி நித்யா நாயர் தீவுகளிலேயே முதல் இடம் பெற்றார். ரோகிணி நாயர் 8-ம் இடம் பெற்றார்.

## வி.கே.வி-க்களின் மகத்தான சாதனைகள்

அண்டமான் நிக்கோபார் கேந்திரப் பள்ளி மாணவர்கள் இத்தீவுகளின் பிரதிநிதிகளாக தேசீய விஞ்ஞான கருத்தரங்கில் பங்கேற்றனர். புதுடில்லி பன்னாட்டு வணிக அரங்கில் பண்பாட்டுக் கொண்டாட்டத்திலும் பங்கேற்றனர். சென்னையில் நடந்த தேசீய மாணவர்கள் விஞ்ஞான மாநாட்டில் இப்பள்ளி மாணவர்கள் உருவாக்கிய பணித்திட்டங்கள் சென்னை மாநாட்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. மாநில அளவிலான விஞ்ஞான வினாடிவினா போட்டியிலும், போர்ட்பிளேர் பள்ளி முதல் இடம் பெற்றது. தலைசிறந்த பள்ளி என்ற மாநில விருதையும் பெற்றது.

மாநில அளவிலான பிராந்திய போட்டிகளில் போர்ட்பிளேர் மாணவர்கள் அபிஷேக் ராய் பூப்பந்தில் தங்கப் பதக்கம் பெற்றார். சந்த்ர பிரகாஷ் குஷ்வாஹா, கடா பகதூர் ஆகியோர் மேஜைப் பந்து போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்றனர்.

ரங்கத் வி.கே.வி மாணவி பிரகதி மாநில அளவிலான ஓவியப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்றார். புதுடில்லியில் நடந்த தேசீய அளவிலான போட்டியிலும், மாநிலப் பிரதிநிதியாக சென்று வந்தார். எல்லா உற்சவங்களும் சிறப்பாக நடந்தன. குருபூர்ணிமா 3600 பேர், உலக சகோதரத்துவ தினம் 4650 பேர், சாதனை தினம், கீதை தினம் 3200 பேர், சுவாமி விவேகானந்தர் பிறந்த நாள் 7125 பேர்.

## விவேகானந்த கேந்திர வித்யாலயா, கள்ளுபாலு

**குருபூர்ணிமா** நன்கு கொண்டாடப்பட்டது. எஸ்.வியாசா பல்கலைக்கழக பதிவாளர் டாக்டர் மஞ்சுநாத் சிறப்பு விருந்தினர் ஆவார். ரட்சாபந்தன், கண்ணன் பிறந்த நாள் ஆகியவை வண்ணமிகு நிகழ்ச்சிகளாக பள்ளியில் கொண்டாடப்பட்டது.

சுதந்திர தினம், குடியரசு தினம், ஏக்நாத்ஜி நினைவு நாள், பிள்ளையார் சதுர்த்தி, காந்தி பிறந்த தினம், லால்பஹாதூர் சாஸ்திரி பிறந்த தினம், குழந்தைகள் தினம், ஆசிரியர்கள் தினம், ஆண்டு விளையாட்டுப் போட்டி ஆகியவை அழகுற நடைபெற்றன.

55-வது கன்னட மாநில உற்சவம் நன்கு நடந்தன. இவற்றில் ஸ்ரீ கோபிநாத்ரெட்டி ஸ்ரீ லெக்ஷ்மி காந்த், ஸ்ரீ குருமூர்த்திஜி சிறப்பு விருந்தினர்களாக வந்திருந்தனர்.

ஏக்நாத்ஜியின் பிறந்த நாள், சாதனை தினம், அன்னை சாரதா தேவி பிறந்த நாள், அன்னையர் வழிபாடு இவற்றில் 150 குழந்தைகள் தம் பெற்றோர்களை பூஜை செய்து வழிபட்டனர். சந்த்ரபூர் ரமண மஹரிஷி ஆசிரம நிர்வாகி ஸ்ரீ ஷினாஷ் ரெட்டி சிறப்பு விருந்தினர் ஆவார்.

ஜனவரி 1-ம் தேதி கல்பதரு தினத்தன்று சகோதரி காயத்ரீ அன்னபூர்ணா பூஜை நடத்தினார். பெற்றோர்கள் 61 பேர் பங்கேற்றனர்.

08.11.2010 அன்று பத்ர மஞ்சன கள்ளியில் திருவிளக்குப் பூஜை நடந்தது. அதன் முக்கியத்துவம் பற்றி பள்ளி செயலாளர் ஸ்ரீ நாகேஷ்ஜி சிறப்புரை ஆற்றினர். 50 அன்னையர்களும், குழந்தைகளும் வந்திருந்தனர்.

10-ம் வகுப்பு மாணவர்களுக்கு **உத்சர்க** நிகழ்ச்சிகளும் கொண்டாடப்பட்டது.

## விவேகானந்த கேந்திர இயற்கை வள அபிவிருத்தித் திட்டம்

இதன் நோக்கம் வளம்குன்றா வளர்ச்சி ஆகும். இதன் பணிகள் மலிவு விலை வீடு கட்டுதல், நீர் நிர்வாகம், ரசாயன உரம் இல்லாத விவசாயம், உள்ளூர் மருத்துவ நெறிகள், புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளம் ஆகியவை. இதன் மையம் கன்னியாகுமரியில் உள்ளது. இக்கிளை ஒத்த மனமுள்ள நிறுவனங்களுடனும், பல விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகங்களின் தொழில் நுணுக்க ஒத்துழைப்புடனும் இயங்குகிறது. எளிய புறச்சூழலுக்கு உகந்த தொழில் நுணுக்கங்களை இத்துறை வளர்த்து எடுக்கிறது. அவற்றைச் சாதாரண மக்களும் பயன்படுத்தி இயற்கை வளங்களைப் பாதுகாக்கலாம். சோதனைச் சாலையில் நிரூபிக்கப்பட்ட நெறிமுறைகளை மக்களுக்குப் பயன்தரும் விதத்தில் சென்று கொடுக்கிறோம். இப்பயன்கள் திட்டவட்டமானவை.

| வ.எ | தலைப்பு | எண்ணிக்கை | எத்தனை பேர் |
|---|---|---|---|
| 1) | நீர் நிர்வாகமும், சுகாதாரமும் | | |
| அ) | அழுக்குத் தண்ணீர் சுத்தப்படுத்துவதைப் பற்றி பணிமனை | 1 | 80 |
| ஆ) | தண்ணீர் ஜனநாயகம் பற்றி பள்ளி மாணவர்களுக்குப் பயிற்சி | 14 | 1040 |
| இ | தண்ணீர் ஜனநாயகம் பற்றி கல்லூரி மாணவர் பயிற்சி | 1 | 82 |
| ஈ) | தண்ணீர் பற்றி சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி | 1 | 162 |
| 2) | வளம் குன்றா வேளாண்மை | | |
| அ) | பொருத்தமான தொழில் நுணுக்கத்தை ஏற்கும் திறனை வளர்க்கும் பணிமனை | 2 | 81 |
| ஆ) | வளம்குன்றா வேளாண் பணிமனைகள் | 10 | 404 |
| இ | உயிரியல் உரம் மண்புழு மக்கிய உரம் பயிற்சி முகாம் | 4 | 121 |
| ஈ) | அஜோல்லா வளர்த்தல் தொழில் நுணுக்கம் | 18 | 292 |
| உ) | ஆடு, மாடு நிர்வாகம் பயிற்சியின் மறு தொடர்பு | 3 | 52 |
| 3) | பரிபூரண ஆரோக்கியம் | | |
| அ) | பாரத மருத்துவ நெறிகள் (கிராம வைத்தியர்களுக்கு அதிகாரம் பெற்றுத் தருதல், உழவர்கள் சுயஉதவிக் குழுக்களுக்கு அதிகாரம் பெற்றுத் தருதல்) | 4 | 485 |
| ஆ) | பசுமை ஆரோக்கிய இல்லம் | நாள் 83 | 2365 |
| இ | விருந்தினர் சொற்பொழிவு | 6 | 497 |
| ஈ) | பசுமை ஆரோக்கிய முகாம் | 1 | 220 |

| வ.எ | தலைப்பு | எண்ணிக்கை | எத்தனை பேர் |
|---|---|---|---|
| 4) புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி வளங்கள் | | | |
| அ) உயிர்கள் வாயு கலன் கட்டுதல் (சக்தி சுரபி) | | 124 | |
| ஆ) 100 கன மீட்டர் உயிரியல் வாயு கலன்கள் | | 2 | |
| இ சக்தி சுரபி அறிவுறுத்தல் முகாம் | | 13 | 1084 |
| ஈ) சக்தி சுரபி பயிற்சி முகாம் | | 12 | 272 |
| உ) சக்தி சுரபி பயிற்சி மறு தொடர்பு | | 1 | 24 |
| 5) நெட்வொர்க்கிங் (பரஸ்பர உறவு) | | | |
| அ) உந்துதல் பயிற்சி அரசு ஊழியர் | | 4 | 93 |
| ஆ) விஞ்ஞான மனப்பான்மையை வளர்க்க பணிமனைகள் (பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும்) | | 2 | 82 |
| இ வி.கே. நார்டெப்பை கல்லூரி மாணவர்கள் பார்வையிட வருதல் | | 8 | 251 |
| ஈ) உழவர்கள் வருகை | | 2 | 35 |
| உ) சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் வருகை | | 1 | 280 |
| 5) புதிய புத்தகங்கள் | | | |
| அ) நிலைத்த சுகமும், நீடித்த ஆயுளும் | | 1900 | |
| ஆ) ஆடுவோமே, பள்ளு பாடுவோமே மறு அச்சு | | 2000 | |

## விவேகானந்த கேந்திர கிராம முன்னேற்றத் திட்டம், தூத்துக்குடி – தமிழ்நாடு

**நோக்கம்:** சனாதன தருமத்தில் போற்றப்படும் நற்குணங்களைப் பின்பற்றி நடக்க கிராம மக்களுக்கு உந்துதல் கொடுத்தல்.

**பணிகள்:** குடிநீர், நிவாரணப் பணிகள், பண்பாட்டு வகுப்புக்கள், அமுதசுரபி, ஏழை மாணவர்களுக்கு உதவி, பாலர் பள்ளிகள், பண்பாட்டுப் போட்டிகள் முகாம்கள், மருத்துவ மையங்கள், மகளிர் பணிகள், இளைஞர் முகாம்கள் கண் பாதுகாப்பு, தாத்தா, பாட்டியைத் தத்தெடுத்தல்.

**பணி நடக்கும் இடங்கள் – தென் தமிழ்நாடு ஐந்து மாவட்டங்கள்:** 1) கன்னியாகுமரி, 2) திருநெல்வேலி, 3) விருதுநகர், 4) தூத்துக்குடி, 5) இராமநாதபுரம்.

75 குழந்தைகள் காப்பகங்களில் 1960 குழந்தைகள் பயிலுகிறார்கள். 225 பண்பாட்டு வகுப்புக்களில் வாரந்தோறும் 7006 குழந்தைகள் பயிலுகிறார்கள். 18 இடங்களில் பெற்றோர் வழிபாடு நடத்தப்பட்டது. 172 பேர் வருகை தந்தனர். 15 மருத்துவ மையங்களில் 24109 நோயாளிகள் பயன் அடைந்தனர். 38 கண் முகாம்கள் நடத்தப்பட்டன. 5444 வெளி

நோயாளிகளும், 1464 கண் புரை அறுவை சிகிச்சைகளும் முக்கிய அம்சங்கள் ஆகும்.

மாதந்தோறும் நடக்கும் திருவிளக்குப் பூஜைகளில் 10000 பெண்கள் வருகின்றனர். 1008 திருவிளக்குப் பூஜைகள் 17 இடங்களில் நடைபெற்றன. பதினைந்தாயிரத்திற்கும் மேல் பெண்கள் வந்திருந்தனர்.

68 தாத்தா பாட்டிகளை இக்கேந்திரம் தத்து எடுத்துள்ளது.

57 பெண்கள் திருமண நிதி உதவியும், மருத்துவ நிதி உதவியும் பெற்றனர். 93 பெண்களுக்கு தையல் பயிற்சி வகுப்புக்கள் நடந்தன. புத்தக விற்பனையில் 9,44,805/- ரூபாயும், பரிசுப் பொருள்கள் விற்பனையில் 4,16,595/- ரூபாயும் கிடைத்தன.

விவேகவாணி மாத இதழுக்கு 1787 பேர் புதிதாகச் சந்தா கட்டினர்.

பாலர் பள்ளி குழந்தைகள் தினம் ஸ்ரீராம ஜெயராம, ஜெயராம மந்திரம் ஓதினர். பண்பாட்டு வகுப்பிலும் திருவிளக்குப் பூஜையிலும், சிவலிங்க பூஜையிலும், மாதாந்திர கூட்டங்களிலும் இம்மந்திரம் ஓதப்பட்டது. 132 இடங்களில் 18,80,752 தடவை இம்மந்திரம் ஓதப்பட்டது.

சுப்ரஜா பவுண்டேஷனின் நிதி உதவியுடன் 2074 குழந்தைகளுக்கு சீருடைகளும், விளையாட்டுக் கருவிகளும் வழங்கப்பட்டன. எல்லாக் காப்பகங்களுக்கும் பாத்திரங்கள் கிடைத்தன. பாலர் பள்ளிகளை மருத்துவர்கள் இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை பார்வையிட்டு குழந்தைகளுக்குச் சிகிச்சை அளிக்கின்றனர்.

2250 வீடுகளில் இருந்து 14994 கிலோ அமுதசுரபி அரிசி கிடைத்தது. 7000 வீடுகளில் இருந்து அன்ன பூஜைக்கு 39 224 கிலோ சேர்ந்தது. இந்த அரிசி பாலர்பள்ளி குழந்தைகளுக்கும், முதியவர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும், திருக்கோவில்களுக்கும் அறக்கட்டளைகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டது.

காலஞ்சென்ற சரஸ்வதி திதியின் நினைவில் 13.04.10 அன்று குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

அருப்புக்கோட்டையை சுற்றியுள்ள ஆறு பள்ளிகளில் சுவாமி விவேகானந்தர் படக்கண்காட்சி நடத்தப்பட்டது. 3000 மாணவர்கள் பார்வையிட்டனர். புத்தக விற்பனை ரூபாய் 6,000/-

திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களைச் சேர்ந்த 31 மாணவர்கள் கன்னியாகுமரியில் ஐந்து நாள் பண்பாட்டு வகுப்பு முகாமில் தங்கிப் பயிற்சி பெற்றார்கள். 2 பேர் கன்னியாகுமரியில் யோக முகாமுக்கு வந்தார்கள். உள்ளூர்த் தொண்டர்கள் பயிற்சி முகாமுக்கு 19 பேர் வந்திருந்தார்கள்.

சிவகாசி, காளீஸ்வரி கல்லூரியில் ஜி. நாகசாமி, கோவில்பட்டி பொறுப்பாளர், விவேகானந்தரைப் பற்றி ஒரு சிறப்புரை ஆற்றினர். இளைஞர்களும், சுவாமி விவேகானந்தரும் பற்றிய இந்த உரையைக் கேட்க 500 மாணவர்கள் வந்திருந்தார்கள்.

வருடாந்திர பாலசேவிகா புத்துணர்வு முகாம் நடைபெற்றது. பண்பாட்டுப் பணியாளர்களும் கலந்து கொண்டனர். 112 பால சேவிகாக்கள், ஆறு மேற்பார்வையாளர்கள், 37 கிராம முன்னேற்றத் திட்டத் தொண்டர்கள் பயிற்சி பெற்றனர்.

சுதந்திர தினம், வினாயகர் சதுர்த்தி, கிருஷ்ணர் பிறந்த நாள் ஆகியவை உற்சாகமாகக் கொண்டாடப்பட்டன.

பாலர் பள்ளி ஆசிரியைகளுக்கான பத்து நாள் பயிற்சி முகாமில் 33 பேர் பயின்றனர். ஏழு சமூகத் தொண்டர்களுக்கும் பயிற்சி நடந்தது. 11, 12–ம் வகுப்பு மாணவர்களுக்கான தேர்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கோவில்பட்டி, சங்கரன்கோவில், வள்ளியூர் மையங்கள் சான்றிதழ்கள் வழங்கின. 18 பள்ளிக்கூடங்களில் 1597 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

2952 மாணவர்கள் 90 கல்லூரிகளில் இருந்து **வெல்க வெல்கவே** பயிற்சி முகாம்களில் கலந்து கொண்டார்கள். 21 முகாம்கள் நடந்தன.

**வள்ளியூர் தொண்டர் எம். சேகர் கூறுகிறார் :–**

தூத்துக்குடி மாவட்டத்தின் தூரப் பகுதியில் இடைச்சிவிளையில் ஒரு குழந்தைகள் காப்பகம் துவங்கிற்று. அது கேந்திர கிராம முன்னேற்றத் திட்டத்தின் வள்ளியூர் கிளையின் கீழ் வருவது. அப்பள்ளியின் முதல் ஆயா ஸ்ரீமதி ராஜகிளி ஆவார். அவர் அறுபது வயதாகி பணி ஓய்வு பெறும் படிவத்தை நிரப்பினார். அவருடைய வீடு இருக்கும் தெருவின் பெயர் **எம்மா கால்வே** ஆகும். இவர் அமெரிக்காவில் சுவாமி விவேகானந்தரின் சீடராக ஆனவர். ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் புகழ்பெற்ற பாடகி. அரசு பதிவேடுகளிலும், எம்மாகால்வியின் பெயர் இடைச்சிவிளையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்செய்தி எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

## விவேகானந்த கேந்திர அருண்ஜோதி திட்டம் (அருணாச்சல் பிரதேசம்)

இதன் நோக்கம் பண்பாட்டின் மூலம் பன்முக வளர்ச்சி. இதன் தொண்டுப் பணிகள் முறைசாராக் கல்விமன்றம், உடல்நல சேவை மன்றம், இளைஞர் மன்றம், மகளிர் மன்றம், பண்பாட்டு மன்றம்.

**பணிக்களம்:** அருணாச்சல்பிரதேஷ்

**பணி மையங்கள்:** 1) ஆலோ, 2) போம்டிலா, 3) போர்டும்சா, 4) தோய்முக், 5) சாங்க்ளாங், 6) டப்பாரிஜோ, 7) தேவமாலி, 8) இட்டாநகர், 9) கர்ஸாங், 10) கோன்ஸா, 11) லாங்டிங், 12) பாஸிகாட், 13) ரோயிங், 14) செய்ஜோஸா, 15) செப்பா, 16) தாவாங், 17) தேஜ், 18) வாக்ரோ

இப்பணி ஆறு நகர மையங்களிலும், 8 பணி மையங்களிலும், 176 சேவை திட்ட மையங்களிலும், 122 கிராமங்களிலும், 28 நகரங்களிலும் நடைபெறுகின்றது. 137 தொண்டர்கள் பணியாற்றுகின்றனர். 77 அமர்வுகள், கூட்டங்கள் நடைபெற்றன. 778 பேர் பங்கேற்றனர். இப்பணித் திட்டத்தில் மூன்று ஆயுட்காலத் தொண்டர்கள், நான்கு சிக்ஷார்த்திகள், ஆறு சேவா விரதிகள், எட்டு மாணவத் தொண்டர்கள், 25 அலுவலகப் பணியாளர்கள் தொண்டு புரிகின்றனர்.

இங்கு குருபூர்ணிமா, சாதனை தினம், உலக சகோதரத்துவ தினம், சமர்த்த பாரதப் பருவம், கீதை தினம் ஆகிய விழாக்கள் பெரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டன. இவற்றுக்கு மக்கள் நல்ல ஆதரவு தந்தனர். 500 மாணவர்கள் நிகழ்ச்சிகளுக்கு வந்திருந்தார்கள்.

23 புரவலர்களும், 19 சந்தாதாரர்களும் சேர்ந்து கொண்டனர். இங்கு கேந்திர வெளியீடுகள், பிற வெளியீடுகள், பரிசுப் பொருள்கள் 9,99,000/- ரூபாய்க்கு விற்கப்பட்டன. இத்திட்டத்திலேயே தயாரான பொருள்கள் ரூ. 2,60,131/-க்கு விற்கப்பட்டன.

நன்னூல் ஓதும் போட்டிகளில் 14 பள்ளிகளில் இருந்து 450 குழந்தைகள் வந்திருந்தார்கள். 11 முகாம்கள் நடத்தப்பட்டன. 19 கல்லூரிகளில் தொடர்பு கொண்டு 100 பேர் போட்டிகளில் பங்கெடுக்க அழைக்கப்பட்டனர்.

ஆளுமை வளர்ச்சி முகாம்கள், இளைஞர் எழுச்சி முகாம்கள், யோக தொடர் வகுப்புக்கள், நன்னூல் ஓதும் வகுப்புக்கள், யோக முகாம்கள் இவற்றில் நல்ல வருகை இருந்தது. உள்ளூர்த் தொண்டர்கள் பயிற்சி முகாமிலும், பிராந்திய அளவிலான தொண்டர்கள் பயிற்சி முகாமிலும் 30 பேர் பங்கேற்றனர். 37 பேர் குறுகிய காலத் தொண்டர்களாகவும், இரண்டு பேர் முழுநேரத் தொண்டர்களாகவும் சேர்ந்து கொண்டார்கள்.

முறைசாராக் கல்வி மன்றம் 123 பால்வாடிகளை நடத்துகிறது. இவற்றில் 2455 குழந்தைகள் படிக்கிறார்கள். 237 பால சேவிகாக்களும், 17 பிற

ஊழியர்களும் பணிபுரிகின்றார்கள். இத்திட்டத்தினர் நடத்திய குழந்தைகள் விழாவில் 960 குழந்தைகள் பங்கேற்றார்கள். 15 ஆனந்தாலயங்கள் நடக்கின்றன. 598 குழந்தைகள் படிக்கிறார்கள். 16 ஆசிரியர்கள் பாடம் கற்பிக்கிறார்கள். 28 முகாம்கள் நடத்தப்பட்டன. 759 குழந்தைகள் வந்திருந்தனர்.

உடல்நலச் சேவை மன்றம் 78 மருத்துவ முகாம்களுக்கு ஏற்பாடு இப்பிரிவு செய்தது. 2547 நோயாளிகள் பயன் பெற்றனர். 50 பேருக்கு அறுவை சிகிச்சைகளும் செய்யப்பட்டன. உடல் நலம் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள் 20 நடத்தப்பட்டன. ஆறாயிரம் பேர் லாபம் அடைந்தனர். 1,56,856/- ரூபாய் மதிப்புள்ள மருந்துகள் வழங்கப்பட்டன.

மகளிர் மன்றத்தின் கீழ் பெண்கள் விழிப்புணர்வு முகாம்கள் 11 நடந்தன. 197 பெண்கள் பயிற்சி பெற்றனர். தொழிற்பயிற்சி முகாம்கள் மூன்றில் 27 பேருக்கு பயிற்சி தரப்பட்டது.

இளைஞர் மன்றத்தில் **''சிரித்துக் கொண்டே பரீட்சை எழுதுங்கள்''** பரசுராம் மேளாவில் சேவைப்பணி முதலியவற்றுக்கான இளைஞர் முகாம்களில் வருகை நன்றாக இருந்தது.

பண்பாட்டு மன்றத்தினர் சிவபூஜை செய்தனர், சரஸ்வதி பூஜை செய்தனர். இதில் உள்ளூர் சமயத் திருவிழாவின் போது வாழ்த்து அட்டைகள் வழங்கினர். இவற்றில் மக்கள் திரளாக வந்திருந்தனர். 37 பால சேவிகாக்கள் பயிற்சி பெற்றனர். விஜய் ஹி விஜய் முகாமில் 28 கல்லூரிகள் பங்கேற்றன. 571 மாணவர்களும், 254 தொண்டர்களும் பங்கேற்றனர். 18.83,201/- ரூபாய் நன்கொடை வசூல் ஆனது.

## அஸ்ஸாம், குவாஹாட்டியில் விவேகானந்த கேந்திரப் பண்பாட்டுக் கழகம்

**இதன் நோக்கம்:** வடகிழக்கு பாரதத்தின் சிறப்பு அம்சங்களை வெளிக் கொண்டு வந்து பொதுத் தன்மைகளுக்கு ஊட்டம் கொடுத்தல், இதன் நடவடிக்கைகள், கருத்தரங்குகள், பணிமனைகள், ஆவணப்படுத்துதல், பணித்திட்டங்கள், சொற்பொழிவுத் தொடர், வாசகர் வட்டம், சிறப்பு நூலகம்.

**பணி இடங்கள்:** 1) குவாஹாட்டி தலைமையகம், 2) அருணாச்சல் பிரதேசக் கிளை இட்டாநகர், 3) டெல்லி கிளை டெல்லியில்.

**குவாஹாட்டி :** இக்கழகத்தின் அருணாச்சல் கிளை மோன்யுலில் சமுதாயப் பண்பாட்டு வளர்ச்சிக் கழகம் மோன் பகுதி (துவாங்) உடன் சேர்ந்து ஒரு மூன்று நாள் கருத்தரங்கத்திற்கு ஏற்பாடு செய்தது. மோன்பாஸ் பண்பாட்டில் மாற்றமும், தொடர்ச்சியும், பாரம்பரிய அமைப்புக்கள் என்ற பெயரில் நடந்தது. 30.07.10 முதல் 01.08.10 வரை இக்கருத்தரங்கம் நடந்தது. அப்போதைய முதலமைச்சர் மரியாதைக்குரிய திரு. டோர்ஜி காண்டு இதைத் துவக்கி வைத்தார். குழு

கலந்துரையாடல்கள் முக்கியமான விஷயங்கள் பற்றி நடைபெற்றன. கிராமங்களில் இருக்கும் அறிவு முதிர்ந்த மூத்தோர்களும், புத்தத் துறவிகளும், கற்றறிந்தவர்களும், இளைஞர்களும் அற்புதமான முறையில் கலந்துரையாடினர். விவேகானந்த கேந்திர துணைத்தலைவர் ஸ்ரீ ஏ. பாலகிருஷ்ணன்ஜி மரியாதைக்குரிய விருந்தினராக வந்திருந்தார். கார்மிக் அத்யாத்ம விஷயங்கள் துறையின் தலைவர் ஸ்ரீ ட்சோனா கான்ட்ஸே ரின்போச்சே தலைமை வகித்தார். டெல்லி கிளை இக்கழகத்தின் வடகிழக்கு பாரதத்தை சிறப்பாக கவனிக்கும் அதன்கீழ் சமுதாய பண்பாட்டுத் தொடர்ச்சி பற்றி கௌரவமிக்க அறிஞர் பேராசிரியர் வி.வி. குமார் சிறப்புரை ஆற்றினார். அவர் இக்கழகத்தின் ஆராய்ச்சிக் குழுவின் உறுப்பினர் ஆவார். இக்கழகம் நடத்தும் **க்வேஸ்ட்** என்ற பத்திரிக்கையின் தலைமை ஆசிரியரும் ஆவார். இந்நிகழ்ச்சி 16.05.10 அன்று டெல்லி விவேகானந்த இண்டர்நேஷனல் பவுண்டேஷன் கட்டிடத்தில் நடைபெற்றது. பாரத அரசின் முன்னாள் சுற்றுலாத் துறைச் செயலாளர் ஸ்ரீ எம்.பி. பேஜ் பருவா ஐ.ஏ.எஸ் சிறப்பு விருந்தினராக வந்திருந்தார்.

காஞ்சி பீடாதிபதி ஸ்ரீ ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் குவாஹாட்டி வந்திருந்த போது இக்கழகம் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு செய்தது. சத்ராதிகாரிகளும், போடோ அறிவாளிகளும் ஸ்ரீமத் சுவாமிகளை சந்தித்துப் பேசினர். 06.0.10 அன்று குவாஹாட்டி பாலாஜி மந்திர் வளாகத்தில் இச்சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

## ராபா ஆவணப்படுத்தும் பணித்திட்டம்

இந்த ஆவணப் பணியின் இறுதிக்கட்டம் நிறைவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் ஆலோசனைக் குழுவின் கூட்டம் 28.07.10 அன்று துதுநேய் ஜனமந்திரின் கோயல்பாரா மாவட்டத்தில் நடைபெற்றது. ஸ்ரீ பிரகாஷ் ராபா இக்கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

வேதாந்த வாசஸ்பதி ராதாநாத் ஃபூக்கன் நினைவு ஈராண்டு சொற்பொழிவு ஏழாவது தடவையாக 22.03.11 அன்று நடைபெற்றது. வடகிழக்கு மலைப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் ம்ருணாள் மிரி சிறப்புரை ஆற்றினார். இவர் இக்கழகத்தின் ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் ஆவார். உரையின் தலைப்பு **ஆன்மீகமும், நல்லொழுக்கமும்**.

இத்தொடரை துவக்கி வைத்து ராஜகுமார் அஜித் நாராயண் சின்ஹா (அஸ்ஸாமின் அஹோம் மன்னர்களின் கடைசி வழித் தோன்றல்) பேசினார். அவர் புகழ்பெற்ற எழுத்தாளரும் முன்னோடி சமூகச் செயல் வீரரும் ஆவார். இந்த உரை 25.07.10 குருபூர்ணிமா அன்று இக்கழக வளாகத்தில் குவாஹாட்டியில் நடந்தது. அஸ்ஸாம் மாநிலத்தில் **நிலக்கொள்கை ஒரு பார்வை** என்ற தலைப்பில் அவர் உரையாற்றினர். கன்னியாகுமரி விவேகானந்த கேந்திர துணைத்தலைவர் ஸ்ரீ ஏ. பாலகிருஷ்ணன்ஜி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். மொத்தம்

ஏழு சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டன. புகழ்பெற்ற அறிஞர்களும், புறச்சூழல் வல்லுனர்களும் இவ்வுரைகளை ஆற்றினர்.

**பண்பாட்டு ஆராய்ச்சி :** பல்துறை சுரங்கம் அஸ்ஸாமின் நிலக்கொள்கையும், நிலவரி அமைப்பும் என்ற தலைப்பில் சொற்பொழிவுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. ஆரிய வித்யா பீடக் கல்லூரியின் மானுடஇயல் துறையும் விவேகானந்த கேந்திரப் பண்பாட்டுக் கழகமும் சேர்ந்து ஒரு கலந்துரையாடலுக்கு ஏற்பாடு செய்தன. அஸ்ஸாம் மாநிலத்தின் **மானுடவியல், தொல்லியல் பொக்கிஷங்களைப் பற்றிய ஒரு பார்வை** இதை கேந்திர கழகத்தின் ஆராய்ச்சிக் குழுவின் முன்னாள் இயக்குனர் டாக்டர் பிரதீப் சர்மா நடத்தினார். அஸ்ஸாமின் பிராந்த அமைப்பாளர் குமாரி மீராவும், கழக செயலாளர் குமாரி என். சுஜாதாவும், மணிப்பூரில் உள்ள இம்பால் நகருக்கு 26.09.10 முதல் 29.09.10 வரை வருகை தந்தனர். மணிப்பூர் நிலைமையை நன்கு புரிந்து கொள்ள அவர்கள் அங்கு போனார்கள். அப்பண்பாட்டுக்கு விவேகானந்த கேந்திரம் எப்படி பயனுள்ள முறையில் சேவை புரிய முடியும் என்று பார்ப்பதற்காக அவர்கள் சென்று வந்தார்கள். அச்சமயம் பத்மஸ்ரீ, ஸ்ரீ தாங் ஜம் ஹரிதாஸ் சிங் தலைமையில் ஒரு தற்காலிக அமைப்புக் குழு உருவாக்கப்பட்டது.

**முழுமையான வாழ்வுக்கு யோகா** என்ற பெயரில் பத்து நாள் துவக்கப் பயிற்சி நடத்தப்பட்டது. இதில் 14 பேர் பயன் பெற்றனர். நவம்பர் 2010-ல் இப்பயிற்சி நடந்தது. 16.01.11 சுவாமி விவேகானந்தர் 148-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இக்கழகமும், குவாஹாட்டி விவேகானந்த கேந்திரமும் சேர்ந்து **குடும்பகம்** என்ற ஒரு நாள் குடும்ப சந்திப்பு முகாமையும், கீதை தினத்தையும் கொண்டாடின.

கழக நூலகத்தில் 562 புதிய புத்தகங்கள் சேர்ந்துள்ளன. மொத்தப் புத்தகங்களின் எண்ணிக்கை 5587 ஆகும்.

### சுரேஷ் சந்திர ராஜ்கோவா நினைவு ஆராய்ச்சிப் பிரிவு

இக்கழகத்தின் சிறப்பு நூலகத்தின் ஆராய்ச்சிப் பிரிவை பேராசிரியர் சுரேஷ் சந்த்ர ராஜ் கோவாவின் நினைவுக்கு சமர்ப்பிக்கும் விழா ஒன்று நடைபெற்றது. அன்னார் அஸ்ஸாமின் புகழ்பெற்ற கல்வியாளர் ஆவார். இவ்விழா கழக வளாகத்தில் நடந்தது. புகழ்பெற்ற கல்வியாளரும், ராஜீவ்காந்தி பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் ஆகிய பேராசிரியர் ஏ.சி. பகவதி சிறப்புரை ஆற்றினார். தலைப்பு: **வடகிழக்கு பாரதத்தில் சமுதாயங்களுக்கு இடையிலான உறவுகள்.**

இவ்வாண்டு இப்பண்பாட்டுக் கழகம் பல நூல்களை வெளியிட்டது. **நீலாச்சல மலையில் காமாட்சி கோவிலின் பாரம்பரியம், அஸ்ஸாமில் சத்திரா அமைப்பு, ரிஹைறன்னீ டிரெப் என்ற தங்கக்கொடி** – இதை எழுதியவர் சுமர் லிஸ் சாவைன் ஆவார். **ஒற்றுமையுடன் வாழ்தல்** என்ற ஆங்கில நூலின் இரண்டாம்

பதிப்பும் வெளியிடப்பட்டது. இது ராதாநாத் நினைவு சொற்பொழிவின் மறுபதிப்பு ஆகும். சின்மயா யுவகேந்திரத்தின் இயக்குனர் சுவாமி மித்ரானந்தாஜி இச்சொற்பொழிவை ஆற்றினார். விலை ரூ. 20/-

விவேகானந்த கேந்திரப் பண்பாட்டுக் கழகத்தின் துவக்க நாள் 31.01.11 அன்று குவாஹாட்டியில் நடைபெற்றது. இக்கழகத்தின் ஆராய்ச்சிப் பத்திரிக்கையான **க்வெஸ்ட்** என்பது வெளியிடப்பட்டது. பாரத நாட்டின் சுதந்திர இயக்கம் – வடகிழக்கு மாநிலங்களின் பங்கு (தொகுதி –4, பகுதி –2) அந்த நாளில் வெளியிடப்பட்டது. இதன் மையக் கருத்து ‘‘ஒற்றுமை – தொடர்புகள் அடிநீரோட்டமாக இருக்கின்றன.’’ பாரதத்தின் சுதந்திரப் போராட்டத்தில் வடகிழக்கு மாநிலங்களின் பங்கு சிறப்பானது என்பதே.

## ஆராய்ச்சி ஆலோசனை குழுவுக்குப் புதிய இயக்குனர்

இக்கழகத்தின் முன்னாள் இயக்குனர் டாக்டர் பிரதீப் சர்மா 30.08.10 அன்று பிரியா விடை பெற்றார். குவாஹாட்டி பல்லைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் டாக்டர் தினேஷ் சந்திர பரூவா புதிய இயக்குனராக பிப்ரவரி 2011–ல் பெறுப்பேற்றார்.

## விவேகானந்த இண்டர்நேஷனல் பவுண்டேஷன்

**நோக்கம்:** நாகரீகங்களுக்கு இடையே ஒற்றுமையை உண்டாக்க துவக்கப் பணி ஆற்றுதல், கலந்துரையாடல், பேச்சுவார்த்தை இவற்றின் மூலம் இதன் செயல் நடவடிக்கைகள், மாநாடுகள், கருத்தரங்குகள், வாசகர் வட்டங்கள் இவற்றுக்கு ஏற்பாடு செய்தல்.

**பணி இடம் :** புது டில்லி

இந்தப் பவுண்டேஷன் 01.12.2009 அன்று துவக்கப்பட்டது. இது முன்னோடியானது. பட்சபாதம் இல்லாதது. கொள்கை ரீதியான குறுக்கீடுகள் ஆழப்பதிந்து நம் தேசீய நலனைப் பற்றி கலந்துரையாடி ஆழ்ந்து சிந்தித்துச் செயல்படும் கழகம் இது ஆகும். வரும் நாட்களில் மேலும் மேலும் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன. தரமான ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

பாரத நாட்டின் வெளியிலும், உள்ளேயும் பாதுகாப்புச் சூழலை ஆராய்ந்து கொள்கைகளையும், பிரதிநிலைகளையும் உருவாக்கத் தேவையான தகவல்களைத் தருவது இதன் நோக்கம் ஆகும். பாரதத்தின் சமுதாய, இன, ரீதியான வேற்றுமைகளால் ஏற்படும் தீமைகளை எழுதுவதை மாற்றி, கொள்கைகள் மூலம் கட்டுப்படுத்துவதும் இதன் நோக்கம் ஆகும். நாகரீக சமுதாயத்துடன் கலந்து பேசி மோதும் குழுக்களிடையே கருத்துப் பரிமாற்றத்துக்கு நிறுவன ரீதியான ஆதரவு தருவதும் இந்தப் பவுண்டேஷனின் பொறுப்பு ஆகும்.

விவேகானந்த இண்டர்நேஷனல் பவுண்டேஷனின் லட்சியத்தைச் சாதிப்பதற்காக பலப்பல நடவடிக்கைகளும் முன்னோடிச் செயல்பாடுகளும், மேற்கொள்ளப்பட்டன. தேசீய நலன்களைப் பற்றிய சிந்தனையிலும் முன்னோடியாக இருக்கும் வண்ணம் இந்தப் பவுண்டேஷன் செயல்படுகிறது. தேசீய நற்குணங்களை வளர்க்க இது பாடுபடுகிறது. பின்வரும் பாதுகாப்பு உத்தி துறைகளில் ஆராய்ச்சியை இந்தப் பவுண்டேஷன் துவங்கி உள்ளது. சீன நாட்டின் பலம் மிகுந்த ஆயுத வளர்ச்சி. இது பாரதத்தை எப்படி பாதிக்கும்? இதற்கு பாரதம் என்னென்ன செய்யலாம்?

பாரதத்தின் இராணுவக் கொள்கையை உருவாக்குவது எப்படி? 2020 ஏவுகணை போர்த்திறமை. பயங்கரவாதத்தை எதிர்ப்பதில் அரசு நிதி உதவியின் செயல்பாடு திறமையுடன் இருக்கிறதா. பாரதம் தேசீய பாதுகாப்பு, இராணுவ உத்திகள் இவற்றின் மையச் சிந்தனை எது?

பல கருத்தரங்கங்களை இந்தப் பவுண்டேஷன் நடத்திற்று. இமயமலை என்னும் பெரிய நீர்ப்பிடிப்புப் பகுதி; பாரதத்தைப் பாதிக்கும் தண்ணீர் பிரச்சினைகள்; நோக்கங்களும், சவால்களும் – இந்தக் கருத்தரங்கத்தை இந்தப் பவுண்டேஷனும், அஹிம்சை செயலுக்கான பவுண்டேஷனும் இணைந்து நடத்தின. பிரான்ஸ் நாட்டு எழுத்தாளரும், திபெத்திய இயல் அறிஞருமான கிளாடு அர்ப்பியும், அசோக் ஜேட்லியும் சிறப்புரை ஆற்றினர். அசோக் ஜேட்லி எரிசக்தி ஆராய்ச்சிக் கழகத்தின் நீர்வளத் துறையின் இயக்குனரும், சிறப்பு உறுப்பினரும் ஆவார். பிரஜ்ஞா என்ற தொண்டு நிறுவனத்தின் தலைவர் அபிநவ சக்கரவர்த்தியும் உரையாற்றினார். பிராந்திய தண்ணீர்ப் பிரச்சினைகள் புறச்சூழல் பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

இந்தப் பவுண்டேஷன் வெற்றித் திருநாளை ஒட்டி ஒருநாள் முழுவதுமான கருத்தரங்கத்தை நடத்திற்று. அதன் தலைப்பு **ஜம்மு காஷ்மீரில் நடந்த அண்மை சம்பவங்களும், அவற்றுக்கு நாம் எப்படி பதில் இறுப்பது என்ற பிரச்சினையும்.** வெவ்வேறு ஆட்சித் துறைகளைச் சேர்ந்த புகழ்பெற்ற அறிஞர்கள், ஊடகத் துறையினர் பங்கேற்றனர். காஷ்மீரின் முன்னாள் கவர்னர்கள் ஜி.சி. சக்சேனா, ஸ்ரீ ஜக்மோகன் ஆகியோர் அமர்வுகளுக்குத் தலைமை வகித்தனர். பி.டி.பி. கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் முஜப்பர் பெய்க் சிறப்புரை ஆற்றினார். டெல்லி மாநிலத்தின் முன்னாள் ஆளுனரும், ஜம்மு காஷ்மீர் முன்னாள் தலைமைச் செயலருமான ஸ்ரீ விஜய் கபூர் உரையாற்றினார். ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் தலைமைச் செயலாளரான டாக்டர் சுதிர் போலேரியா உரையாற்றினார். பவுண்டேஷனின் இயக்குனரும், முன்னாள் ரகசிய தகவல் துறை இயக்குனருமான ஸ்ரீ அஜித் தோவால் உரையாற்றினார். 15–வது இராணுவப் பிரிவின் முன்னாள் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் நிர்பய சர்மா சிறப்புரை ஆற்றினார். ஜம்மு காஷ்மீரின் முன்னாள் காவல்துறை டைரக்டர் ஜெனரல் டாக்டர் அசோக் பான் சிறப்புரை ஆற்றினார். என்.டி.ற்றி.வி–யின் முதிர்நிலை ஆசிரியர் நிதின் கோகலே சிறப்புரை ஆற்றினார்.

இந்தப் பவுண்டேஷன் ஒரு மூன்று நாள் கருத்தரங்கத்திற்கு ஏற்பாடு செய்தது. பாரத நாகரீகத்தின் வேர்கள் எவ்வளவு ஆழமானவை. ஒரு தொல்லியல் வரலாற்றுப் பார்வை. இதற்கு திரௌபதி அறக்கட்டளையும், பாரத தொல்லியல் சர்வேயும் பாரதத் தொல்லியல் சங்கமும் கூட்டாக ஏற்பாடு செய்து இருந்தன.

பாரதப் பேரழிவு நிர்வாக ஆணையகத்தின் துணைத்தலைவர் ஜெனரல் என்.சி. விஜ் ஒரு பவர் பாயின்ட் சொற்பொழிவு நிகழ்த்தினார். தேசீயப் பேரிடர்களை நிர்வகிப்பதில் பாரதத்தின் தேவைகள், திறன்கள், சவால்கள் இயற்கை பேரழிவுகளும் மனிதனால் உண்டாக்கப்பட்ட பேரழிவுகளும் ஆராயப்பட்டன. ஜம்மு காஷ்மீர் முன்னாள் ஆளுனர் ஸ்ரீ ஜக்மோகன் உணர்ச்சிமயமான உரை ஒன்று ஆற்றினார். பாரதத்தின் தேச நிர்மாணப் பணியில் நாகரீகத்தின் பாதிப்பு, நிர்ப்பந்தம் என்ற தலைப்பில் அவர் உரையாற்றினார். ஒரு சமுதாயத்தின் அறிவுசார், பண்பாடு சார், சமூகம் சார்ந்த ஒழுக்க ரீதியான சம்பாத்தியங்களே, திரட்டுக்களே, நாகரீகம் என்று அவர் வரையறுத்தார். அவர் பாரதத்தின் நாகரீக வளர்ச்சியை இவ்வாறு அவர் மதிப்பிட்டார். சுதந்திரப் போராட்டத்தின் போது மகத்தான திறமைசாலிகளையும், தலைவர்களையும் உண்டாக்கிய நம் தேசம் சுதந்திரத்திற்குப் பிறகு ஏன் மகத்தான சிந்தனையாளர்களையும், சீர்திருத்தவாதிகளையும் உண்டாக்கவில்லை என்று அவர் கேட்டது பொருத்தமாக இருந்தது.

உலகில் உருவாகி வரும் வாழ்க்கையைப் பற்றிய முழுமைக் கருத்துக்களை வடிவமைப்பதில் பாரதத்தின் பங்கு என்பதைப் பற்றி விவேகானந்த கேந்திரத் தலைவர் மா. பரமேஸ்வரன்ஜி உரையாற்றினார்.

## கூட்டு நிகழ்ச்சிகள்

பவுண்டேஷனின் சார்பில் ஃபீல்டு மார்ஷல் மானேக்ஷாவின் 96-வது பிறந்த நாள் ஆண்டுவிழா கொண்டாடப்பட்டது. **பாரதத்தில் உள்நாட்டுப் பாதுகாப்புக்குச் சவால்கள் என்ற தலைப்பில்** லெப்டினன்ட் ஜெனரல் ஏ.எஸ். கால்காட் உரையாற்றினார். ஒரு தூதுக்குழு அறிவாளிகளையும், முக்கிய குடிமக்களையும் மணிப்பூரில் இருந்து அழைத்துக் கொண்டு டெல்லி வந்தது. அதன் தலைவர் ஓய்வு பெற்ற கர்னல் ஹெச். பூபான்சிங் ஆவார். அவர் முன்னாள் மாநில அமைச்சர் ஆவார். மாநில பொதுச்சேவை ஆணையகத்தின் உறுப்பினர் ஆவார். இக்குழு பவுண்டேஷனுக்கு வந்து இயக்குனருடன் ஆழ்ந்த உரையாடலை நடத்திற்று. முக்கியமான சிறப்பு உறுப்பினர்களுடனும் இக்குழு கலந்து பேசிற்று. பொருளாதார ரீதியில் தடைகளைச் சந்தித்து வரும் மணிப்பூர் மக்கள் எவ்வளவு தீவிரமாக அல்லலுறுகிறார்கள் என்பதை இக்குழு எடுத்துச் சொல்லிற்று.

## விவேகானந்த கேந்திரம் வேத தரிசன பவுண்டேஷன்

### கொடுங்கல்லூர், கேரளா

**நோக்கம்:** வேத ஆராய்ச்சியைப் பற்றிய சிந்தனையாளர்கள், அறிஞர்கள் ஆகியோரின் குழு ஒன்றை அமைத்தல், வேத ஞானத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்தல், வேத அறிஞர்களுக்கு ஆதரவு நல்குதல், குடும்பங்களில் வேத உண்மைகளை நடைமுறைப்படுத்த உதவும் வண்ணம் வேத ஞானத்தைப் பரப்புதல்.

**இதன் நடவடிக்கைகள்:** புத்தக வெளியீடு, யோகப் பயிற்சி, பிராணாயாமப் பயிற்சி, ஆளுமை வளர்ச்சி முகாம்கள், விழாக் கொண்டாட்டங்கள், சத்சங்கங்கள், ஆன்மீக உரைகள்.

இரண்டு ஆளுமை வளர்ச்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. ஒவ்வொரு குழுவிலும் 25 மாணவர்கள் வந்தார்கள். இரண்டு குழுக்கள் பயிற்சி பெற்றன. நிறைவு விழாவில் பரிசு வழங்க ஸ்ரீமதி பாரதியும், மா. நிவேதிதா தீதியும் வந்திருந்தனர். சுதந்திர தினம், ஓணம் இவை சிறப்புறக் கொண்டாடப்பட்டன. ஓணத்தன்று உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. கிருஷ்ண ஜெயந்தி, குடியரசு தினம், நவராத்ரி, குழந்தைகள் தினம் ஆகியவை கொண்டாடப்பட்டன. சமர்த்த பாரதப் பருவத்திலும், உலக சகோதரத்துவ தினத்திலும், ஒப்பித்தல் போட்டிகள், வினாடி வினாக்கள் நடத்தப்பட்டன. பேராசிரியர் விஜய மோகன் சிறப்பு விருந்தினராக வந்திருந்து பரிசுகளை வழங்கினார்.

மன நிறைவு தரும் பண்பாடு, கலை நிகழ்ச்சிகள் 13.11.10 அன்று நடத்தப்பட்டன. **கூடி ஆட்டம்** பற்றிய பன்னாட்டு மையத்தின் உதவியுடன் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. புகழ்பெற்ற கலைஞர் ஸ்ரீமதி மார்கி சதியின் கலைத்திறமையைப் பார்த்து பார்வையாளர்கள் பரவசம் அடைந்தார்கள்.

## விவேகானந்த கேந்திரம் உத்கல் சேவை திட்டம்

### கேந்துஜாடு, ஒடிஷா

**நோக்கம்:** கிராம மக்களுக்கு புத்துணர்வு ஊட்டி சனாதன தருமத்தின் போற்றத்தக்க நற்குணங்களைப் பின்பற்றுவதும், வளர்த்தலும்.

**நடவடிக்கைகள்:** கிராமப்புற மக்கள், மலையின வனவாசி மக்கள் ஆகியோரின் பண்பாட்டையும், ஆன்மீகத்தையும், சமுதாயத்தையும், பொருளாதாரத்தையும் வளர்க்க உதவுதல். தனி மனிதர்களுக்கு உதவி புரிந்து அவர்கள் தங்களை முழுமையாக வளர்த்துக் கொள்ள உதவுதல். கூட்டு கிராம சமுதாயங்களில் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவி செய்தல்.

இப்பணித் திட்டத்தை 80 தொண்டர்கள் கண்காணித்து நடத்துகிறார்கள். இரண்டு ஆயுட்காலத் தொண்டர்கள், இரண்டு சேவா விரதிகள், ஒரு மாணவத் தொண்டர், மூன்று உள்ளூர் தொண்டர்கள், 66 ஆசிரியர்கள், நான்கு மேற்பார்வையாளர்கள், இரண்டு துணைத் தொண்டர்கள் ஆகியோர் பணிபுரிகின்றனர். இரண்டு வேலை மையங்களிலும், 33 சேவை மையங்களிலும் இப்பணிகள் நடக்கின்றன.

33 ஆனந்தாலயங்கள் 970 மாணவர்களைக் கொண்டு பணிபுரிகின்றன. ஆசிரியர்கள் முகாமில் 66 ஆசிரியர்கள் பயிற்சி பெற்றனர். பெற்றோர்களிடையே விழிப்புணர்வை வளர்க்க 15 கூட்டங்கள் நடத்தப்பட்டன. 240 பெற்றோர்கள் இவற்றுக்கு வந்திருந்தனர். இளைஞர் முகாம்களில் 41 இளைஞர்கள் பயிற்சி பெற்றனர். இரண்டு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. 409 நோயாளிகள் பயனடைந்தனர். ஒரு உடல் நல விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

### கொண்டாட்டங்கள்

சாதனை தினம், கீதை தினம், சமர்த்த பாரதப் பருவம், சுவாமிஜி பிறந்த நாள், குரு பூர்ணிமா, உலக சகோதரத்துவ தினம் ஆகிய கொண்டாட்டங்களில் நிறையப் பேர் வந்து கலந்து கொண்டனர். 20 புரவலர்கள், 14 சந்தாதாரர்கள் சேர்ந்தனர். கேந்திர வெளியீடுகளும், பிறவும் 10,400/-ரூபாய்க்கு விற்கப்பட்டன.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நன்னூல் ஓதும் போட்டிகள் நடைபெற்றன. 350 பேர் பங்கேற்றனர். மொத்தம் எட்டு முகாம்கள், இளைஞர் எழுச்சி முகாம்கள், சிரித்துக் கொண்டே பரீட்சை எழுதுங்கள், நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 400 பேர் பயனடைந்தனர். நன்னூல் ஓதும் வகுப்புக்கள், யோக வகுப்புக்கள், பண்பாட்டு வகுப்புக்களில் 450 பேர் பங்கேற்றனர். உள்ளூர்த் தொண்டர்கள் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டன. குறுகிய காலத் தொண்டர்கள் மூன்று பேர் பணியில் சேர்ந்தார்கள்.

## விவேகானந்த கேந்திரப் பயிற்சி மற்றும் சேவைத் திட்டம்
### பிம்ப்லாத், நாஷிக், மஹாராஷ்டிரா

**நோக்கம் :** கேந்திரத் தொண்டர்களுக்கு பயிற்சி தருதல், உள்ளூர் மக்களுக்கு சேவைப் பணிகள் புரிதல், நடவடிக்கைகள், முகாம்கள், பாலர் பள்ளிகள், ஆரோக்கிய மையம், மாணவர்கள் உடனுறை விடுதி, இந்த பணித்திட்டம் மஹாராஷ்டிரத்தின் பின்தங்கிய பகுதி ஒன்றில் நடக்கிறது. இதை ஒரு ஆயுட்காலத் தொண்டரும், ஒரு சிக்ஷார்த்தியும், ஒரு வானப்ரஸ்தியும் நடத்துகிறார்கள். ஏழு ஊழியர்களும் உண்டு.

ஏழு பாலர் பள்ளிகளில் 196 குழந்தைகள் பயிலுகின்றனர். ஏழு பால சேவிகாக்கள் இங்கு உண்டு. பாலசேவிகா பயிற்சி முகாமில் 11 பேர் பயிற்சி

பெற்றனர். உடல் நல பாதுகாவலர்கள் 25 பேர் இன்னொரு பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.

பெண்கள் விழிப்புணர்வு முகாம் ஒன்று நடத்தப்பட்டது. 112 பேர்கள் பங்கேற்றனர்.

**விழாக்கள்:** ஒரு சிவபூஜையில் 48 பேர் பூஜை செய்தனர். 13 தீப பூஜைகளில் 956 பேர் பூஜை செய்தனர். ரக்ஷாபந்தன் விழாவில் 5000 பேர் கலந்து கொண்டனர்.

ஏழு மருத்துவ முகாம்கள் 296 நோயாளிகளுக்கு சிகிச்சை செய்தனர். உடல்நலப் பாதுகாவலர்கள் 29 பேர் இம்முகாம்களில் தொண்டு புரிந்தனர்.

**இச்சேவைத் திட்டத்தின் நடவடிக்கைகள் ஆவன:** 1) ஆனந்தாலயங்கள் - 9, வருகை - 22 பேர், 2) நடன மஹோத்சவம் -1, மூன்று கிராமங்களில் இருந்து 165 பேர், 3) பஜனை உற்சவம் -1, 268 பேர் வந்திருந்தனர். 4) உடல் உழைப்பு முகாம் ஏழு முகாம்களுக்கு 1568 பேர் வந்திருந்தனர். 5) மாணவர் விருது வழங்கும் விழா ஒன்றில் 75 பேர் மாணவர்களும், பெற்றோரும் பங்கேற்றனர். 6) விவேக ஆசிரமத்தில் 39 சிறுவர்களும், நான்கு சிறுமிகளும் தங்கியுள்ளனர். 7) வாழ்வாதாரத்தின்கீழ் மூன்று இயந்திரங்களும், இரண்டு பசுக்களும் பயனாளிகட்கு வழங்கப்பட்டன. 8) 2400 சூரிய விளக்குகள் மக்களிடையே வழங்கப்பட்டன.

**முகாம்கள்:** பண்பாட்டு வகுப்பு முகாம்கள் இரண்டு நடத்தப்பட்டன. 203 பேர் வந்திருந்தனர். மஹரிஷி தியான வகுப்பு ஒன்று நடத்தப்பட்டது. 62 பேர் பயிற்சி பெற்றனர்.

மஹிந்தரா, மஹிந்தரா முகாம் -1220 பேர் பங்கேற்றனர்.

தொழிற்பயிற்சி முகாமில் மின்சாதனம் பொருத்தும் பயிற்சியில் மூன்று முகாம்களில் 10 பேர் பயிற்சி பெற்றனர். வெல்டிங் வகுப்பு ஒன்றில் 11 பேர் பயிற்சி பெற்றனர். சோல்டரிங் முகாம் ஒன்றில் 24 பேர் பயிற்சி பெற்றனர். ஆங்கிலம் பேசும் பயிற்சி முகாமில் 42 பேர் கற்றுக் கொண்டனர்.

சித்ரலேகா முகாமில் 42 பேர் பயன் பெற்றனர். இளைஞர் எழுச்சி முகாமில் 31 பேரும், பண்பாட்டுப் பயிற்சி முகாமில் 39 பேரும், லாபம் அடைந்தனர். இரண்டு ஆன்மீகப் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. 92 பேர் பயன் பெற்றனர். பண்பாட்டு வகுப்பு பயிற்சி முகாமுக்கு 48 பேர் வந்திருந்தனர்.

யோக முகாமில் நிறைய இளைஞர்களும், இளைஞர் வகுப்பில் 20 இளைஞர்களும் வந்திருந்தனர். சிவ ஜெயந்தியில் 45 பேர் பங்கேற்றனர். பால சேவிகா பயிற்சி முகாம், உடல் நல பாதுகாப்பாளர் பயிற்சி முகாம்

ஆகியவற்றுக்கு யஷ்வந்த ராவ் திறந்த வெளிப் பல்கலைக்கழகம் சான்றிதழ் வழங்கிற்று. ஏழு பாலசேவிகாக்களும், ஒன்பது உடல்நலப் பாதுகாப்பாளர்களும் பயிற்சி பெற்றனர்.

## விவேகானந்த கேந்திர மருத்துவ ஆராய்ச்சி பவுண்டேஷன் அஸ்ஸாம்

**நோக்கம்:** மருத்துவ சேவை புரிவது.

**இதன் நடவடிக்கைகள்:** என்.ஆர்.எல் விவேகானந்த கேந்திர மருத்துவமனையின் நவீன தொழில் நுணுக்கத்தின் மூலம் சிகிச்சை கிடைக்கிறது. 13 கிராமங்களில் தொடர்ந்து மருத்துவ முகாம்கள் நடக்கின்றன.

விவேகானந்த கேந்திர மருத்துவ ஆராய்ச்சி பவுண்டேஷன் அறக்கட்டளை முக்கியமாக வடகிழக்கு மாநிலங்களில் தன் தொண்டுப் பணிகளை ஒருமுகப்படுத்துகிறது. தற்போதைக்கு அதன் பணிகள் அஸ்ஸாமிலும், அருணாச்சல் பிரதேசத்திலும் நடக்கின்றன. அவையாவன:-

## நுமாலிகடு என்.ஆர்.எல் நகரியத்தில் இருக்கும் என்.ஆர்.எல். மருத்துவமனை

| வ.எ. சேவை | பயன் அடைந்தோர் எண்ணிக்கை |
|---|---|
| 1) வெளி நோயாளிகள் | 34168 |
| 2) உள் நோயாளிகள் | 1448 |
| 3) அறுவைச் சிகிச்சை | 592 |
| 4) ரேடியாலஜி யு.எஸ்.ஜி சேவை | 4629 |
| 5) நடமாடும் முகாம்களில் வந்திருந்தோர் 243 முகாம்கள் | 9194 |
| 6) பாத்தாலஜி சேவை | 73517 |
| 7) இரத்த மாற்று சேவை | 228 |
| 8) பிஸியோதெரபி | 2261 |
| 9) யோக வகுப்புக்கள் - 14 | 1362 |
| 10) யோகத் தொடர் வகுப்புக்கள் - 35 | 6782 |

திப்ரூகட் மாவட்டத்தில் தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கென விவேகானந்த கேந்திரம் பல்வேறு தொண்டுப் பணிகளைச் செய்து வருகிறது. இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை குழந்தைகளுக்கென உள்ளூர் மருத்துவர்கள் மூலம் ஆரோக்கிய சோதனை செய்யப்படுகிறது. யோக வகுப்புக்கள், முழுமையான ஆளுமை வளர்ச்சி இவற்றுக்கும் கேந்திரம்

பணியாற்றுகிறது. வி.கே.என்.ஆர்.எல் மருத்துவமனையில் முழுநேர யோக ஆசிரியர் தொண்டு புரிகிறார்.

## ஜோகேன் பசுமதாரி நினைவு விவேகானந்த கேந்திர மருத்துவமனை

### சுக்லாய், அஸ்ஸாம்

இது கேந்திரத்தின் புதிய பணித்திட்டம் ஆகும். போடோ மக்களுக்கு மருத்துவ சேவை செய்ய இத்திட்டம் துவங்கி உள்ளது. அரசும், தனியாரும் சேர்ந்து இத்திட்டத்தை நடத்துவர். அஸ்ஸாம் அரசும், தேசீய கிராம மருத்துவ சேவை மிஷனும் இத்திட்டத்தை செயல்படுத்தும். இம்மருத்துவமனையின் தினப்படி நிர்வாகத்தை விவேகானந்த கேந்திரம் நடத்தும்.

23.06.10 அன்று இம்மருத்துவமனை துவக்கப்பட்டது. இதில் 30 படுக்கைகள் உண்டு. சில பணிகள் துவக்கப்பட்டன. பிற இன்னும் துவக்கப்பட வேண்டும். தற்போது இருக்கும் வசதிகள் ஆவன: பேத்தாலஜி சோதனைச் சாலை, 500 மா எக்ஸ்ரே, அறுவைச் சிகிச்சை தியேட்டர், ஆபத்துச் சிகிச்சை, இரத்த வங்கி பிரசவத் துறை, தீவிர சிகிச்சை துறை, மின் உற்பத்தி அகம், வெளி நோயாளிகள் 22568 பேரும், உள் நோயாளிகள் 97 பேரும், நடமாடும் முகாம் நோயாளிகள் 1031 பேருமாக மொத்தம் 21696 பேருக்கு இந்த மருத்துவமனை சிகிச்சை அளித்துள்ளது.

இலவச மருத்துவ முகாம்கள், பேட்டாகான், பங்காலிபாரா, உப்பார்குட்டி ஆகியவற்றில் 400 நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்தன.

## விவேகாந்த கேந்திர பிரதிஷ்டான் அறக்கட்டளை

### கன்னியாகுமரி

விவேகானந்த கேந்திரப் பிரதிஷ்டானின் பணி கிளை மையங்களின் மூலம் பாரதம் முழுவதும் முழுநேரத் தொண்டர்களால் நடத்தப்படுகிறது. இந்த அறக்கட்டளையின் முக்கிய பணி முழுநேர சமர்ப்பண உணர்வுள்ள சேவா விரதிகள், சிக்ஷார்த்திகள், வானப்ரஸ்தித் தொண்டர்கள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்தல், பயிற்சி கொடுத்தல், பணியில் அமர்த்துதல் ஆகியவையாம். விவேகானந்த கேந்திரத்தின் தொண்டுப் பணிகள், பணித்திட்டங்கள் அனைத்தையும் இவர்கள் நிர்வாகம் செய்வார்கள். இந்த அறக்கட்டளை சமர்ப்பண உணர்வுள்ள தொண்டர்களின் தினப்படித் தேவைகளை வழங்குகிறது. மருத்துவ வசதி, உணவு வசதி, பயணச் செலவு ஆகியவற்றைக் கொடுக்கிறது. முழுநேரத் தொண்டர்களின் பயிற்சியையும் இந்த அறக்கட்டளை கவனித்துக் கொள்கிறது. ஜீவன் விரதிகள், சிக்ஷார்த்திகள், சேவா விரதிகள், வானப்பிரஸ்திகள், அகியோருக்குப் பயிற்சி தந்து வெவ்வேறு கிளை

மையங்களில் அவர்களைப் பணிக்கு அமர்த்தி திட்டவட்டமான பொறுப்புக்களை அவர்களுக்குத் தருகிறது.

**விவேகானந்த கேந்திரப் பிரதிஷ்டான் அறக்கட்டளை நடத்தும் முகாம்கள் ஆவன:** 1) முதிர்நிலை தொண்டர் பயிற்சி முகாம்கள் ஏழு மாநிலங்களில் இருந்து 40 தொண்டர்கள், 10 நாள் முகாமில் பயின்றார்கள். 2) தொண்டர் பயிற்சி முகாம்கள் ஐந்து மாநிலங்களில் இருந்து 62 தொண்டர்கள், 15 நாள் முகாமில் பயிற்சி எடுத்துக் கொண்டார்கள். 3) பண்பாட்டு வகுப்பு பயிற்சி முகாம் ஆறு மாநிலங்களில் இருந்து 328 குழந்தைகள், ஏழு நாட்கள் பயிற்சி எடுத்துக் கொண்டார்கள். 4) கேந்திர தீக்ஷை முகாம் – 10 சிக்ஷார்த்திகள், ஏழு நாள் முகாமில் பயின்று ஆயுட்காலத் தொண்டராக தீக்ஷை பெற்றுக் கொண்டனர்.

### புரவலர்கள் விபரம்

மொத்தப் புரவலர்கள் (149985).

1) ஆண்டுதோறும் நன்கொடை நல்கும் புரவலர்கள் 1605, புதுப்பித்தோர் 5400 பேர், (மொத்தம் 32237). 2) ஒரே தடவையில் நன்கொடை அளிப்போர் 7655 புரவலர்கள், புதுப்பித்தோர் – 914 பேர், (மொத்தம் 113189). 3) நிரந்தர நன்கொடை – 125 புரவலர்கள், புதுப்பித்தோர் – 70, (மொத்தம் 4559)

### விவேகானந்த கேந்திரப் பிரகாசன் அறக்கட்டளை

**நோக்கம்:** சுவாமி விவேகானந்தரின் உன்னதமான எண்ணங்களை ஆரோக்கியமான நூல்கள் மூலம் பரப்புதல், அவர் செய்தி மூலம் இளைஞர்களுக்கு உற்சாகமூட்டுதல்.

**நடவடிக்கைகள்:** ஆங்கிலம், தமிழ், தெலுங்கு மொழிகளில் வெளியீடுகள்.

**பணி இடம் :** சென்னை

இந்த அறக்கட்டளை சென்னை பிரிவு, இரண்டு உள்ளூர் தொண்டர்கள், 14 ஊழியர்களுடன் பணிபுரிகிறது. வழக்கமான நடவடிக்கைகள், மூன்று பத்திரிக்கைகள் வெளி வருகின்றன. நூல்கள், நாட்குறிப்புகள், நாட்காட்டிகள், படங்கள் இவற்றை வெளியிட்டு விற்பனை செய்தல்.

நற்குண வளர்ச்சிக்கு அடிப்படையான புத்தகங்களையும், பத்திரிக்கைகளையும் இந்த அறக்கட்டளை வெளியிட்டது. பொதுமக்களிடையே நம் நாட்டின் அழியாத பண்பாடு, மரபு இவற்றைப் பற்றிய விழிப்புணர்வை ஊட்டிற்று. இந்த நற்குணங்கள் சுயநலமிகளால் மெள்ள மெள்ள அரிக்கப்பட்டு வருகின்றன. நம் மாமனிதர்களின் வாழ்வும், உபதேசமும், சாதனை, இறந்தகால, நிகழ்கால, சாதனைகள் இவற்றை விளக்கிக் கூறுவது இத்துறையின் பணி ஆகும். தேச நிர்மாணப் பணியில் வாசகர்களும் பங்காற்ற இத்துறை உற்சாகமூட்டுகிறது.

**சந்தாதாரர்கள் எண்ணிக்கை வருமாறு:– 1**) யுவபாரதி – 8169, 2) விவேகானந்த கேந்திரப் பத்திரிக்கை – 643, 3) விவேகவாணி – 3300.

புத்தக வெளியீடுகள் – ரூ. 31,97,575.72/- பரிசுப் பொருள்கள் விற்பனை – ரூ. 8,59,163.68/–, படங்கள் விற்பனை – ரூ. 2,00,228.49/–, விளம்பர வருமானம் – ரூ. 10,88,300.00/–

முப்பது புத்தகங்கள் மறு அச்சு செய்யப்பட்டன. மொத்தப் பிரதிகள் 185760.

பதிநான்கு புதிய புத்தகங்கள் அச்சிடப்பட்டன. 161976 பிரதிகள்.

ஐந்து புதிய பதிப்புக்கள் வெளியிடப்பட்டன. 2400 பிரதிகள். பேனல்கள், மேசை மேல் வைக்கும் நினைவுப் பொருள்கள், சுவாமி விவேகானந்தர் படப் பேனல்கள், பாட்ஜ்கள் இவை 70000–ற்கும் மேல் தயாரிக்கப்பட்டன. விவேகானந்த கேந்திரப் பத்திரிக்கைகள் மறு அச்சு செய்யப்பட்டன. 1) டான்சஸ் ஆஃப் இந்தியா, 2) சிவாஜி இன் ஸ்டோரிஸ், 3) பில்கிரிம் சென்டர்ஸ் ஆஃப் இந்தியா, 4) இந்தியன் உமன்ஹுடு த்ரூ த ஏஜஸ், 5) டெம்பிள்ஸ் ஆஃப் இந்தியா.

**விவேக சுதா** – சிந்தனையைத் தூண்டும் கால் ஆண்டுப் பத்திரிக்கை, குஜராத்தி மொழியில் கேந்திரத்தின் குஜராத் பிராந்தியத்தால் வெளியிடப்பட்டது. முன்பு அப்பத்திரிக்கை பாலித்தானா கிளையால் பதிப்பிக்கப்பட்டது. அண்மையில் அது ராஜ்கோட் கிளைக்கு மாற்றப்பட்டுள்ளது.

தற்போது **விவேகசுதா** நான்கு வண்ண அட்டைப் படத்துடன் வெளியாகிறது. அமைப்பு முழுவதும் காலத் தேவைக்கேற்ப மறுவடிவம் தரப்பட்டுள்ளது. கட்டுரைத் தேர்வும் மாற்றப்பட்டு, சமயம், தேச பக்தி, தற்காலத் தலைப்புக்கள் ஆகியவை ஒவ்வொரு இதழிலும் சேர்க்கப்படுகின்றன. தற்போது விவேக சுதாவுக்கு 836 சந்தாதாரர்கள் இருக்கிறார்கள். கடந்த சில சிறப்பிதழ்கள், பரீட்சை சிறப்பிதழ்கள், வீரச் சிறப்பிதழ்கள், தேச வழிபாட்டு சிறப்பிதழ்கள் ஆகியவையாம்.

## ஹிந்திப் பிரகாசன் துறை – ஜோத்பூர்

இத்துறையை பன்னிரெண்டு ஊழியர் குழு நிர்வாகம் செய்கிறது. ஒரு வானப்ரஸ்தி, பத்து உள்ளூர்த் தொண்டர்கள், தொண்டு புரிகின்றனர். **கேந்திர பாரதி** மாத இதழுக்கு 1382 சந்தாதாரர்கள் புதிதாகச் சேர்ந்து இருக்கிறார்கள். விளம்பர வருமானம் ரூபாய் 1,85,000/–, புது புத்தகப் பதிப்பு – 1, மறு அச்சு – 2 புத்தகங்கள். நாட்குறிப்பு அச்சு – 3926, கிளை மையங்களுக்கு ரூ. 2,945/–க்கு விற்கப்பட்டது. பிறருக்கு 980 பிரதிகள் விற்கப்பட்டன. புத்தக விற்பனை ரூ. 4,27,871/–

நாட்குறிப்பு விற்பனை ரூ. 2,16,472/- சொற்பொழிவுகள், கருத்தரங்கங்கள் – 2, பொது நிகழ்ச்சிகள் – 2, தொண்டர்களுக்கு உந்துதல் தரும் முகாம் – 1, அமர்வுகள் – 2 கூட்டங்கள், அச்சுப் பணிக்கு நன்கொடை ரூ.3,11,392/–, பொது நன்கொடை ரூ. 10,900/– வளர்ச்சி புரவலர்களும், சிறப்பு வளர்ச்சி புரவலர்களும் – 10 பேர்.

**புதிய வெளியீடுகள்:** 1) சுவாமி விவேகானந்தரின் ஒளியில் சாவர்க்கர், 2) ஸ்ரீ முகுந்தலால்ஜி எழுதிய கருமயோகம்.

**மறுபதிப்புக்கள்:** 1) பத்தர் மே ப்ரகடே ப்ராண், 2) தைனிக் ஜீவன்மே கீதா, 3) பச்சோங்கே சுவாமிஜி.

**மொழி பெயர்ப்புக்கள் :** 1) விவேகானந்த சரித்திரம், 2) பகினி நிவேதிதா, (ஸ்ரீமதி பாதே எழுதியது)

ஹிந்திப் பிரகாசன் துறைக்கு அடுத்த ஆண்டு மத்திய பிரதேச அரசு ரூ. 20,000/– நன்கொடை அளிக்கும்.

விவேகானந்த கேந்திரம் மராட்டி பிரகாசன் விபாக்
புணே

விவேக விசார் சந்தா – 2777.

**புதிய வெளியீடுகள் :** 1) தாஸ்மாணே – 2000, 2) கூஷிடோரி – 2000, 3) கர்மயோகினி நிவேதிதா – 2000, 4) சிங்கநாதம் – 5000, 5) அமெரிக்கேட் சுவாமிஜி – 3100.

**மறு அச்சு செய்யப்பட்ட புத்தகங்கள் :** 1) கதா விவேகானந்தன்சியா – 11000, 2) யோக விஸ்தாரிட் – 3500, 3) தாம்யவரில் யோகா பச்சர் – 1000, 4) சமர்த்த ராமதாஸ் அணி விவேகானந்தா – 3000, 5) விவேகானந்தன்யா விசார் பிரகாசட் சாவர்க்கர் – 3000, 6) டைரி அச்சு – 3000.

**புத்தக வெளியீடு :** புணே, கோவா, நாஷிக், ஸோலாப்பூர், நாக்பூர் ஆகிய இடங்களில் வெளியிடப்பட்டது. விளம்பர வருமானம் ரூ. 1,06,700/–

1) அவிஸ்மரணீய விவேகானந்தா – 3000, 2) சங்கடனா அணி காரிய கர்த்தா – 3100, 3) விஸ்வ விஜயசா ஆத்மவிஸ்வாஸ் – 3000, 4) விவேகானந்த சி ஹிந்து ராஸ்ட்ர சங்கல்பனா – 3000, 5) பாரதீய சம்ஸ்க்ருதி – 2100, 6) தைனந்ததின் ஜீவநாத் கீதா – 3000, 7) கதா ஷிலாஸ்மாரகாச்சி – 1100, 8) சுவாமி விவேகானந்த ஏக் பிரேரணா – 2000.

கிளை மையங்களுக்கு விற்ற நாட்குறிப்புக்கள் – 2100, நாட் குறிப்பு விற்பனை ரூ. 1,78,400/–, புத்தக விற்பனை – ரூ. 8,27,168/–, புத்தக வெளியீடு விற்பனை ரூ. 31,825/–

# ஏக்நாத்ஜி ரானடே

''பற்றும் அகந்தையும் நீங்கப்பெற்றோன்
உறுதியும் ஊக்கமும் நீங்காதான்
வெற்றி தோல்வியால் சற்றும் மாறான்
அவனே ஸாத்விக கர்த்தாவாம்.'' (பகவத்கீதை 18/26)

**விவேகானந்த பாறை நினைவுச் சின்னம், விவேகானந்த கேந்திரம் இவற்றின் உந்து சக்தியாய் விளங்குபவர்**

# சிரத்தாஞ்சலி

கேந்திர அன்பர்களும், நீண்ட நாள் சகத் தொண்டர்களுமாகிய பின்வரும் நல்லவர்கள் இவ்வாண்டில் காலம் சென்றார்கள். அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி இரங்கல் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆச்சாரிய மகாப்ரஜ்ஞா – சமண முனிவர்

1) ஸ்ரீ எம். கோபிநாத் – கேந்திரப் பொதுச் சபை உறுப்பினர், 2) ஸ்ரீ வினாயக் ராவ் லிமாயே – கேந்திரத் தொண்டர், விவேக விசார் பத்திரிக்கைகளின் நிறுவனர்களில் ஒருவர், புத்தகங்கள் பல எழுதியவர், புணே வாசி, 3) பத்மஸ்ரீ நானாஜி தேஷ்முக் – புகழ்பெற்ற சமூகத் தொண்டர், சித்திரக்கூடம், 4) ஸ்ரீ சுபாஷ் பஹாரியா – கேந்திரத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர், நன்கொடையாளர், தேஜ்பூரில் வசித்தவர், 5) ஸ்ரீ கங்காபிரசாத் பிர்லா – தொழில் அதிபர், தருமவான், கல்கத்தா, 6) ஸ்ரீ சத்யானந்த சரஸ்வதி – ஆன்மீகத் தலைவர், 7) ஸ்ரீ ஜெய கோபால் கரோடியா – தருமவான், 8) 75 மத்திய ரிசர்வே காவல்துறை வீரர்கள், இவர்களை மாவோயிஸ்டுகள் தந்தேவாடாவில் கொன்றார்கள், 9) ஸ்ரீ பைரோன்சிங் ஷெகாவத் – பாரதக் குடியரசின் முன்னாள் துணைத் தலைவர், 10) ஸ்ரீ சங்கர சாஸ்திரி – பாறை நினைவுச் சின்னம் கட்டும் காலத்தில் கேரளத்தில் ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரகர், நாக்பூர் கேந்திரக் கிளையை துவக்கியவர், தொண்டர்களுக்கு பலம் தருபவர், 11) ஸ்ரீ யான் திக்காக் – அறிவு ஜீவி திக்காக் சமுதாயத்தைச் சேர்ந்தவர், அருணாச்சல் பிரதேச கேந்திர அன்பர், 12) ஸ்ரீ ராம்சங்கர் அக்னிகோத்ரி – ஹிந்து ஸ்தான் சமாச்சார் தலைவர், 13) பேராசிரியர் சிவாஜிராவ் போன்சலே, புரவலர், மஹாராஷ்டிர பிராந்திய வெல்க வெல்கவே பணித்திட்டம், சுவாமி விவேகானந்தர், ஸ்ரீ அரவிந்தர் பற்றிய புகழ் வாய்ந்த பேச்சாளர், 14) ஸ்ரீ ற்றி.வி. ஆனந்தன், கொச்சி கேந்திர பொதுச்சபை உறுப்பினர், 15) ஸ்ரீ ரமேஷ் சந்திர குப்தா, கேந்திர டெல்லி விபாக் நடத்துனர், ஏக்நாத்ஜி ரானடே 16) ஸ்ரீ துளஸிராம், நாகர்கோவில் அன்பர், பகவத் கீதை தமிழாக்கம், கேந்திரத்தால் வெளியிடப்பட்டு புகழ்பெற்றது, 17) ஸ்ரீ கல்யாண் சக்கரவர்த்தி, முன்னாள் கேந்திர ஆயுட்காலத் தொண்டர், வடகிழக்கு பாரதத்திலும் நாகதண்டி ஆசிரமத்திலும் தொண்டு புரிந்தவர், துறவு பூண்டவர், 18) திருமதி. அல்பனா சரோதே, கேந்திர ஜீவன் விரதியாக மும்பையிலும், குவாலியரிலும் தொண்டு புரிந்தவர், 19) குமாரி முக்தா மீய்ச் – அஸ்ஸாமில் பணிபுரிந்த கேந்திர ஜீவன் விரதி, 20) ஸ்ரீ ஆர். கோபால கிருஷ்ணா, பொதுச்சபை உறுப்பினர், கன்னியாகுமரியில் வானப்ரஸ்தி தொண்டர், 21) ஸ்ரீ தாகே டியிபோ, அருணாச்சல் பிரதேஷ், உள்ளூர் மத பண்பாட்டுச் சங்க பொதுச் செயலாளர், கேந்திர அன்பர், 22) ஸ்ரீ இந்திரேஸ்வர் தேவரி – பிராந்த் தலைவர், அஸ்ஸாம் பிராந்தியம், 23) ஸ்ரீ கே.கே. நாராயணன்

1979 அணி ஜீவன் விரதி தொண்டர், திப்ரூகடில் பணிபுரிந்தவர், அருணாச்சலீ மக்கள் நடத்திய தவாங் பள்ளியில் முதல்வர் பணியாற்றியவர், 24) ஸ்ரீ போலா ராம் தாஸ், சில ஆண்டுகள் குவாஹாத்தி கேந்திரத்தின் தலைவராய் விளங்கியவர், வடகிழக்கு மாநிலங்களிலும் கேந்திரப் பணி உருவாக, குவாஹாட்டியிலும் கேந்திரப் பணிக்கு நல்ல துவக்கம் கொடுத்தவர், 25) ஸ்ரீ பீம்சேன் ஜோஷி, ஹிந்துஸ்தானி சாஸ்த்திர சங்கீத புகழ்பெற்ற பாடகர், 26) ஸ்ரீபாத் நாபர் – புணே நகரின் முன்னாள் கேந்திரத் தலைவர், 27) திருமதி. சவிதா டங்கர் காவங்கர் – புணே நகர் கேந்திர முன்னாள் துணைத்தலைவர், 28) ஸ்ரீமதி மிரிணாளினி பலானிகர், புணே கேந்திர அன்பர், 29) ஸ்ரீ ராஜீவ் தீக்ஷித், சுவாமி ராம்தேவ் பாபாவின் சகத்தொண்டர், சுதந்திரத்தைக் காப்பாற்றுங்கள் இயக்கத்தை உருவாக்கியவர், 30) ஸ்ரீ கஜானன் காலே – கேந்திர அன்பர், 31) சுவாமி ஸ்ரீ புருஷோத்தமானந்தாஜி, சின்மயா மிஷனின் முதிர்நிலை சுவாமிகள், 32) ஸ்ரீ வெங்கட்ராமன், புணே ஸோமவார் பேட்டையில் கேந்திரப் பணிக்கு ஆதரவு நல்கிய அன்பர்.

# *2012 முகாம் அட்டவணை*

| வ.எ. விபரம் | தேதி | வயது | நன்கொடை |
|---|---|---|---|
| 1) ஆன்மீகப்பயிற்சி முகாம் (ஆங்கிலம், ஹிந்தி) | 07.02.12 முதல் 13.02.12 வரை | 40 + | ரூ. 1500/- |
| 2) யோகப்பயிற்சி முகாம் (ஆங்கிலம், ஹிந்தி) | 05.05.12 முதல் 19.05.12 வரை | 18 + | ரூ. 2000/- |
| 3) ஆன்மீகப் பயிற்சி முகாம் (ஆங்கிலம், ஹிந்தி) | 07.08.12 முதல் 13.08.12 வரை | 40 + | ரூ. 1500/- |
| 4) யோகப் பயிற்சி முகாம் (ஆங்கிலம், ஹிந்தி) | 01.12.12 முதல் 15.12.12 வரை | 18 + | ரூ. 2000/- |

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி : –**

**முகாம் அலுவலகப் பொறுப்பாளர், விவேகானந்த கேந்திரம், விவேகானந்தபுரம், கன்னியாகுமரி – 629 702, தொலைபேசி எண் : (04652) – 247012, பேக்ஸ் : (04652) – 247177, ஈமெயில் : camps@vkendra.org, எங்கள் வெப்சைட் : www.vkendra.org**

**குறிப்பு :** 1) தொடர்பு நகரம் (ஸம்பர்க் ஸ்தான்), 2) பணி நகரம் (கார்ய நகர்), 3) காரிய விரிவாக்கம் (கார்ய விஸ்தார்), 4) மக்கள் தொடர்பு விஸ்தார் (சம்பர்க் விஸ்தார்)

# பாரதமே விழித்தெழு! உலகத்திற்கு ஒளியூட்டு

## சுவாமி விவேகானந்தரின் 150-வது பிறந்த நாள் ஆண்டு விழா
## 12.01.13 முதல் 12.01.2014 வரை

***நான் எதிர்காலத்திற்குள் புகுந்து பார்க்கவில்லை. அதைப்பற்றி எனக்கு கவலையும் இல்லை. ஆனால் ஒரு காட்சி என் முன் உயிர்த்துடிப்புடன் தெளிவாகத் தெரிகிறது. அதாவது புராதனமான அன்னை, மீண்டும் ஒரு முறை விழித்து எழுந்துவிட்டாள். முன்பு எப்போதும் காணப்படாத புதுமைப் பொலிவுடன் அவள் அரியாசனத்தில் அமர்ந்து இருக்கிறாள். சாந்தியும், அருளும் கொண்ட சொற்களால் அவள் வருகையை உலகத்திற்கு எடுத்துச் சொல்லுங்கள்.***

***-- சுவாமி விவேகானந்தர்***

ராமகிருஷ்ண பரமஹம்சரின் மகத்தான சீடரான சுவாமி விவேகானந்தர் முதலாவது ஹிந்து மிஷனரி ஆவார். தேச பக்தர் ஆவார். தேச நிர்மாணப் பணிபுரிந்தவர் ஆவார். சமூக சாத்திரம் அறிந்தவர் ஆவார். மகத்தான ஸ்தாபன அமைப்பாளர் ஆவார். ஹிந்து தருமம் ஆகிய தன் ஆத்மாவை நம் நாடு உணர்ந்துகொள்ளும்படி செய்தவர் அவரே.

**தேசத்தின் இன்றைய நிலைமை :** வரலாற்றின் நெருக்கடியான தருணத்தில் நாம் இருக்கிறோம். உலகில் பாரதத்தின் மதிப்பு பெருமளவில் உயரப் போகிறது. ஆனால் தலைமை நெருக்கடியோ, தேசத்தையும், அதன் மனப்பாங்கையும், பலவீனம் அடையச் செய்து விட்டது. முன்பு எப்போதும் காணப்படாத ஊழல் நம்மைச் சூழ்ந்து இருக்கிறது. பாதுகாப்பு கவலை அகமும், புறமும் நம்மைச்சுற்றி இருக்கிறது. நம் பொருளாதார வளர்ச்சி ஏற்றத்தாழ்வுகளுடன் இருக்கிறது. இன்னும் பல பிரச்சினைகள் இங்கே உள்ளன.

ஆனால் பாரதம் முழுவதுமே ஊழல் தான் இருக்கிறதா? **இல்லை.** பாரதத்தின் பொதுமக்களிடம் ஊழல் இல்லை. தலைமையிடம் தான் ஊழல் இருக்கிறது. அரசியலிலும், அறிவுசார் துறைகளிலும், தொழில் வாணிபத்திலும் தலைமையில் இருப்பவர்களிடம் தான் ஊழல் இருக்கிறது. அவர்கள் தான் நம் ஊழலுக்குப் பொறுப்பு.

தேசீய நீரோட்டம் : மிகக்கடுமையான சவால்களை நாம் எதிர்கொள்ளும் போதும் முரண்பாடற்ற கருத்துக்களை நாம் பரப்ப வேண்டும். முரண்பாடற்ற வழிமுறைகளை நாம் பின்பற்ற வேண்டும்.

தேசத்தில் எப்போதெல்லாம் நம்பிக்கையை இழக்கும் நெருக்கடிகள் வந்தனவோ அப்போதெல்லாம் ஆன்மீகமும், செயல் துடிப்பும் ஒன்றிணைந்து நம் தேசத்தைப் புத்துயிர் பெறச் செய்தன. சமர்த்த ராமதாசரும் சிவாஜி மன்னரும் ஸ்ரீகிருஷ்ணரும், அர்ஜுனனும், வித்யாரண்ய சுவாமிகளும் ஹரிஹர புக்கரும் இப்படிப் பலர்.

நம் ஆன்மீக, தேசீய பெருவெள்ளத்தை ஸ்ரீராமகிருஷ்ணரும், விவேகானந்தரும் புத்துயிர் பெறச் செய்தனர். சுவாமிஜி அனல் கக்கும் சொற்பொழிவுகளை கொழும்பு முதல் அல்மோடா வரை ஆற்றினார். அதுவே நம் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும், சுதந்திர இயக்கத்திற்கும் தேவையான தத்துவ அடிப்படையை அமைத்துக் கொடுத்தது. அவர் பாரதத்தின் இளைஞர் சக்தி வெடித்தெழச் செய்தார். அதைக் கட்டவிழ்த்து விட்டு அன்னிய ஆட்சியில் இருந்து தேசம் விடுதலைப் பெறச் செய்தார்.

விடுதலை பெறுவதே சுதந்திரம் பெறுவதல்ல. வறட்டுக் கொள்கைகளும், நடைமுறை அறிவு இல்லாத நடவடிக்கைகளும், பாரதத்தின் உடல் பலத்தைக் குறைத்தன. மக்கள் மனம் ஏனோ, தானோ என்று விழிப்புணர்வு இன்றிப் போய் விட்டது. 1962-ல் சீனநாடு நம்மைத் தாக்கியது. தேசம் அவமானப்படுத்தப்பட்டது. பாரதப் புண்ணிய பூமியை இன்றும் அன்னியர் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர். நம் சுயகௌரவத்தை, தன்னம்பிக்கையை இழந்தோம்.

தளர்ந்த நம் மனத்தை எந்தத் தலைவராலும் தூக்கி நிறுத்த முடியவில்லை.

1963-ம் ஆண்டு சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. ஆண்டு முழுவதுமான அக்கொண்டாட்டங்கள் மக்களின் ஆத்மாவுக்குப் புத்துணர்ச்சி தந்தன. அவர்களுடைய நம்பிக்கைகளையும், எதிர்பார்ப்புக்களையும் மீண்டும் கிளர்ந்து எழச் செய்கின்றன. பிரம்மாண்டமான விவேகானந்தப் பாறை நினைவுச் சின்னம் கன்னியாகுமரியில் நிறுவப்பட்டது. அது கோடிக்கணக்கான மக்களுக்கு ஆன்மீக, தேசீய கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. மக்களின் பலமான ஆத்மா எழுந்து உயருவதை தேசம் கண்டது.

1998-ல் போக்ரணில் அணுவெடிப்பு செய்யப்பட்டது. உலகத்தின் எதிர்ப்பைச் சந்திக்கும் மனவுறுதியை தேசம் பெற்றது. பாரதம் உலகில் இராணுவச் சக்தியாக, பூகோள அரசியல் சக்தியாக மேலெழுந்தது. தன்னம்பிக்கை உள்ள இந்த தேசம் பொருளாதார வளர்ச்சியில் வேகமாக நகர ஆரம்பித்தது.

இன்று பாரதம் அமெரிக்காவுடனும், சீனாவுடனும் சேர்ந்து உலகின் மூன்று வல்லரசுகளில் ஒன்றாக வளர்கிறது. ஆம்! பாரதம் மேலெழுகிறது. ஆனால் பாரதம் ஒரு ஆக்கிரமிப்புச் சக்தியாக இருக்குமா? அன்புச் சக்தியாகத் திகழுமா?

**பண்பாட்டுச் சீரழிவால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி:** தற்காலத்தில் மேற்கு நாட்டு அரசுகள் நவீன உலகத்திற்கு சமுதாயம், பொருளாதாரம், பண்பாடு, அரசியல் ஆகிய துறைகளில் முன்மாதிரிகள் என்று கூறப்படுகின்றன. ஆனால் மேற்கு நாடுகளின் பொருளாதார வளர்ச்சி அரை நூற்றாண்டாக எப்படி நடந்து வருகிறது தெரியுமா? அதன் நாகரீகச் சொத்துக்களையும், பண்பாட்டுச்

சொத்துக்களையும் வீணாக்கித் தான் பொருளாதார வளர்ச்சி அங்கு நடந்திருக்கிறது.

பண்பாடு, மரபுகள் இவற்றின் ஆதாரச் சக்தியாக சமுதாயங்களும், குடும்பங்களுமே விளங்குகின்றன. அவைதான் மக்களை ஒருவரோடு ஒருவர் இணையச் செய்தன. பண்பாட்டுச் சிதைவு, குடும்பங்களின் நலிவு, ஒற்றைப் பெற்றோர் இல்லங்கள், திருமணம் செய்து கொள்ளாமலே சேர்ந்து வாழ்தல், தனிநபர் இல்லங்கள், திருமணம் ஆகாமல் தாய்மை எய்துதல், இத்தகைய பண்பாட்டுச் சிதைவு துவக்கத்தில் மேற்கு நாடுகளில், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தக் கூடச் செய்தது.

ஆனால் அமெரிக்காவிலோ, பண்பாட்டுச் சொத்தைத் தீர்த்துக் கட்டிய பிறகு அளவுக்கு மீறி நுகரும் கலாச்சாரத்திற்கு சமுதாயம் போய்ச் சேர்ந்தது. குடும்பங்களும், தேசமும், பணம் சேமிப்பது குறைந்தது. இல்லங்கள் கடனில் மூழ்கின. பொருளாதார நெருக்கடி நிலைமை வந்தது.

இந்தத் தீமையில் இருந்து நம் தேசம் விடுபட்டிருக்கிறது. நம் பண்பாடு காப்பாற்றப்பட்டு நம் குடும்பங்கள் பிழைத்து இருக்கின்றன. ஆனால் மேற்கு நாடுகளைக் காப்பி அடிக்கும் போக்கு நம் பண்பாடு சிதைந்து போகும் ஆபத்தை பாரத நாட்டிலும் உண்டாக்கி இருக்கிறது. பாரதத்தின் ஆபத்தை பாரத நாட்டிலும் உண்டாக்கி இருக்கிறது. பாரதத்தின் பண்பாட்டு மூலதனத்தை நாம் பலப்படுத்த வேண்டும். அதன் மூலமே நம் சமுதாய மூலதனமும், பொருளாதார மூலதனமும் பெருக முடியும்.

**ஜகத் குருவாக பாரதம் :** ஹிந்து தேசம் மேற்கு நாடுகளைப் பார்ப்பதைக் காட்டிலும் தனக்குள்ளேயே அதிகம் உற்றுப் பார்க்க வேண்டும். நாற்பது ஆண்டுகள் நம் அரசாங்கமும், அறிவுத் துறையினரும் சோஷலிசத்தை மதித்தனர். சுதந்திரம் அடைந்து நாற்பது வருடங்கள் சோஷலிசத்தை மதித்த பின் இப்போதோ, உலகளாவிய முதலாளித்துவத்தை மதிக்கின்றனர். உலகின் பொருளாதாரக் கட்டமைப்பு நொறுங்கி விழுந்து விட்டது. கடந்த முப்பது ஆண்டுகளின் பொருளாதாரக் கொள்கைகள் தோற்றுப் போய்விட்டன. இப்போது நாட்டுக்கு உள்ளேயே, கருத்துக்களையும், பிரச்சினைகளுக்குத் தீர்வுகளையும் தேடும் போக்கு பெருமளவுக்கு எழுந்துள்ளது.

ஆன்மீக, தேசீய எண்ணங்களை சுவாமி விவேகானந்தரும், மஹரிஷி தயானந்தரும், மஹரிஷி அரவிந்தரும், பிறரும் நம் முன் வைத்தனர். அந்த மரபில் இருந்து ஊக்கம் பெற்றுத் தான் நம் ஆன்மீக, சமுதாய, அரசியல், தேசீய இயக்கங்கள் உருவெடுத்துப் பரவின. அவை பாரத நாட்டிலும், உலக முன்னேற்றத்திலும் மாற்றுப் பார்வையை ஏற்படுத்தி நமக்குத் தரும் வாய்ப்புக்களைக் கொண்டவை. திறன்களைக் கொண்டவை. சுவாமி விவேகானந்தரின் 150-வது ஆண்டு விழா நமக்கு சக்தி மிகுந்த வாய்ப்பு ஒன்றை

அருளி உள்ளது. ஆன்மீகம், அறிவுத் துறை, சமுதாயம், அரசியல், தேசீயம் இவற்றில் நம் மந்தத்தனத்தையும், குழப்பத்தையும் விட்டொழிக்க இது நமக்கு நல்லதொரு வாய்ப்பு.

ஹிந்து தேசீய இளைஞர் சக்தியை ஒருங்கிணைக்க இது நமக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் உடைய வாய்ப்பு ஆகும். பாரதம் இளைஞர்களின் தேசம். நம் தொன்மையான நாகரீகத்தில் அதிக எண்ணிக்கையில் இளைஞர்களே உள்ளனர். இன்றைய பாரதத்தின் இளைஞர்கள் கல்வி அறிவும், நல்ல வேலையும், மனப்பூர்வமான நம்பிக்கைகளும் கொண்டுள்ளனர். நம் தேசத்தைப் பற்றி மேலும் மேலும் தெரிந்து கொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். பாமர மக்களுக்குச் சேவை புரிவது அவர்களுக்குப் பிடித்து இருக்கிறது. இந்த அழைப்புக்குப் பதில் குரல் கொடுக்க அவர்கள் ஆர்வத்துடன் முன் வருகிறார்கள். சுவாமி விவேகானந்தரின் கருத்துக்களை இளைஞர்களிடம் கொண்டு சேர்க்க அவருடைய 150–வது ஆண்டு விழா சரியான தருணம் ஆகும்.

மேலெழும் பாரதத்தின் முதல் தேவை என்ன? பலத்துடன் நல்லொழுக்கத்தையும் சேர்த்தே நிர்மாணிக்க வேண்டும். அப்போது தான் பூவுலகில் பாரதத்தால் தன் பணியை ஆற்ற முடியும். பாரதம் ஜகத்குருவாக எழுந்து திகழும் என்று சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். பலமும், உயிர்த்துடிப்பும் கொண்ட ஹிந்து பாரதமே உலக அமைதிக்கும், ஒற்றுமைக்கும் வழிகாட்ட முடியும். மனிதகுலத்தின் நன்மைக்கென பாரதம் மேலெழ வேண்டும் என்று ஆர்னால்டு டாயன்பியூம், வில்ட்யூரண்ட்டும் அறைகூவல் விடுத்துள்ளனர். பாரதம் ஜகத்குருவாக மேலெழ, தன்னை தயாரித்துக் கொள்ள வேண்டும். உலகத்திற்கு ஒளியூட்ட, தன் பொறுப்புக்களை உணர வேண்டும். தன் சக்திகளை உணரவேண்டும். இதற்கெல்லாம் பாரத நாட்டைத் தயார் செய்ய பொருத்தமான சந்தர்ப்பம் ஆகும்.

இக்கொண்டாட்டங்களின் நோக்கங்கள்: 1) அ) பாரதத்தின் உலகளாவிய உபதேசமாகிய ஒருமை, ஆ) பன்மையை மதித்துப் போற்றுதல், இ) ஆத்மாவின் அமரத்தன்மை ஆகியவற்றை சுவாமி விவேகானந்தரின் சொற்களின் மூலம் அதிகபட்சம் மக்களுக்கு எடுத்துரைத்தல்.

2) காரியகர்த்தா தொண்டர்களைத் திரட்டுதல்.

3) ஒரு அடி முன் எடுத்து வைத்து எங்கு அலட்சியம் இருக்கிறதோ, அங்கு நம் பணியை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கை உண்டாக்குதல், எங்கு நம் பணி ஏற்கப்படுகிறதோ, அங்கு பலத்தைச் சம்பாதித்துக் கொள்ளுதல், எங்கு நம் பணி பலமாக நடக்கிறதோ, அங்கு அதனை இன்னும் பயனுள்ளதாக மாற்றுதல், 4) இதுவரை நாம் செல்லாத பகுதிகளில் பணியைப் பரப்புதல்.

**ஒரு ஆண்டு முழுவதுமான கொண்டாட்டங்களின் மையக்கருத்து :** ஆகவே சுவாமி விகோனந்தரின் 150–வது பிறந்த நாளின் மையக் கருத்து மிகப்

பொருத்தமான முறையில் பெயரிடப்பட்டுள்ளது. **பாரதமே விழித்தெழு! உலகிற்கு ஒளியூட்டு! பாரத் ஜாகோ! விஸ்வ ஜகாவோ!!** அதற்கிணங்க **பஞ்சமுகி** என்னும் ஐந்து முகமுடைய பணித் திட்டங்கள், மக்கள் முன் பரிந்துரைக்கப்படுகின்றன. அவற்றை விவாதித்து லட்சியத்தை எட்டுவோமாக. சமுதாயத்தில் ஒற்றுமையை உண்டாக்கி இதன் ஐந்து பகுதிகளில் நாம் பணியாற்ற வேண்டும்.

**1) இளைஞர்கள் :** உறங்கிக் கிடக்கும் பெருமளவிலான இளைஞர் சக்தியை விழிப்புறச் செய்ய வேண்டும். நாற்பது வயதிற்குட்பட்ட மாணவர்கள், மாணவர் அல்லாத இளைஞர்கள் ஆகியோர் மீது நம் கவனத்தைக் குவிக்க வேண்டும்.

**2) சமுதாயத் தலைவர்களும், சிந்தனைத் துறைத் தலைவர்களும் :** நம்முடைய கற்றறிந்த அறிவு சார்ந்த பிரிவினரின் எண்ணப் போக்கை விவேகானந்தருக்கு அனுகூலமாக, உருவாக்க வேண்டும்.

**3) கிராம மக்கள் :** நம் சமுதாயத்தில் இருக்கும் கோடிக்கணக்கான சாதாரண மக்களின் தன்னம்பிக்கையை வலுவூட்டி உயர்த்த வேண்டும். குறிப்பாக கிராமவாசிகளின் பால் கவனம் செலுத்த வேண்டும். காலம் காலமாக நம் தேசத்தின் பலம் கிராமங்களில் தான் இருந்து வந்துள்ளது.

**4) மகளிர் :** வாழ்வின் எல்லாத் துறைகளிலும், மகளிரின் இடத்தையும், பணிப் பங்கையும் விரிவாக்குதல் வேண்டும்.

**5) ஜனஜாதிகள் :** எல்லாத் துறையினரின் உள்ளூர் நம்பிக்கைகளையும், பண்பாட்டையும் மதிக்க வேண்டும். சேமித்து வைக்க வேண்டும். பாதுகாக்க வேண்டும். வளர்த்தெடுக்க வேண்டும்.

**உடனடியாக நாம் செய்ய வேண்டிய பணிகள் :** 1) பொருத்தமான மனிதர்களைத் தேடி அவர்களை நம்முடன் இணைத்துக் கொள்ளவேண்டும். இதற்காக பெரும் எண்ணிக்கையில் இளைஞர்களை நாம் சென்றடைய வேண்டும். கல்லூரிப் போட்டிகள், சிங்கநாதம், வெல்க வெல்கவே போன்ற பணித் திட்டங்களைக் கேந்திரம் பல மாநிலங்களில் துவக்கி உள்ளது. வரும் ஒன்றரை ஆண்டுகளில் இந்தக் கோரிக்கையை ஆர்வமுள்ள இளைஞர்கள் பால் கொண்டு செல்ல வேண்டும்.

**2) ஸ்தாபனங்களின் பட்டியல் தயாரித்தல் :** இதற்கென முதலில் இரண்டு டைரக்டரிகளை (பெயர்த் தொகுப்புக்களை) தயாரிக்க வேண்டும். ஹிந்து ஆன்மீகத் தொண்டு நிறுவனங்கள் பாரதம் முழுவதிலும் சுவாமி விவேகானந்தரின் பெயர் தாங்கியுள்ள நிறுவனங்கள், அமைப்புக்கள் இவற்றின் பட்டியல் தயாரிக்க வேண்டும்.

3) சுவாமி விவேகானந்தர் நூல்களை அச்சிட்டு விற்க வேண்டும். பாரத நாட்டின் மொழிகள் பெரும்பாலானவற்றிலும், அன்னிய மொழிகளிலும் சுவாமி விவேகானந்தரின் முழு நூல் தொகுப்புக்கள் கிடைக்கின்றன. சுவாமி

விவேகானந்தரின் 150-வது ஆண்டு விழாவின் போது சுவாமிஜியைப் பற்றியும் அவர் கருத்துக்களைப் பற்றியும் இன்னும் பல நூல்கள் வெளிவர வேண்டும். தேசம் இன்றிருக்கும் நிலையை கருத்தில் கொண்டு இந்த நூல்கள் தயாரிக்கப்படவேண்டும். ஆகவே 150 பொருத்தமான தலைப்புக்களில் பாரதமே விழித்தெழு! உலகுக்கு ஒளியூட்டு! என்பது பற்றி நன்னூல்கள் உருவாக வேண்டும்.

## விவேகானந்தபுரத்தில் தங்கும் இடம்

1) குளிர்பதன வசதியுள்ள இரண்டு படுக்கைகள் கொண்ட இரண்டு அறைகள் உள்ள குடில் ஒரு நாளைக்கு ரூபாய் 2,000/-மும், 12.5% வரியும், கூடுதலாக ஒரு நபர் தங்க ஒரு நாளைக்கு ரூ. 200/-

2) குளிர்பதன வசதியுள்ள மூன்று படுக்கை அறை ஒரு நாளைக்கு ரூ. 800/-ம், 10% வரியும்.

3) குளிர்பதன வசதியுள்ள இரண்டு படுக்கை அறை ஒரு நாளைக்கு ரூ. 700/-ம், 10% வரியும், கூடுதலாக ஒரு நபர் தங்க ஒரு நாளைக்கு ரூ. 100/-

4) நான்கு படுக்கைகள் கொண்ட சொகுசு அறை ஒரு நாளைக்கு ரூ. 400/-ம், 5% வரியும்.

5) மூன்று படுக்கைகள் கொண்ட சொகுசு அறை ஒரு நாளைக்கு ரூ. 350/-ம், 5% வரியும்.
மேற்சொன்ன ஐந்து வகை அறைகளிலும் இண்டர்காம், வெந்நீர் வசதி உண்டு.

6) நான்கு படுக்கைகள் கொண்ட அறை ஒரு நாளைக்கு ரூ. 300/-ம், 5% வரியும்.

7) இரண்டு படுக்கைகள் கொண்ட அறை ஒரு நாளைக்கு ரூ. 250/-ம், 5% வரியும். அதிக நபருக்கு ரூ. 15/-.

8) ஒரு தனி நபர் தங்க ஒரு நாளைக்கு 250/-, 5% வரியும்.

9) நான்கு படுக்கைகள் கொண்ட அறை - இணைப்புக் கட்டிடத்தில் ஒரு நாளைக்கு ரூ. 200/-ம், 5% வரியும், கூடுதல் நபருக்கு ரூ. 10/-

**பொதுக் குளியலறையுடன் கூடிய தங்கும் அறைகள்**

1) மூன்று படுக்கைகள் கொண்ட அறை ஒரு நாளைக்கு ரூ. 45/-

2) புதிய ஹால், ஜமக்காளம், தலையணையுடன் ஒரு நாளைக்கு ரூ. 500/-ம், 5% வரியும்.

3) பெரிய ஹால் (படுக்கைகள் கிடையாது) ஒரு நாளைக்கு ரூ. 250/-ம், 5% வரியும்.

4) சிறிய ஹால் (படுக்கை வசதி கிடையாது) ஒரு நாளைக்கு ரூ. 150/-

5) எட்டு படுக்கைகள் கொண்ட ஹால் ஒரு நாளைக்கு ரூ. 120/-

6) ஆறு படுக்கைகள் கொண்ட ஹால் ஒரு நாளைக்கு ரூ. 100/-ம், கூடுதலாக ஒரு நபர் தங்க ஒரு நாளைக்கு ரூ. 5/-ம்.

7) ஒரு தனி நபர் படுக்க அலமாரி, பூட்டு வசதியுடன் கூடிய ஹால் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ. 15/-

**முன்பதிவு :** முப்பது நாட்களுக்கு முன் தகவல் கொடுங்கள். ஒரு நாள் வாடகையை பண அஞ்சல் மூலமோ, பணவிடை மூலமோ அனுப்பி வைத்து பதிவை உறுதி செய்து கொள்ளுங்கள். பதிவை ரத்து செய்ய 48 மணிநேர முன் அறிவிப்புக் கொடுங்கள். இல்லாவிட்டால் வைப்புத் தொகையை இழக்க நேரிடும். **விவேகானந்த கேந்திரம்** என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் எடுக்க வேண்டும். ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, விவேகானந்தபுரம், கிளை கோடு எண் : 3

80 என்ற பெயரில் எடுக்கவும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

**தங்குவதை நீட்டித்தல் :** ஒரு தடவையில் அதிகம் மூன்று நாள் தங்கலாம். அதிக நாள் தங்க விரும்பினால் வளாகப் பொறுப்பாளரை அணுகவும். இடம் இருந்தால் அவர் உதவி செய்வார். அறைக்கு வந்ததில் இருந்து 24 மணி நேரம் ஒரு நாளாகக் கருதப்படும். முன் பதிவாளர்களுக்கு பகல் 12 மணியில் இருந்து.

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: -**

**வளாகப் பொறுப்பாளர், விவேகானந்த கேந்திரம், விவேகானந்தபுரம், கன்னியாகுமரி - 629 702, தொலைபேசி : (04652) - 246250, பேக்ஸ் : (04652) - 247177, ஈமெயில் : rooms@vkendra.org**

Printed by : Shri. Pravin V. Dabholkar at M/s RNR Printers and Publishers, 8, Thandavarayan Street, Triplicane, Chennai - 600 005.

Published by : Shri. Pravin V. Dabholkar for Vivekananda Kendra Prakashan Trust, 5, Singarachari Street, Triplicane, Chennai - 600 005.

Editor : Shri. P. Parameshwaran, President, Vivekananda Kendra, Vivekanandapuram, Kanyakumari - 629 702.

**இரண்டாவது அட்டை**

1) அருண்ஜோதி தொண்டர்கள் மூங்கில் குழாய்க்குள் பிரசாதம் அடைத்தல்

2) அருண்ஜோதியில் விளையாட்டு – அருணாச்சல்

3) போர்டும்ஷா ஆனந்தாலயம் அருண்ஜோதி

4) அருண்ஜோதி கர்பி பவுண்டேஷன் நாடகம்

5) இலவச அறுவைச் சிகிச்சை

6) புத்தக விற்பனை

7) பாரம்பரிய நிஷி கோவில்

8) தவாங் பள்ளி விண்ணில் இருந்து ஒரு பார்வை

**மூன்றாவது அட்டை**

1) பங்களூரு சமர்த்த பாரதப் பருவம்

2) கள்ளுபாலுவில் ஏழைகளுக்குப் போர்வை வழங்குதல்

3) கள்ளுபாலுவில் பிள்ளையார் சதுர்த்தி

4) மதுரையில் குருபூர்ணிமா

5) மதுரையில் விவேகானந்தர் பிறந்த நாள்

6) குடும்பகத்தில் மதுரையில் நிவேதிதா தீதி பேசுகிறார்

7) விவேகானந்த வேத தரிசன மையத்தில் கொடுங்கல்லூர் கிருஷ்ணர் பிறந்த நாள் விழா

8) மதுரை வெல்க வெல்கவே

**பின் அட்டை**

1) இராமேஸ்வரத்தில் கிராம முன்னேற்றத் திட்ட தீப பூஜை

2) கிராம முன்னேற்றத் திட்ட தமிழக கலை நிகழ்ச்சி

3) கல்லூரி மாணவர் மறுதொடர்பு முகாமில் ஸ்ரீ பரமேஸ்வரன்ஜி உரையாற்றுகிறார்

4) கிராம முன்னேற்றத் திட்ட நிகழ்ச்சியில் ஸ்ரீ கோபால்ஜி

5) விவேகானந்தர் தாயகம் திரும்பிய விழா பரமக்குடி ஊர்வலம்

6) கிராம முன்னேற்றத் திட்ட நிகழ்ச்சியில் ஸ்ரீ பிரவீண்ஜி

7) தொண்டர் பயிற்சி முகாமில் ஸ்ரீ பாலகிருஷ்ணன்ஜி விவேகானந்த மண்டபத்தில் உரையாற்றுகிறார்

8) குமாரி அனின்ஜியு மேரியத்திற்கு விவேகானந்த கேந்திர பண்பாட்டுக் கழக விருது வழங்கும் நிகழ்ச்சி

9) மத்திய பிராந்திய சொற்பொழிவு வரிசையில் டாக்டர் சுப்பிரமணிய சுவாமி

10) கள்ளுபாலுவில் பள்ளி வகுப்பறை துவக்க விழா

11) புணேயில் சகோதரி நிவேதிதை நூற்றாண்டு விழா

12) புவனேஸ்வர் கிளையில் பண்பாட்டு யோக பிராந்திய மைய அடிக்கல் நாட்டு விழா

13) கேந்திர துணைத் தலைவர் ஸ்ரீ பாலகிருஷ்ணன்ஜி தொண்டர்களுக்கு உரையாற்றுதல்